

# திரைகட்டிய கப்பல்

பூவை - எஸ். ஆறுமுகம்

**வாசு பிரசுரம்**

38, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை.

சென்னை-14.

த.பெ.எண்: 659 • போன் எண்: 88630.

வெளியீடு எண் : 126
முதற்பதிப்பு: நவம்பர், 1968.

சகல உரிமைகளும் பெற்றது.

விலை ரூ. 3-00

## படையல் :

குழந்தையாக அவதரித்து, தெய்வமாக ஆகிவிட்ட என்னுடைய இளைய புதல்வன் நடராஜனின் அமர நினைவுக்கு இந்நூலைக் காணிக்கையாகப் படைத்து ஆறுதல் பெற முயல்கிறேன்.

—'பூவை'

அச்சிட்டோர்: சத்யா அச்சகம், சென்னை-14.

# நன்றிப் படையல்

பட்டப்படிப்பு முடிந்தவுடன், 'இந்தியன் பாங்க்' நிறுவனத்தின் கிளை ஒன்றிலே பணிபுரிந்திருக்க வேண்டிய நான், இலக்கியத்தின்பால் ஏற்பட்ட ஆர்வத்துடிப்பு காரணமாக— அல்ல, ஆர்வவெறி காரணமாக, நானே என் பாதையைத் திசை திருப்பிக்கொள்ள வேண்டியவன் ஆனேன். எல்லாம் நன்மைக்கே என்ற தன்னம்பிக்கைச் சித்தாந்தம் என்னுடைய இலக்கியப் பணிகளை ஊக்கப்படுத்திக்கொண்டு வருவதாகவே கருதுகிறேன் நான். அத்தகைய கருத்துக்குப் பயனூட்டும் மற்றுமோர் ஆறுதலாக, இலக்கியப் பின்பலம் கொண்ட என்னுடைய இந்த நகைச்சுவை நூல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாசு பிரசுரத்தினர் மிகவும் அழகாக வெளியிட்டிருக்கிறார்கள்.

நகைச்சுவை இலக்கியத்துறையில் துறைபோனவர்களாக திருவாளர்கள் கல்கி, நாடோடி, சாவி, சுகி சுந்தா, துமிலன், மகரம் போன்றோர்கள் கருதப்படுவார்கள். இக்குழுவில் 'பூவை'க்கும் ஓர் இடம் கிடைக்க இந்நூல் உதவக்கூடும். அவ்வப்போது 'உமா', 'கல்கி', 'ஆனந்த விகடன்', 'விந்தியா', 'சுதேசமித்திரன்' போன்ற ஏடுகளுக்காக எழுதப்பட்ட கட்டுரைகளும், சென்னை வானொலிக்காகத் தயாரிக்கப்பட்ட பேச்சுக்களும் இப்புத்தகத்தின் உள்ளுறையாக அமைந்துள்ளது.

கொஞ்சகால நடுவெளிக்குப் பின்னே, 1966, ஏப்ரல் 14ஆம் நாளில் தமிழக அரசு தமிழ் இலக்கியத்தில் சிறந்த 11 நூல்களுக்குப் பரிசளித்து ஊக்கப்படுத்தியது. 'பூவையின் கதைகள்' என்ற நூலும் அவற்றுள் ஒன்று. அப்பணி மீண்டும் தொடரவேண்டும். எழுத்துத் துறையினரில் பெரும்பாலோர் இப்போது தமிழக அரசுக்கு உயிர்ப்பாக இயங்கி வருகின்றனர். அதனால்தான், இவ்வேண்டுகோளைத் தெரிவிக்க இவ்வாய்ப்பினைப் பயன்படுத்த வேண்டியவன் ஆனேன். அப்போதுதானே, இலக்கியத்தின் நல்வாழ்வுக்கும் பெருவளப்பத்துக்கும் ஒரு மலர்ச்சி கிட்ட முடியும்!

பதிப்பகத்தினரும் நானும் நன்றிப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் கட்டத்தைக் கடந்தவர்கள். ஆனால், இலக்கிய ஆர்வலர்களாகிய உங்களை நான் நன்றிச் சுரப்புடன் நினைக்காமல் இருப்பேனா?


**வணக்கம்.**

பூவைமாநகர்,
அக்டோபர், 1968.

**பூவை-எஸ். ஆறுமுகம்**

## இதனுள்ளே....


| | | | |
|---|---|---|---|
| 1. | தரை தட்டிய கப்பல்! | ... | 5 |
| 2. | தோள் கண்டார் தோளே கண்டார்! | ... | 14 |
| 3. | கரும்புப் பொங்கல்! | ... | 20 |
| 4. | வைகறைத் துயிலெழு! | ... | 27 |
| 5. | திருமண அழைப்பு! | ... | 37 |
| 6. | முள்! | ... | 48 |
| 7. | காதற்ற ஊசியும்...! | ... | 52 |
| 8. | காக்கை குருவி எங்கள் ஜாதி! | ... | 58 |
| 9. | ஊஹூம் சிரிக்காதே! | ... | 64 |
| 10. | குப்பைக்கு ஒரு கும்பிடு! | ... | 77 |
| 11. | டாக்டர் கொக்கரக்கோ! | ... | 86 |
| 12. | இப்படியும் சில தர்மசங்கடங்கள்! | ... | 93 |
| 13. | நடமாடும் தெய்வங்கள்! | | |
| | (1) திருவாளர் 144! | ... | 102 |
| | (2) வாழ்க்கை ஒரு காலிபுரூப்! | ... | 104 |
| | (3) அசல் பிர்மா அல்ல! | ... | 106 |
| | (4) பாதி அரையணு எங்கே? | ... | 108 |
| | (5) ஓரம், ஓரம்! | ... | 111 |
| | (6) பிரம்பே நீ வாழ்க! | ... | 113 |
| | (7) ''சார், போஸ்ட்!'' | ... | 115 |
| 14. | அபாய அறிவிப்புக்கு ஜே! | ... | 120 |
| 15. | கல்லும் சொல்லாதோ? | ... | 136 |
| 16. | ''ஸார், மணி என்ன?'' | ... | 145 |
| 17. | பெயரில் எல்லாம் இருக்கிறது! | ... | 153 |
| 18. | ''வாழ்க, வாழ்க!'' | ... | 160 |



# தரைதட்டிய கப்பல்

சமீபத்தில் நடந்த பதினான்காவது எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்னை சென்ற நான் முதல் அலுவலாக இரும்புப் பாலத்தை அடைந்தேன். இரும்புப் பாலத்தின் அருகிலே தரை தட்டி நின்ற அந்த அயல் நாட்டுக் கப்பல் மீண்டும் அடித்த புயலின் விளைவாகத் திசை திரும்பி கரைக்கு இன்னும் அருகே வந்து கம்பீரமாக நின்ற அதிசயத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் களித்தேன். கன்னத்தில் கைகளை வைத்தபடி, அந்தக் கப்பல்காரர்களுக்கு என் செய்கை வியப்பூட்டியிருக்கக் கூடும். ''கப்பல் கவிழவில்லையே? இந்த ஆள் ஏன் இப்படிக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருக்கிறார்?''

என்று அவர்கள் நினைத்திருப்பார்கள். ஆனால், இப்படிப்பட்ட அதிசயம் மீண்டும் எங்கே நிகழப் போகிறது என்கிற ஆச்சரியத்தில் நான் அந்த அதிசயமான அழகைப் பார்த்து ரசித்த உண்மையை அவர்கள் எவ்விதம் உணர முடியும்? கப்பல் இப்படி வந்து ''அழுச்சாட்டியமாக'' நின்று தொலைத்து விட்டதே யென்று கப்பல்காரர்களுக்குக் கவலை ஏற்பட்டிருப்பது சகஜம்தானே?

வங்கக் கடலுக்கும் தமிழகப் புயலுக்கும் இருந்துவரும் சொந்தம் வரலாற்றுப் புகழ் கொண்டது. சென்ற மாதத்தின் புயலின் கொடுமையையும் செய்தித் தாள்கள் மறந்துவிட முடியாது. புயலிடைத் தத்தளித்த ஜனங்களையும் சாமான்களையும் கண்டு தத்தளித்து உருகிய பொது ஜனங்களையும் வரலாறு நினைவிற் கொள்ளும்.

ஏற்கெனவே விரிசல் கண்டிருந்த ஒரு கப்பலை இப்போது வீசிய புயல் இரண்டாகப் பிளந்து கோட்டைக்கு எதிரே ஒரு கண்காட்சியையே அமைத்துவிட்டது. இந்தப் பிளவுக் கப்பலையும் தரை தட்டிய அந்தக் கப்பலையும் காண ஜனங்கள் ரசிகத்தன்மையுடனும் அனுதாப உணர்வுடனும் வந்து குழுமுவதைக் கண்டு, ஒரு சின்ன பர்மாபஜார்கூட உருவாகிவிட்டதென்றால், இக் கண்கொள்ளாக் காட்சிக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மகத்துவத்தை என்னவென்று சொல்வது?

புயலுக்கு இலக்கான கப்பல்கள் பின்வருமாறு :

1. மாரிஹோரா, 2. புரோக்ரஸ்
3. ஸ்டாரமாடிஸ்
4. ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான்!...

''திரைகடலோடியும் திரவியம் தேடு!'' என்று சொல்லியிருக்கிறாள் ஔவைப் பாட்டி. கடலில் ஓடிவிடச் சொல்லவில்லை மூதாட்டி. கப்பலில்தான் போகச் சொன்னாள். பாய்மரக் கப்பல் தொடங்கி வைக்க கடல் வாணியம் கப்பல் வரைக்கும் வளர்ந்து, இப்போது நீர் மூழ்கிக் கப்பல் அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது. கடலுக்கும் தமிழகத்துக்கும் தொன்றுதொட்டுத் தொடர்பு இருந்து வந்திருப்பதற்குச் சரித்திரம் சான்று பகரும். சுமத்திரா, ஜாவா போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று நம் பண்டைத் தமிழர்கள் வியாபாரம் செய்தார்கள். சிலப்பதிகாரத் தலைவன் கோவலனும் கப்பலில் சென்று பொருளீட்டியதை நாம் படங்களில் பார்த்திருக்கிறோம். பர்மா, இலங்கை முதலிய இடங்களுக்குக் கப்பல் பயணம் செய்து பணக்காரர்களாகத் திரும்பிய கதையும் இப்போது பழங்கதையாகிவிட்டதே!

கப்பல் போய்விடும்; ஆனால் கரை தங்கிவிடும்! —இது பழமொழி, சொன்ன சொல் நிலைத்து நிற்கும் என்பதற்கு அழுத்தம் ஊட்ட எழுந்த பழமொழி இது.

''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று சொல்லிவிட்டார் ஷேக்ஸ்பியர். ஆனால், பெயரில் எல்லாம்தான் இருக்கிறது. இல்லையென்றால், கப்பல்

களுக்குப் பெயர் வைப்பார்களா, எஸ். எஸ். ஜலகோபால், எஸ். எஸ். ஜலமோகினி என்று! நான்கூட ''எஸ். எஸ். ஊர்வசி'' என்ெருரு நாவலை எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்தக் கப்பல்கதை ரொம்பவும் பிரமாதமாக இருக்கும்! தயவு செய்து இந்தத் துப்பை நம் பதிப்பாளர்கள் காதில் போட்டு விடாதீர்கள். கப்பலை வைத்துக் கொண்டு இந்தக் கதையை எழுதப்போக, ஒரு சுறுமீன் என்னைத் துரத்திய உண்மை அவர்களுக்கு என்ன தெரியும்? கப்பல்கதை என்ருல், கேவலம் ஒரு கப்பல் பணமாவது தர வேண்டாமோ?

விசாகப் பட்டினத்திலும் நாம் கப்பல் கட்டிக் கொண்டிருக்கிருேம். நமக்கு இது ஒரு பெரிய பெருமைதான்! இந்தியக் கடற் படையின் வரலாறு சரித்திரப் பிரசித்தமானது. தூத்துக்குடியில் முதல் சுதேசிக் கப்பலைக் கட்டி மிதக்க விட்ட கப்ப லோட்டிய தமிழனை இன்று நாம் மறக்காமலிருப் பது மாதிரியே, அன்று வெள்ளைக்காரர்களும் மறக்காமல் இருந்தார்கள்!

மேலைநாட்டு நாகரிகப்படி ''டிப்டாப்'' பாக உடுத்துக் கொண்டிருந்தால், அவர்களைப் பார்த்து, ''என்ன ஸார், இப்போதுதான் ஓட்டைக் கப்பலில் வந்து இறங்கினீர்களாக்கும்?'' என்று நையாண்டி செய்வதும் உண்டு. ஓட்டைக் கப்பலில் வரும் சாகஸம் அந்தப் புண்ணியாத்மாக்களுக்குத்தான் தெரியும் போலும்!

விண்வெளியில் மணி பார்த்து நடக்கத் தொடங்கிவிட்ட காலம் இது!

ஆனால், எனக்குக் கப்பல் கூடச் செய்து பழக்கம் கிடையாது. என்றாலும் உங்களிடம் ஓர் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். காகிதக் கப்பல்களை எத்தனை குரோஸ் வேண்டுமானாலும் செய்து தருவேன், சினிமாக்காரர்களும் ''ஆர்டர்'' தரலாம். இப்போதுதான் எந்தக் கப்பலாக இருந்தாலும் சினிமாவில் ஒரு மவுஸ் பிறந்திருக்கிறதே! ''பறவைக் கப்பல்'' என்று பட்டிக்காட்டில் ஒரு கப்பல் உண்டு. அது என்ன தெரியுமா? அதுதான் ஏரோப்ளேன்!

உலகத்திலேயே மிகப் பெரிய இயற்கைத் துறைமுகம் சென்னைத் துறைமுகம் தானாமே! சரிதானே? அந்நாளில் சரித்திரப் புகழ் கொண்ட மன்னர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கடற்கரையும் கை கொடுத்து வந்திருக்கிறதல்லவா?

சாதாரணமான அளவைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதலாகக் கஷ்டப்பட்டால், உடனே அந்த நபரை திசை தெரியாமல் நடுக்கடலிலே தத்தளிக்கும் கப்பலுக்கு உவமை காட்டி எழுது வார்கள் எங்கள் தோழர்கள். திசை தெரியாமல் ஏன் கப்பல் தத்தளிக்க வேண்டும்? அதற்குத்தான் திசை சொல்ல கடற்கரைச் சுழல் விளக்கும் உள்ளனவே?

சிந்த்பாத், கலிவர் போன்ற மேலை நாட்டு வீரர்களின் சாகஸங்களுக்கு இந்தக் கப்பல்களும்

துணை நின்றிருக்கின்றன என்பதை சிறுவர் உலகம் மறக்க முடியுமா, என்ன?

மனிதர்களுக்குத்தான் ''கால்கட்டு'' போடுவதென்றில்லை. கப்பல்களுக்கும் கால்கட்டு'' போடுவார்கள். இதற்குப் பெயர்தான் ''நங்கூரம் பாய்ச்சல்'' என்பது.

கப்பல் சண்டைகளைப் பற்றிப் பார்த்திருக்கிறேன்; படித்திருக்கிறேன். ஆனால் இதுவரை எழுதியதில்லை. இப்போது எழுத ஆசை ஓடுகிறது. ஆகவே நேயர்களுக்குத் தெரிந்த கப்பல் சண்டைகள் ஏதாவது எங்காகிலும் நடந்தால், எனக்குத் தயைசெய்து சேதி சொல்லி அனுப்ப வேண்டும்!

கப்பலில் பயணப்படுபவர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்: கடல் பிராணிகள் தாம் காப்பாற்ற வேண்டும். கடலோடு கடலாக நய வஞ்சகமாய் மறைந்திருக்கும் திட்டுக்கள் தாம் காப்பாற்ற வேண்டும். எங்களூரில் பெரிய பணக்காரி அஞ்சுகத்தம்மாள். அவளைப் பார்த்து எங்கள் பெண்டுகள், ''ஓனக்கென்னடி ஆத்தா! கடலைப் போல வூடும் கப்பலைப் போல சொத்தும் இருக்கு!'' என்பார்கள். ஆனால் ஓர் ரகசியம் என்னவென்றால், அந்த அம்மணிக்கு இவ்வுவமையில் ஏகப்பட்ட குதூகலம் பீறிட்டுக் கிளம்பிவிடும். ஓர் உண்மை என்னவெனில், அந்த அம்மாள் நாளது பரியந்தம் ஒரு கடலையோ, அல்லது ஒரு கப்பலையோ தரிசித்ததில்லை!

சில வழக்கு மொழிகள்.

1. ''கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக் காரி? கப்பல் உடைந்தால் அவள் பிச்சைக்காரி!''

2. ''கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு!''

3. ''கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்று விடியும்?''

கப்பல் கவிழ்ந்தாலும் நிலை கலங்காத மனத் திடம் தேவை என்பார்கள். ''தேவை'' விளம்பரத் தில் சொல்லிவிட்டார்கள். கப்பல் கவிழ்ந்தால் நமக்கென்ன? நமக்கு ஏது ஐயா கப்பல்?

ஜப்பான் நாட்டின் அதியுன்னத வளர்ச்சியைச் செப்பும் வகையில் கப்பலிலேயே ஒரு கண்காட் சியை அமைத்து அக் கப்பலை நாடு நாடாகச் செலுத் திக் காண்பித்த செய்தியைச் சென்ற ஆண்டு கண்டு களித்தது.

கப்பலைப் பற்றி வேறு என்ன எழுதுவது என்று தலையைத் தடவிப் பார்த்தேன். அப்போது தலையில் ஒரு தழும்புதான் தட்டுப்பட்டது. கப்பலுக்கு நான் அமைத்த அல்ல, என் வாத்தியார் அமைத்த தாஜ் மஹால் அது. விஷயம் என்ன தெரியுமா? ''கப்பல்'' என்று என்னை எழுதச் சொன்னார் குரு. நானோ ''கப்பள்'' என்று எழுதினேன். கப்பல் மிக அழுத் தம் என்று சொன்னது மட்டும் என் மூளையில் அழுத்தமாகப் பதிந்திருந்தது. அதனால்தான் ''ள்''

போட்டேன். ''ள்'' எனும் எழுத்துக்கு அழுத்தம் மிகுதியல்லவா? அதற்குக் கிடைத்த நினைவுச் சின்னமே மேற்படி தழும்பு. இப்போதும்கூட, கப்பல் என்று எழுதினால், ''ள்''தான் விழுகிறது. ஆனாலும் ''ள்''ளை ''ல்'' ஆகத் திருத்தி விளம்பி விடுவதுதான் எனக்குப் பழக்கம். இதைக் கண்டு, இன்னும்கூட என் அகிலாண்டம் என்னைக் கேலி செய்கிறாள்!

''அப்பா, அப்பா, புகைக்கும் ஆனை என்ன, சொல்லேன்!'' என்றான் என் பையன்.

எனக்குப் புரியவில்லை.

''அது கப்பலாக்கும்!''

எனக்குப் புரிகிறது, இப்போது.

என் பிள்ளைக்காக நான் பாடிய பாட்டு இது. ''ட்யூன்'' போட்டுப் படியுங்கள்.

**"கப்பல் நல்ல கப்பல்; கண்மயக்கும் கப்பல்;**
**கப்பல் கண் விழித்தால், கரையைக் காட்டும் கப்பல்!"**

உணவுப் பற்றாக்குறை இன்னமும் நம் தாய்த் திருநாட்டை ஆட்டிப் படைத்துச் சோதித்து வரும் இந்நேரத்தில் கப்பல் கப்பலாக உணவுத் தான்யங்கள் அயல்நாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. உணவுக் கப்பல்களைச் செய்திச் சுருள்களிலே நாம் காணும்பொழுது மெய்யாகவே அக் கப்பல்களைக் கையெடுத்துக் கும்பிட நமக்குத் தோன்றுவது இயல்பேயன்றோ!

வெள்ளையர்களைக் கப்பல் ஏற்றி அனுப்பு முன்னம் நம் தேசீய மகாகவி பாடினர்.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம், அடி
மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்!"


வாழ்க்கையை அலையெறிகடலுக்கு ஒப்பிட்டுச் சொல்வது மரபு.

இதே வாழ்க்கையைக் கப்பலுக்கும் ஒப்பிட்டுச் சொல்லலாம்.

கப்பல் பயணம் எவ்வளவு பயம் செறிந்ததாக இருந்தாலும், கப்பல் பயணம் வெற்றி பெற்றுவிட்டால் அது மகிழத்தக்கதொரு சாதனையே அல்லவா? அதுபோலத்தான் இம் மண் வாழ்வும்!

இல்லையா?

ஆகவே, கப்பலுக்கு வாழ்த்துக் கூறுகின்றேன்!



# தோள்கண்டார் தோளேகண்டார்!

தபால்காரன் எப்போது வருவான் என்று ஆவலோடு நான் காத்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் பார்த்து என்னுடைய இடது தோள் துடித்தது. இடது தோள் துடிப்பது நல்லதா, கெட்டதா என்ற பயம் எனக்கு வந்துவிட்டது. நல்ல வேளையாக, எப்போதோ கேட்ட சினிமாப் பாட்டு ஒன்று ஞாபகத்திற்கு வரவே, இடது தோள் துடித்தால் இன்பம் என்று தீர்மானித்து, ஆனந்தப்பட்டேன்.

என் நம்பிக்கை வீண்போகவில்லை. தீபாவளிக்கு என்னை அழைத்துப்போக என் அத்தான் பட்டணத்திலிருந்து 'பறந்து' வருவதாக எழுதியிருந்தார். முன்கூட்டியே, சூசகமாக நல்ல சேதியைத் தெரிவித்த என்னுடைய இடது தோளுக்கு மாத்திரம் மானஸீகமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்!

யோசித்து யோசித்துப் பார்த்தேன். கண், மூக்கு, நாக்கு, வாய், கை, கால், விரல்—இப்படி ஒன்றையும் பாக்கி வைக்காமல் எழுதிவிட்டார்கள் கட்டுரையாசிரியர்கள். ஆனால், பாவம் இந்தத் தோள்களை மாத்திரம் ஏனோ மறந்து விட்டார்கள்!

அந்த நாளில் என்னுடைய தோழி ஒருத்தியின் கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அப்பொழுது, 'தோள் தூக்க மாமா எங்கே?...சீக்கிரம் வரச் சொல்லுங்கள்?' என்றார்கள். சற்று நேரங்கழித்து ஈர்க்குச்சி போன்ற ஒரு மனிதர் வந்தார். தோள் வலி—அதாவது தோள் பலம் அவருக்கு இருக்க முடியாது. ஆனால் 'தோள் வலி' நிச்சயம் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும்! ஏன் தெரியுமா? அந்த மணப் பெண்ணைத் தன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டார். பிறகு பெண் தன் கழுத்திலுள்ள மாலையை மாப்பிள்ளை கழுத்திலும், மாப்பிள்ளை தன்•மாலையைப் பெண் கழுத்திலுமாகப் போட்டுக் கொண்டார்கள். திருமணச் சடங்குகளிலே தோள் அறிமுகப்படுத்தப்படும் அழகை வர்ணிக்க ஓராயிரம் போட்டோப் படங்கள்தாம் தயை புரியவேண்டும்!

கோயில் திருவிழாக்களிலே, பல்லக்கில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாம் வல்ல ஸ்வாமியைத் தோளில் தூக்கிக் கொண்டு ஊர்வலம் வரும்போது, 'சற்று பொறுமேங்காணும்! தோளை மாற்றிக்கறேன்!' என்ற கூச்சல்களையும், 'தோள் போட வாருங்கள்!' என்ற வரவேற்புகளையும் நீங்களெல்லாம் கட்டாயம் கேட்டிருப்பீர்களே!

கிராமங்களில் இருப்பவர்கள் தம் குழந்தை குட்டிகளைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு 'விர்விர்' என்று நடந்து சென்று மகிழ்வார்கள். அதே குழந்தைகள் பெரியவர்களாக மாறியதும். பெற்றோர்களுக்கு அடங்காமல் அடம் செய்யும்போது, 'தோளுக்கு மேல் தோழன்!' என்ற வாசகத்தையும் மறந்துவிட மாட்டார்கள்!

'தோளில் ஆட்டைப் போட்டுக் கொண்டே தேடுகிருயே!' என்னும் பழமொழி பழைய நாளிலும் சரி, புதிய நாளிலும் சரி, மௌஸ் குறையாமல் போற்றப்பட்டு வருகின்றது.

மனிதனுடைய பலம் முழுதும் 'ரிஸர்வ்' செய்யப்பட்டுள்ள இடம் தோள் என்பது பொய்யாக இருக்க முடியாது. அதற்காகத்தான் தோள் வலிமிக்க போர் வீரர்கள் வெற்றியடைந்தவுடன், அவர்களுக்குரிய பரிசுகளைத் தோள்களிலேயே அணிவிக்கிறார்களோ, என்னவோ? போலீஸ், இராணுவ உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதவிகளைப் பறையறிவிக்க எண்ணி, பதவி பட்டங்களைத் தோள்களிலேயே ஆடம்பரமாக அணிந்து கொள்கின்றனர்!

கணவன்மார்களின் வரவுக்காகக் காத்திருக்கும் பட்டணத்துப் பெண்கள் தங்கள் தோள்கள்மீது ஏதாவது ஸ்பரிசம் பட்டால், உடனே அது தங்களுடைய உரிமையாளர்கள் என்பதை யூகித்துக் கொள்வார்கள். அதே பெண்டிர், தம் புருஷன் ஏதாவது புடவை வாங்கித்தர மறுத்துவிட்டால் தங்களுடைய முகவாய்க்கட்டையைத் தோளில்

இடித்துத் தங்கள் 'அறப்போர்' திட்டத்தைத் தெரிவிக்கவும் தவறமாட்டார்கள்.

கதாசிரியர்கள் கிராமியக் கதைகளை எழுத நினைத்தால், உடனேயே அவர்களுக்கு ஒரு மாணிக்கத் தேவரின் தோள் கனமும், பரப்பளவு—சுற்றளவும்தான் நினைவுக்கு வரும். பட்டணத்துக் கதைகளிலே ஒரு மைனருக்கு தோளில் பாம்புபோல நெளியும் ஜரிகைத் துப்பட்டா இல்லாமல் இருக்க முடியுமா? தோளுக்குத் தோளாகப் பழகிய ஒரு கோவிந்தனும் ஒரு கோபாலனும் கடைசியில் தோள் தட்டி, மார் தட்டி குஸ்தி போடாமல் எந்தக் கதையாவது 'டெம்போ' பெறுவதை நீங்கள் பார்த்ததுண்டா. கதையில் வரும் கதாநாயகனுக்கு அவனது தோளைத் தட்டிக் கூப்பிட்டால்தான் சுய நினைவு வரமுடியும்! சரித்திரக் கற்பனை என்றால், கதாநாயக ராஜாவுக்கு ஒரு 'ஜே'யும் இரண்டு பராக்குப் போடுவதற்கு முன்பு, அவனுடைய தோளை அலங்கரித்திருக்கும் அணி வகைகளை வர்ணிக்கும் அழகே அலாதியானதாகும்!

'தோள் விடு தூது!' என்ற தலைப்பில் ஒருவர் கதை எழுதியனுப்ப அது 'தேள் விடு தூது' ஆக அச்சுவாகனம் ஏறிய விந்தையும் தோளுக்குப் புகழ் தேடித் தருகின்ற ஓர் அதிசய நிகழ்ச்சியன்றோ?

பரிசல் பெற வரும் கவிகள் அந்நாளில் அரசர்களது தோள்களைப்பற்றி முதலில் வர்ணித்துவிட்டுத்தான் மறு ஜோலி பார்ப்பார்கள்; அரசர்கள் க்ஷத்திரியர்கள், பாருங்கள்—அதற்காகத்தான்!

நீங்கள் பார்த்திருப்பீர்கள்—பெண்கள் தண்ணீர்க் குடங்களை இடுப்பில் சுமந்து வருவார்கள். ஆனால், ஆண்களோ தண்ணீர்க் குடங்களைத் தாங்கி வரும் 'தலையெழுத்து' ஏற்படுங்கால், அப்பொழுது அவர்களுக்கு கை கொடுத்து உதவுவது இந்தத் தோள்களேதாம்! 'அப்பப்பா! தோள்பட்டை கழன்றுவிட்டதே!' என்ற அபய ஒலம் அவர்கள் வீடு வந்ததும் தன்னாலே தேய்ந்துவிடும் 'சிதம்பர ரகசியம்' அந்தத் தோளுக்கு மாத்திரம்தான் அர்ப்பணம். ஆண்களைப் பொறுத்தமட்டில், அவர்களது வலது தோள் துடித்தால்தான் அதிருஷ்டமாம்!... இடது தோள்கள் 'இஞ்செக்ஷன்'களுக்குச் சமர்ப்பணமாக இருக்கட்டுமே! குடும்ப பாரத்திற்குச் 'சுமைதாங்கி'யும் இந்தத் தோள்களேதானும்!—யார் இட்ட சாபமோ?

ஸ்ரீமந் ராமபிரானை நாமெல்லோரும் கண் குளிரக் கண்டு களித்திருக்கிறோம்—படங்களிலே? தோளிலே அம்பராத் தூணியும், கையில் வில்லுமாகக் காட்சியளிக்கும் அழகுக்கு ஈடேது, இணை ஏது? அவரது தோள்கள் இலக்கியப் பிரசித்தி பெறுமளவுக்குப் பலமும், அழகும் பெற்றிருந்தனவாம்! 'தோள் கண்டார், தோளே கண்டார்!' என்ற தேன் சொட்டும் கவிதை வரிகளை யார்தாம் ரசிக்காமல் இருக்க முடியும்? அவரது 'விற்பெருந் தடந்தோள்' போற்றப்படாத நா என்ன நா?

'மணிமலைப் பணைத்தோள்' என்றும், 'வானகத் தோள்' என்றும், 'வீங்கிரு தோள் வீரன்' என்றும்,

'குன்றினும் உயர்ந்த தோளான்' என்றும் தோளின் புகழ் பாடுகின்றனர் தத்தனும், கம்பரும்!

இனி பாரதியாருக்கு வருவோம்; பாரத தேசத்தின் பெருமைகளைப் பாடிய கவிஞர் 'எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்' என்று முடிக்கின்றார். 'வலிமையற்ற தோளினாய் போ, போ'' என்று போகின்ற பாரதத்தைச் சபிக்கும் அதே புரட்சிக் கவி, 'கடுமை கொண்ட தோளினாய் வா, வா' என்று வருகின்ற பாரதத்திற்கு வாழ்த்துக் கூறவும் தயாராயிருக்கின்றார்! இது மட்டுந்தானா? 'நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்!' என்றும் அல்லவா ஓம் சக்திக்கு அஞ்சலி செலுத்துகிறார்!

'ஆறிரண்டு தோளான்' என்பது ஆறுமுகனுக்கு ஒரு காரணப் பெயர்.

தன் தோழி தலைவனது பிரிவை உணர்த்திய காலை, அவள் குறிப்பாகச் செய்த செய்கையைப் பாடும்போது 'வான்மறை' கூறும் வரிகள்:

"தொடி நோக்கி மென்றோளும் நோக்கி அடி நோக்கி அஃதாண்டவள் செய்தது."

அடடே, தோளைப்பற்றிச் சொல்ல இத்தனை விஷயங்கள் கிடைத்து விட்டனவே! தோளே, நீ சிரஞ்சீவியாக வாழக் கடவாயாக?



# கரும்புப் பொங்கல்

தர்மத்தையும் சத்தியத்தையும் சோதித்துப் பார்க்க முனைந்தார்கள் நம் பகைவர்கள். அவர்களின் மண் வெறியை மண்ணைக் கவ்வச் செய்தோம் நாம். அவர்கட்கு வெறி தொடர்ந்தால். நமக்கு வெற்றி தொடரும்! ஆகவே, இந்தப் பொங்கல் தர்மப் பொங்கல்! இன்று மட்டுமல்ல. என்றென்றும் இப்புனித நினைவுகளின் கோயிலாக நம் தாய் மண் திகழும்!

உண்மைதான்; நம் தர்மம் வென்றது! அதற்கு உதாரணமாக, 'தாஷ்கண்ட் ஒப்பந்தம்' நிலைத்து விட்டது! இந்நிலையே நாம் அமரர் லால்பகதூர் அவர்கட்குச் செய்ய வேண்டிய அஞ்சலியாகும்!

பழையன கழிந்து. புதியன புகுதல் மரபு. இம் மரபின் சரித்திரத்துக்கு ஒரு புதிய நோக்கமாகவும்,

தமிழ்ப் பண்பாட்டின் சாத்திரத்துக்கு ஒரு புதிய நோக்கமாகவும் விளங்குகிறது இத்திருநாள்.

கதிர்க் கோமானின் பாதைக்கு ஒரு திரும்பு முனை இப்பொங்கல் புது தினம்.

அதே போல, தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வுப் பாதைக்கு ஒரு மூலைத்திருப்பம் இத் தமிழர் திரு நாள்.

உழைப்பிற்குப் பொங்கல் வைத்துக் கொண் டாடும் சுதினமும் இதுவேயல்லவா?

பொங்கலுக்கு முன்னும் பின்னுமாக அந்தந்த நாட்டுப் பழக்கப்படி பலபல துறைகளில் ஓரிரு விழாக்கள் நடைபெறுகின்றன! போகிப் பண்டிகை கனுப் பொங்கல், மஞ்சு விரட்டு, ஜல்லிக்கட்டு— இப்படிப்பட்ட சிறு பெயர்களைக் கொண்ட ஒரு பெரிய—பொது விழா இப் பொங்கல் திருநாள்.

இப்பொங்கல் விழாவை நாம் நம் அன்பர் களுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பகிர்ந்து கொண்டு அன்பால், பண்பால், பாசத்தால் மகிழ நமக்குக் கை கொடுக்கின்றன பொங்கல் வாழ்த் துக்கள்!

இந்தப் பொங்கலின் உயிர்ப்பாக சூரியன், பூமி, ஏர், உழவர் போன்ற பற்பல சக்திகள் இயங்கு கின்றன. இதயத்தின் தீபமதை இயங்கவைக்கும் செஞ்சுடர்ச் செல்வனையும், பொற்பு நிறைந்த

உலகம் நிறைந்த பூமி தேவியையும் நாம் கையெடுத்துக் கும்பிடுகிறோம். புத்துடை திகழ விளங்கும் நாம் புது மனமும் புது மணமும் பெற்று விளங்குகிறோம்.

“வாழ்த்துகிறோம் உன் கருணை;
வளர்ந்து யரும் எம் வாழ்வு;
வாழ்த்திடு நீ எங்களையும்
வாழிய நீ பல்லூழி!”

என் பாடல் வரிகளை மீண்டும் நான் எண்ணிப் புளகிதம் எய்துகிறேன்.

மஞ்சக் கதிர்க் கொத்து, மாண்புறு புத்தரிசி, மணத்திடும் புத்துருக்கு, சுவை பரப்பும் தேங்காய் ஆகியவற்றுடன் இனிப்புக் கனிச்சுவை பரப்பும் கரும்பின் கதையையும் நாம் நினைவு கூர்கின்றோம்.

கரும்பு என்றதும், அது வாழ்வின் தொடக்கமாகவும், அதுவே வாழ்வுக்கு முடிவுமாகவும் அதை நாம் மதிப்பிடவும் தயங்குவதில்லை.

குழந்தை பிறந்தால் கரும்புத் தொட்டிலில் போட்டு தெய்வ சந்நிதியில் வேண்டுதலை செலுத்துவார்கள் தாய்மார்கள். குழந்தை பிறக்கிறது. பிறந்த குழந்தையை அவ்வாறே கரும்புத் தொட்டிலிட்டுப் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

இது வாழ்வின் ஆரம்பம்.

வாலிபப் பிராயத்தில் கரும்புவில்காரன் விளையாடத் தொடங்குகிறான். ''ஆல் இக்கு வில் வேள்'' என்கிறார்கள். மன்மதனை—வருண குலாதத்தின் மடலில், விடம் செய்யவல்ல கரும்பினையுடையவன் வேழமதன். கரும்பின் சின்னம் என்றால், உடனே காதல் விளையாடத் தொடங்கிவிடுமன்றோ!

அளப்பரிய நிதி பெற்றிருந்த பட்டினத்தாருக்குக் ''காதற்ற ஊசியும் வாராது காண், நிற்க கடைவழிக்கே!'' என்ற வாழ்வின் உயிர்த் தத்துவத்தைப் புரிந்துகொள்ளும் சக்தியை சக்தி அருளியபின், அப்பட்டினத்தடிகளிடம் ஒரு பேய்க் கரும்பினைக் கொடுத்து, அப்பேய்க் கரும்பு எவ்வூரில் இனிக்கிறதோ அங்குதான் அவருக்கு மோட்சம்'' என்று அருளிய அவ்வுண்மைக்கு ஒரு நிதர்சன உதாரணமாக நிலவியது கரும்புதானே?

'இது வாழ்விற்கு அமைந்திட்ட முடிவுக் கட்டம்!'

கரும்பு, என் கதைக் காதலர்களிடையே கொண்டிருந்த முக்கியம் கொஞ்சமல்ல; நஞ்சமல்லவே!

இதோ அவர்கள் பாடுகிறார்கள்; பட்டிக் காட்டுக் காதல் பாட்டு! ''ட்யூன்'' போட்டுப் பாருங்கள்! செங்கரும்பாக இனிக்காதோ? என் பாட்டாயிற்றே?

முருகன்:

மஞ்சி விரட்டுப் பந்தயந்தான்—என்னைத்
தஞ்சம் வைச்சுது உன்னிடமே!
கஞ்சிக் கலயப் பந்தமுந்தான் நம்மைப்
பஞ்சுந்தணலாய் ஆக்கிடுச்சு!

வள்ளி:

கேலிப்பேச்சை நிறுத்திடுங்க-உயிர்
வேலி நம்மைக் காத்திடுமே!
தாலி தந்த நேசமச்சானே—வந்து
காலி பண்ணுங்க பொங்கலையே!''

கரும்பு தின்னக் கூலி யாருமே கேட்பதில்லை. அதற்காகக் கரும்பைத் தூருடன் பிடுங்கி யாரும் தின்றுவிடக் கூடாது. கணுச் சிதைத்து. அடி வெட்டித் துண்டு போட்டு, அடியிலிருந்து தின்ன வேண்டும். நுனி அழகாக இருக்கிறதென்று தின்று ஏமாந்த ஐயபாலனின் கதையை யார்தாம் மறப்பார்கள்?

அது கிடக்கட்டும்.

அபிஷேக பாண்டியன் தன்னைக் காணவந்த சித்தரைச் சோதிக்க, அவரிடம் ஒரு கரும்பினை ஈந்து அதைக் கல் யானை தின்னும்படி செய்யச் சொன்னான். அவ்வாறே அந்தக் கல் யானை, மனத்தையும் கல்லாக்கிவிடாமல், அம்மாதிரியே-சித்தரின் விருப்பப்படியே கரும்பைத் தின்றது. பாண்டியன் வியந்தான். சித்தனாக வந்தது சொக்கேசப்

பெருமாள் என்பதையும் உணர்ந்தான் பாண்டியன். மன்னிப்பை யாசித்தான்.

விஷ்ணு ஆலயங்களிலே பூஜைப் பொருள்களிலே கரும்பும் ஒன்ருக அனுஷ்டிக்கப்படுகிறது.

''நிலத்துக் கணியென்ப நெல்லும், கரும்பும்'' என்கிறது நான்மணிக்கடிகை. நெல் நம் உயிருக்கு கரும்பு நம் உயர்வுக்கு. கரும்பு இல்லாவிட்டால், நாம் வெல்லம் போல எப்படிப் பேச முடியுமாம்?

''இறைமைச் சக்தியை அனுபவித்து மகிழும் மனப் பிணைப்புக்கு ஏற்ற பான்மையினே கரும்பினின் சாறு போலப் பருகினேற்கு இனியவாறே!'' என்று குறிக்கிறது நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.

நகரங்களிலே கரும்பைச் சாறு பிழிய ஒரு சக்கர வண்டி நிற்கும். சாறு பிழிந்து, எலுமிச்சை பிழிந்து, ஐஸ் போட்டுக் கொடுப்பார்கள். சும்மாவா? விலைக்கு! அது கிடக்கட்டும்.

நான் சும்மா ஒரு கிளாஸ் கரும்புச் சாறு தரட்டுமா?—பருகுங்கள்! இதோ!

''வான்கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தேஞ்சுவை
—கலந்து ஏன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
—இருப்பதுவே!''

தெய்வத்தைக் கரும்பாகவும், கரும்புச் சாருக வும் உவமைப்படுத்திப் பாடப்பட்டுள்ள பாடல்கள் கணக்கு வழக்கில் அடங்கமாட்டா.

இதை ஒட்டியோ என்னவோ, கரும்பு தாசக் காதலர்கள் தங்கள் காதலிகளைக் கூச்சமில்லாமல் "கரும்பே!" என்று கூப்பிடவும் பழகிவிட்டார்கள்!

வரப்போகும் தேர்தலிலே தங்களுக்கு அடை யாளம் கிடைக்கவில்லையே என்று யாருமே கவலைப் படத்தேவையில்லை. பேசாமல் கரும்புச் சின்னத்தை கொடுத்துவிட்டு, பேசாமல் இருக்கலாம்?—மன்மத தாசர்கள் என்ன, பட்டினத்தார் தாசர்கள் என்ன அவரவர்கள் தங்கள் தங்கள் சின்னத்துக்காக வெற்றி தேடிக்கொடுக்க இரவும் பகலுமாய்ப் பாடு பட்டே தீருவார்கள்! உடனே "வாழ்க கரும்பு!" என்னும் ஜெய்கோஷங்கள் விண்ணில் புறப்பட்டு வரத் தொடங்குவதை சம்பந்தப்பட்ட வேட்பாளர் கள் முன்கூட்டியே எதிர்பார்த்து மனப்பால் குடிக் கலாம்!—இந்தப் பால் இனிக்காமல் தப்பாது!— சர்க்கரையை கொஞ்சம் அளவுக்கு மிஞ்சிப் போட வேண்டும்!—அவ்வளவுதான்!...

பொங்கலின் நினைவுகள் எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய் நிற்கின்றனவே!

பொங்கலுக்கு ஓர் ஆரம்பத்தையும் ஒரு முடி வையும் தர முயன்ற கரும்புக்கு என் வாழ்த்துக்கள் எப்போதும் உரியவையாகட்டும்!

வாழ்க, கரும்பு?...

—★—

# வைகறைத் துயிலெழு!



ஆத்திசூடியைப் பற்றியோ, அல்லது, தமிழ் மூதாட்டி ஔவையைப் பற்றியோ நான் அறிந்து கொள்ளுவதற்கு முன்னதாகவே 'வைகறைத் துயிலெழு!' என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்து விட்டது. இந்த ஒருவரிப் பாட்டின் பொருள் இன்னதாகத்தான் இருக்க வேண்டும் என்று கணிக்கின்ற அளவுக்கு அப்போது என் அறிவு வளர்ந்திருந்தது. அதுமட்டுமல்லாமல், என் வயதும் வளர்ந்திருந்தது. என்னுடைய இந்தப் 'பக்குவ நிலை'க்கு மூலாதாரமாக இருந்தவர் என் தந்தை யென்று தான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தாயை மறந்து விட்டேனே என்றுதானே நீங்கள் முகம் சுளிக்கிறீர்கள்? அதுதான் கிடையவே கிடையாது. மண் குவித்து 'ஹரிநமோத்துச் சிந்தம்' எழுதிப் பழகிய முந்நாள் தொட்டு, அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பழகி வருகின்ற இன்றைய தேதி வரைக்கும், என் நலத்தில், குறிப்பாக என் தூக்கத்தில் அக்கறையும் அனுதாபமும் பூண்டவள் என் அன்னை. முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து ஈன்றவள் இதுகாறும் என்னைத் தன்னுடைய கண்களுக்குள் வைத்து இமைகளால் மூடித்தான் வளர்த்து வருகின்றாள். எனவே, அம்மாவின் உறக்கத்தையும் சேர்த்து நான் தூங்குவதில் என்றென்றும் கண்ணும் கருத்துமாக இருப்பவன் நான்!

சோதனைகள் யாவருக்கும் பொது அல்லவா? அம்மாவின் இத்தகைய செல்லத்துக்கு அப்பாதான் அடிக்கொரு தரம் சோதனை போடுவது வழக்கம். பள்ளிக்கூடம் வைப்பதை முகாந்தரமாக்கி, நூறு இருநூறு செலவழித்து, பள்ளிப் பையன்களுக்கு 'வெல்லரிசி-அவல்-சர்க்கரை' செய்து கொடுத்து என்னைப் பள்ளியிலே சேர்த்த கவலையில், என்னுடைய அருமை மிருந்த தூக்கத்திற்கு முட்டுக் கட்டை போடுவதில் ரொம்பவும் முனைப்பாக இருந்தார் அவர். பொழுது விடிவதற்கு முன்னதாகவே, விடிந்து விட்டதாக பச்சைப் பொய் ஒன்றைச் செலவழித்த வண்ணம் என்னைத் துயிலெழுப்புவார் அன்புத் தந்தை. 'ஆராரோ...

ஆரிரரோ!' என்னும் தாலாட்டுப் பாட்டின் இனிய நாதத்திலேயே தொட்டிலில் கண் வளர்ந்த குழந்தைப் பிராயம் அப்படியே சிரஞ்சீவித் தன்மை பெற்றிருக்கலாகாதா என எண்ணி ஏங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே கண்களைக் கசக்கியவாறு விழி திறந்தால், விடியாத பொழுதுதான் என்னைப் பயமுறுத்தும். ஒருவேளை 'அனசூயை காலம்' திரும்பி விட்டதோவென்று நான் ஐயப்பட்டு மண்டையைப் போட்டு உருட்டிக் கொள்வதற்குள், 'கொக்கரக்கோ', குரல் பண்பரப்பத் தொடங்கி விடும். அப்பா பிழைப்பார்; நான் படுப்பேன். அதாவது, பள்ளிகூடத்திலே முறை வைத்து 'கோரஸ், பாடிய 'ப...ட...ம்=படம்' என்ற பாடத்தை என் நினைவில்லாமலேயே என் உதடுகள் உச்சரிக்கும்; பிள்ளை கருத்துடன் படிப்பதாகயும் எண்ணி புளகிதமடைந்த நிறைவிலேயே மறுபடி இரண்டாவது சில்லறைத் தூக்கத்தில் ஹாயாக ஆழ்ந்த விடுவார் என் தகப்பனார். நான் வெளியேற்றிக் கொண்டிருக்கும் கொட்டாவிகளை விரல் விட்டு எண்ணி அலுத்துப் போகும் என் தாயோ என் பேரில் இரக்கம் கொண்டு கருணை காட்டி என்னைக் கண் வளரச் செய்து விடுவாள். ஆம்; நான் நவீன கும்பகர்ணனாக இயங்கியும்—இயக்கப்பட்டும் வரலானேன். இந்நிலையில் வைகறையின் திவ்ய தரிசனம் எனக்கு எப்படிக் கிட்டியிருக்க முடியும்?

எங்கள் வீட்டுச் சுவர்க் கடிகாரம் காலமெனும் செப்பிடு வித்தைக்காரனோடு ஒத்துப்போக மறுத்து,

ஒத்துழையாமை இயக்கத்தில் குதித்தாலும், நான் என்னவோ இரண்டாம் வகுப்பில் குதிக்கும்படி ஆனது. புத்தர்பிரானுக்கு ஞானம் பிறக்க ஒரு போதி மரம் கிடைத்தாற்போல, எனக்கு ஓர் அத்தி மரம் கிடைத்தது. அந்த அத்திமர நிழலில் தான் ''வைகறைத் துயிலெழு!'' என்னும் பாட்டுக்கு அத்தி பூத்த பாவனையில் பொருள் சொல்லி வைத்தார் எழுத்தறிவித்த இறைவன்.

'ஆஹா! இவ்வளவு நாட்களாக எத்தகைய மகத்தான தப்பைச் செய்து விட்டோம்? விடிகாலை யில் படுக்கையை உதறி வீசியெறிந்துவிட வேண்டு மென்று ஔவைப் பாட்டி பாட்டு வேறு பாடி வைத்திருப்பது மறந்தே போய் விட்டதே? சரி, சரி! நடந்தவரை நாராயணன் செயல்; இனிமேல் கன கச்சிதமாக, பொழுது விடிவதற்கு முன்னமேயே எழுந்துவிட வேண்டும்' என்று சங்கற்பம் செய்து கொண்டு, அன்றிரவு படுக்கையை விரித்தேன். இத்தனை நாட்களாக தவருமல் நான் செய்து வந்த தவற்றை விளக்கி அம்மாவிடம் மன்னிப்புக் கோரி, வைகறையிலேயே என்னை எழுப்பிவிடு மாறும் வேண்டிக் கொண்டேன். 'தம்பிக்கு இப்ப வாச்சும் நல்ல புத்தி திரும்பிச்சே!' என்கின்ற மகிழ்ச்சியில் திக்குமுக்காடியபடி, 'அப்படியே வரம் தந்தோம், அருமைப் பிள்ளாய்!' என்று அபயம் தந்து சென்றதை மறக்காத அம்மா என்னை வந்து விடிகாலையில் எழுப்பிஞள். அவ்வளவுதான்; தூக்கம் கலைக்கப்பட்ட பழைய கும்பகருணனைக்

காட்டிலும் அப்பொழுது எனக்குக் கெட்ட கோபம் பொத்துக் கொண்டு ஓடோடி வந்தது. சிணுங்கல் அழுகையை அளவாக வெளியிட்ட நான் திரும்பவும் தலையணையில் முகம் பதித்து குறட்டை ஒலிகளை மனை முழுதும் பரப்பிய நிகழ்ச்சிகள் இன்னமும் என்னுடைய 'மன டைரி'யில் பச்சை மையால் எழுதப் பட்டவை மாதிரி பசுமை கொண்டு திகழ்கின்றன; மேலைநாட்டுக் கவி 'வோர்ட்ஸ் வர்த்தை'ப் போல நானும் ஏன் இவற்றையெல்லாம் பாடலாகப் புனைந்துரைக்கக் கூடாது?

பெற்றவளின் கண்ணீர்க் காணிக்கைக்கு மதிப்புத் தந்து அப்பாவும் எனது தனிப்பட்ட தூக்க விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கி விடலானார்; ஆகவே, அதிருஷ்ட வசமாக, 'வைகறைத் துயிலெழு!' என்ற மணிவாசகமும் என் நிழலை அண்டப் பயந்து விட்டது.

ஊர் விட்டு ஊர் சென்றேன்; என்னுடன் கூடவே இந்தப் பரீட்சைகளுமா துப்பறியும் நாய் கள் போலப் பின் தொடர வேண்டும்? எஸ்.எஸ். எல். ஸி, இண்டர், தேர்வுச் சோதனைகளிலே மேற்படி மூத்தோர் மொழியை அவ்வளவாக நான் கருதாமல் இருந்தாலும், பி.ஏ. பட்டப் பரீட்சை யின் போது மாத்திரம் அந்தப் பாட்டு என்னை வட்டியும் முதலுமாக சேர்த்துப் பாடாய்ப் படுத்தி விட்டது. அந்தப் பாடலைப் படித்து அனுபவிக்கும் சூழலோ, அமைதியோ அந்நாட்களில் வாயக்காமல் இருந்தாலும், பட்டத்தின் அவசியம் என்னுள்

கிலியாக மாறி, ஔவை மூதாட்டியின் '144' கட்டளையை வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சேர்த்துக் காட்டிற்று. 'தம்பி, விடிகாலையிலே எழுந்து பாடம் படித்தால்தான் படிப்பு மூளையிலே நன்ருகப் பதியும்!' என்று அப்பா தலையிலடித்துச் சொன்ன காட்சியையும் அப்போது என்னுல் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தது. ஆனுல் அப்பாவின் கண்டிப்புக்கு அணை கட்ட அம்மாவைத் தூதனுப்பி, விடிகாலைப் படிப்புக்கு முழுக்குப் போட்டேன்! மந்திர சக்தி பெற்ற இந்தத் தூக்கத்தைக் கண்டு பிடித்தவனை வாழ்த்திப் போற்றக்கூடிய நிலையிலா நான் இருந்தேன்?

ஹாஸ்டல் வாழ்க்கையில் அப்பா–அம்மாவின் கடமையை, அல்லது, அலுவலை ஏற்க அங்கே ஓர் அலாரம் கடிகாரம் எனக்கெனத் தவம் கிடந்திருக்க வேண்டும்! இல்லையென்ருல், பெற்றவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜண்டு போல என்னை அல்லும் பகலும் ஆட்டிப் படைத்திருக்குமா? இத்தனை மணி, இத்தனை நிமிஷத்துக்கு என்னை நீ எழுப்பியாக வேண்டும்!' என்று அதனிடம் சொல்லி விட்டால் போதும்; பூபாளத்துக்கு அல்லது கோழியின் கொக்கரக்கோ சத்தத்துக்கு வேலை இருக்காது. நான் சொன்னேன்; அது அவ்வாறே எழுப்பியது என்பதை, பறிபோன என் பொறுமையல்லவா சிந்தித்திருக்க வேண்டும்? உடனே எனக்குப் பொல்லாக் கோபம் வந்து கை கட்டி நிற்கும். அலாரத்தின் மண்டையில் ஓங்கி அடித்து விட்டு, மீண்டும் கண்களை மூடி

விடப் பிரயத்தனம் செய்தால், வாய் பேசத் தெரிந்தும்—ஆனால் வாயடைக்கப்பட்ட கடியாரத் துக்காகவும், வாய் மூடி மௌனிகளாம் தலையணைப் புத்தகங்களின் சார்பிலும் நண்பர்கள் வந்து என்னுடைய உறக்கத்துடன் மல்லுக்கு நிற்கத் தலைப்பட்டு விடுவார்கள். கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்து என் முகத்தில், குறிப்பாக என் அருமைக் கண்ணில் விசிறியடிப்பார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் என் நெற்றி மேட்டில்தான் விழுந்து சிதறும். ஒரு சமயம், நான் நெற்றிக் கண்ணைத் திறந்து அவர்களை எரித்து விடுவேனோ என்ற பயமோ என்னவோ, நான் ஏதும் அறிந்ததில்லை! கிராமங்களில் வேப்பிலை வீசி பேய் பிசாசு விரட்டுவது மாதிரி இருக்கும் அந்தக் கண் கொள்ளாக் காட்சி! ஹூம்; அத்துடன் நின்று விடுவார்களா தோழர்கள்? பிளாஸ்கில் இருக்கும் சூடான சாயாவை கிளாஸில் ஊற்றிக் கொடுப்பார் கள். ராஜா ராணி சினிமாப் படங்களிலே எழில் நிரம்பிய கோப்பையில் உயிர் குடிக்கும் விஷத்தை நிரப்பிக் கொடுத்த கட்டம்தான் என் மூளையில் மோதி நிற்கும்; எல்லாம் முடிந்து புத்தகத்தைப் பிரித்தால், அச்செழுத்துக்கள் என்னுடைய 'தலை யெழுத்தை'ப் போலவே என் ஊனக் கண்களுக்கு புலப்படவே மாட்டா! 'இனியும் தூங்காதே, மாக்பெத்! தூக்கத்தைக் கொலை செய்!' என்று வீர முழக்கம் செய்து கொண்டிருந்த ஷேக்ஸ்பியரின் இதய ஒலி என் காதுகளுக்கு எவ்வாறு எட்டி யிருக்கக் கூடும்? ஆனாலும் 'இயற்கையின் இரண்

டாவது சாபக்கேடு இந்தத் தூக்கம்' என்ற சிதம்பர ரகசியத்தை நான் அறிந்ததுண்டு. ஆகையினுல்தான் நான் உறக்கத்தை மாத்திரம் கைவிடவில்லை!

துள்ளித் திரிந்த காலத்தே குறுக்கிட்ட பள்ளி நாட்கள் அறிவித்த புள்ளி விவரங்களின் பலாபலனை நான் நினைவிற்கொண்டு, பரீட்சை முடிவை ஏந்தி வந்த நாளிதழைப் பார்த்தேன்; அதே தருணத்தில் தான், வைகறைத் துயிலெழாமல் போன குற்றத்தையும் அடியேனுல் உணர முடிந்தது!

அமிர்தம் வந்தாள்; பின் தூங்கி முன் எழும் பூவையாகவே வந்தாள். எங்கே இவளும் அப்பா-அம்மா மாதிரியோ, அன்றி அலாரம் போலவோ என் உறக்கத்தின் பிடரியில் கையை வைத்து விடுவாளோ என்று அஞ்சி, வருமுன் காக்கும் உணர்வோடு, எனக்கும் உறககத்துக்கும் உள்ள நட்பை சாங்கோபாங்கமாக மேடைப் பேச்சுப் பாணியில் விளக்கினேன். என்றாலும், இவ்விடத்தில் ஓர் உண்மையினையும் கூறிவிடுவது என் கடமையாகும். ஒளவையின் பாட்டை அவள் பின்பற்றலாகாதென்று மட்டும் அவளை நான் கேட்டுக் கொள்ளவில்லை.

பாரதியார் சொல்கிறுர், 'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்!' என்று. இதைப் படிக்கும்போதெல்லாம் எனக்கு விலா வெடிக்கும் சிரிப்புத்தான் புறப்படுகின்றது. ஏன் தெரியுமா?

அந்த 'யாம்' என்ற சொல்லில் அடியேன் மாத்திரம் விதிவிலக்கு.

''வைகறைத் துயிலெழ வேண்டும் என்று நினைத்துக் கொண்டுதான் நித்தமும் உடம்பைப் படுக்கையில் சாய்க்கிறேன். ஆனால் என்னவோ, அவ்வாறு செய்ய இயலவில்லையே?'' என்று அமிர்தத்திடம் குறைப்பட்டுக் கொண்டதுதான் மிச்சம். தினமும் வெயிலின் கண்ணில்தான் நான் கண் திறந்தேன். இதன் விளைவுகளாக எனக்கு ஏற்பட்ட தொல்லைகளும் நஷ்டங்களும் அனந்தம். எனக்காகக் காத்துத் தவங்கிடந்து கடைசியில் ஆறித் தண்ணீராக மாறிய அந்த 'பெட் காப்பி'களுக்கு என் மீதிருக்கும் கோபத்தை என்னால் எப்படிப் போக்க முடியுமோ, தெரியவில்லை!


ஒரு நாள் :

வழக்கம் போல நேரம் சென்றுதான் எழுந்தேன். எழுந்தபோதே பசி வயிற்றைக் கிள்ளியது. காலைப் பலகாரம் கொணரும்படி பணித்தேன், கொண்டவளிடம். அவள் வெறுங்கையுடன் வந்தாள். உடன் வந்த அருமைக் குழந்தை, பிரித்திருந்த புத்தகம் ஒன்றை என்னிடம் நீட்டி, ஓரிடத்தைக் காட்டியது. ''உறங்கின நரிக்கு உணவு கிட்டாது!'' என்ற பழமொழி அது.

''குழந்தை எல்லா இட்டிலியையும் சாப்பிட்டு விட்டான். விடிகாலையிலேயே விழித்துக்கொண்டு,

பசி என்று கதறினுல் நான் என்ன செய்யட்டும்? நீங்கள் ஒன்று செய்யுங்களேன்; இனியாவது நீங்கள் சீக்கிரம் எழப் பழகினுல் என்னவாம்?'' என்று சிரிக்காமல் சொன்னுள் அமிர்தம்.

ஆம்; எனக்கு ஓர் ஆறுதல்; 'வைகறைத் துயிலெழு!' என்ற அமுத மொழியை நான் பின்பற்ற முடியாவிட்டாலும், என் பிள்ளையாகிலும் கடைப் பிடிக்கிருனே என்பதுதான் அந்த ஆறுதல்!



# திருமண அழைப்பு!

ஒரு நாள் நடந்தது:

அலுவலகத்தில் உட்கார்ந்து அன்றையக் கடமைகளில் என்னுடைய கருத்தைச் செலவழித்துக் கொண்டிருந்த நேரத்தில், பையன் வந்து, என் பெயருக்கு வந்திருந்த தபால்களைக் கொட்டினான். வந்தவற்றைக் கண்டு எடுத்துப் பார்த்தேன். மலைப்புத் தட்டியது. காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? வந்திருந்தவை அத்தனையும் திருமண அழைப்புக்கள்தாம்! பையன் அழைப்புக்களை உள்ளங்கை இடுக்கில் வரிசையாக இருத்திக் கொண்டு, ஒவ்வொன்றாக நீட்டினான். ராதை—கிருஷ்ணன்; அமராவதி—அம்பிகாபதி; அரவரசன்—தமிழரசி; பார்வதி—பரமசிவன்; உத

யணன்—வாசவ்தத்தை என்று இப்படி அழகழகான பெயர்கள் ஜோடி காட்டி, ஜோடி சேர்ந்து, அழைப் புக்களின் மேலுறைகளின் இடது பக்கம் கண்சிமிட் டின. ஓரிரு பெயர் இணை எனக்குத் தெரிந்தவை யாகத் தோன்றின. மற்றப் பெயர்களுக்கு என்னைத் தெரிந்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு நான் பெருமைப்பட வேண்டியவன்தான்! அழைப்புக்களை மீண்டும் மேலோட்டமாகக் கண்ணோட்டம் செலுத் தினேன். கடிகாரம் எச்சரித்தது. அலுவலகக் கடமை குறுக்கே நின்றதால், வந்த திருமண மடல் களின் மணம் வெளியேறிவிடாமல் இருக்க, அவற் றைப் பையிலிட்டேன்.

காலம் நிற்கின்றதா?

மாலை வந்தது. அந்திமாலைப் பொழுது. மாலை நோய்க்குப் பதிவு செய்துகொண்டிருந்தவர்களது வண்ணக் கதைகளை நினைவுபடுத்திக்கொண்டே வீட்டுக்கு வந்தால், முதலில் பட்டு நின்றது. வண்ணம் மங்கிய ஒரு கல்யாண இதழ், கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்த பழைய மணத் தம்பதியின் பெயர்களின்மீது தங்கத் தூள் தூவப்பட்டிருந்தது. அந்தப் பெயர்கள் இரண்டை யும் தொடுத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண் டிருந்த எனக்குச் சுவை கண்ட ஒரு நிகழ்ச்சி ஞாப கத்திற்கு வந்தது!

அவனும் அவளும் 'ரிசர்வ்' செய்து வைத்த மாதிரி, கண்டவுடனேயே காதல் கொள்ளவில்லை.

ஒருவரையொருவர் காணுமலேயே, அவர்களுக்
காகக் காதல்தான் காத்துத் தவம் கிடந்தது.
அதிசயமாக இருக்கிறதா?—ஆமாம்; அவர்கள்
இருவரும் அத்தை மகள்—மாமன் மகன் முறை
கொண்டவர்கள். இந்தப் பொய் உலகில் ஜனனம்
எடுத்த சடுதியிலேயே, அவர்களின் நிஜமான காத
லும் பிறந்துவிட்டதை, மேற்படி குழந்தைகள்
அறிந்தனவோ, இல்லேயோ, அவர்களுடைய இரு
தரப்புப் பெற்ருேர்களும் தெரிந்து வைத்திருந்தார்
கள். அதன் பலனுக, அவர்களுக்குக் கல்யாணம் நிச்
சயமாகியது. அதற்கு முத்திரை வைத்தாற்
போன்று, திருமண அழைப்புக்களும் தயாராயின.
நாள், நட்சத்திரம், சாத்திரம், சூத்திரம், சொந்த
பந்தம் போன்ற கேள்விகள் மூன்றும் மனிதர்களால்
கேட்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க விரும்
பாதவர்களாக, சகல புள்ளிவிவரங்களேயும் நறுவி
சாகக் குறித்தார்கள். உற்றவர்கள், நட்புக்கு
உகந்தவர்கள் எல்லோருடைய பெயர்களேயும் எழுதி
அவர்கள் அனேவருக்கும் அழைப்புகள் கொடுக்
கப்பட்டன. அஞ்சலில் இந்தச் சுபச் செய்தியை
அஞ்சல் செய்யவும் தவறவில்லே. இப்படிப்பட்ட
சம்பிரதாயபூர்வமான கட்டங்களினின்றும் சற்றே
எட்டி நின்று, ஓர் அதிசயச் சம்பவம் நடந்தேறி
யது. அது என்னவென்று உங்களுக்குப் புரிகிறதா?
சரி; நானே சொல்லி விடுகிறேன். மணமகன் கையில்
மண மகள் ஓர் அழைப்பை நீட்டினுள். அதே கணத்
தில், மணமகளிடம் மண மகனும் ஒரு திருமண
மடலேக் கொடுத்தான். இருவருக்கும் ஓர் அரைக்

க்கணம் இவ்வுலகச் சிந்தனையே இற்றுவிட்டது. ஏனென்றால், காதற்கனவு சிதைந்துவிட்டதோ என்ற சந்தேகம் தட்டியது. பிறகு, சுயநினைவு நெஞ்சக் கதவைத் தட்டியது. அப்போதுதான்? அவர்கள் பரஸ்பரம் குறுஞ்சிரிப்பைப் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள். இவ்வாறு திருமணமாகப் போகும் தம்பதி, திருமணத்திற்கு முன்னதாக, அழைப்புக்களைக் கொடுத்து வாங்கிக்கொள்வது எங்கோ ஒரு நாட்டில் நிகழும் சம்பிரதாயச் சடங்கு என்ற விவரத்தைச் சொல்லிச் சிரித்து மகிழ்ந்த கதையும் நினைவுக்கு வந்தது. அவ்விருவருக்கும் மறு பிறப்பு எடுத்தாற்போன்றிருந்ததாம்! இருக்காதா, பின்னே?

இருந்திருந்தாற் போன்று, கள்ள நகைப்பின் இனிய சிற்றலைகள் என் செவிகளிலே, ரீங்கார மிடவே, நான் தலையை நிமிர்த்தினேன். புன்னகையின் புது நிலவாய் அமிர்தம் நின்றாள். ''என்ன அத்தான், நம்முடைய கல்யாணப் பத்திரிகையை கண்கொட்டாமல் அப்படியே பார்த்துக்கொண்டே நிற்கிறீர்களே?...பழங்கதை உங்களுக்குப் படம் காட்டியிருக்குமே! ஊம்!...'' என்றாள் அவள், சிரித்தாள்—சிரிக்கப் பழகியவள்!

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்; இந்த அழைப்பை வாழ்த்தாமல் என்னால் இருக்க முடியுமா?

ஆயிரம் காலத்துப் பயிர் என்று மணவினையைச் சொல்லுவார்கள். ஆயிரம் பொய்யைச் சொல்லி யாவது ஒரு திருமண வைபவத்தை நடத்தலாம் எனவும் ஓர் அகராதி பழமொழி சொல்கிறது. ஆக, ஆயிரம் என்ற இந்த எண்ணிக்கைக்கும் 'வதுவை விழாச் சடங்குக்கும் எவ்வகையில் விட்டகுறை— தொட்டகுறை இருக்கிறதோ, அல்லது இருக்க முடியுமோ? புரியவில்லை. ஆனால், ஒன்றை மட்டிலும் என்னால் உணர முடிகிறது. திருமணவினை என்பது ஒவ்வொருவருக்கும் புதிய அனுபவம்; ஒரு வாய்ப் புங்கூட! வாழ்ந்து காட்டிய ஆயிரம் பேர்களின் முன்னிலையிலே கல்யாணத்தினை நடத்தி, அவர் களுடைய நல்லாசிகளை அரிசிமணிகள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்கிற இப்புனித லட்சியத்தை ஈடேற்றிவைக்கும் கைங்கரியத்தில் முழுப்பங்கு பெறுபவை இந்தத் திருமண அழைப்பு களே அன்றோ! கல்யாணம் காட்சி என்றால் யாரா வது சும்மா வந்துவிடுவார்களா? வந்தால், அவர் களுக்குத்தான் கௌரவம் இருக்கமுடியுமா? இந்த அழைப்புதான் திருமணத்திற்கு உயிர்நாடி மாதிரி, ஒட்டும் இரு உள்ளங்களுக்கு ஒரு கண்ணாடித்தட்டு இது. ஒட்டாத உள்ளங்களை ஜோடி சேர்த்துக் கொடுக்கும் பதிவுச்சீட்டு இது. கல்யாணத்திற்குத் தலை கொடுக்கும் இருதரப்புக்காரர்களின் பூர்வ கதை பூராவையும் சொல்லிக் காட்டும் முன்கதைச் சுருக்கமும் இதுவேதான்! பின்கதைக்கு ஓர் உரை கல் இதுவென்றாலும், நீங்கள் ஆச்சரியப்படக் கூடாது!

சிரஞ்சீவி இன்னாருக்கும் சௌபாக்கியவதி இன்னவளுக்கும் நடக்கும் விவாஹ சுபமுகூர்த்த வைபவத்திற்கு நம்மைக் குடும்ப சமேதராக வந்து போகும்படி வேண்டிக்கொள்வதோடு நிற்காமல், திருமணத்திற்கு நாலுநாள் முன்னதாக வரும்படி 'ஸ்பெஷலாக' விண்ணப்ப வரி ஒன்றையும் வேறு மாமூலாகச் சேர்த்து அச்சடித்து அனுப்பி வைப்பார்கள். கல்யாணக்காரர்களுக்கு வசதியும் இஷ்டமும் இருந்தாலும் இருக்காவிட்டாலும், அச்சகத்தாருக்கு இம்மாதிரியான 'மாட்டர்' தான் கைவசம் காத்திருக்கும். 'கல்யாணத்தைச் செய்து பார்' என்ற அபாய அறிவிப்பில் தொக்கி நின்று கண்ணு மூச்சி காட்டும் அபாயங்களுள் இதுவும் ஒன்றென்பதை நீங்கள் மறந்துவிடப் போகிறீர்கள்!

ஆனால், ரேஷன் கெடுபிடி காலத்தில், நாலு நாள் முன்னதாக வருமாறு அழைக்க அரசாங்கச் சட்டம் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமா? திருமணத்திற்கு வரும்போது, அவரவர்களின் பங்கீட்டுச் சீட்டுகளையும் கொண்டு வரும்படியல்லவா அவரவர்களுக்குக் 'கெஞ்சல்' மொழி அனுப்பப்பட்டு வந்தது? இது கனவல்ல; கதையுமல்ல;

எனக்கு இந்தத் திருமண அழைப்புக்கள், பயிற்சிகளையும் பாடங்களையும் கற்றுத் தந்திருக்கின்றன என்பதை நான் உங்களிடம் ஒளிவு மறைவாக வைத்துக் கொள்ள விரும்புவது அத்தனை உசிதமல்ல!

ஓர் அழைப்பிதழ். அதன் முகப்பில் முகூர்த்த நாள் சொல்லப்பட்டிருந்தது. மணமகன், மணமகள் பெயர்களும் கண்டிருந்தன. திருமண தினத்தை மன டைரியில் குறித்துக் கொண்டபின், குறிப்பிட்ட அந்த நாளுக்காகக் காத்துக் கிடந்த வேளை பார்த்து, அயலூர்ப் பயணம் ஒன்று திடீரென்று வரவே, நான் புறப்பட வேண்டியவன் ஆனேன். பையும் கையுமாக நின்ற நேரத்தில், மணமகனே பிரசன்னமானார். ''வாருங்கள், ஐயா!'' என்றார். மணமகன் தங்கக் கம்பி. இம் மாதிரி சந்தர்ப்பங்களிலே அவருக்கு மணவறையில் உட்கார்ந்திருக்கவே பொழுது காணமாட்டாது. ஆனால் இந்த இளைஞரோ, என்னைக் கவுரவப்படுத்த வேண்டி, நேரிலேயே அழைக்க வந்திருந்தார். என்னுடைய திடீர்ப்பயணம் பற்றி அவரிடம் ஆதியோடந்தமாய்ச் சொன்னேன். அவர் என்னை நோக்கி நகைபூத்தார். பிறகு என்னுடைய மேன்மை கொண்ட திட்டத்திற்கு ஆதாரம் காட்டி, அதற்குச் சாதகமான வாசகங்களை அவர் செவிகளில் கொட்டினேன். அவரோ தேள் கொட்டிய பாவனையில் தத்தளித்தாரே யொழிய, என் மொழிகளைச் செவி மடுத்தாரில்லை. எனக்கு அனுப்பிய திருமண அழைப்பைத் திரும்பக் கேட்டார். 'சரி; நாம் கல்யாணத்திற்கு வராததால், நமக்குத் தந்த அழைப்பை இன்னொருவருக்குக் கொடுக்கலாம், என்ற சிக்கன நோக்கம் கொண்டிருக்கிறார்' என்று மனத்தை ஆறுதல்படுத்திக்கொண்டு அந்த அழைப்பை அவரிடம் சமர்ப்பித்தேன். நான் நினைத்

தது போல், உறைமீது இருந்த என் பெயரை அவர் வெட்டவும் இல்லை; மற்றவர் பெயரை ஒட்டவும் இல்லை. அதற்குப் பதிலாக, அழைப்பைப் பிரித்து என் கண்களிலே ஒற்றினர். அசந்துவிட்டேன் நான். ஊம்! என்னுடைய மாண்புமிக்க தலைமையின்கீழ் அவரது வதுவை விழா நிகழ்வதாக அச்சாகியிருந் தது. 'சிவனே' என்று கல்யாணப் பிரசங்கத்தை எழுதி மனப்பாடம் செய்து ஒப்பித்ததும், இந்த மாப்பிள்ளை புனைந்த முதல் கதையை அடியேன் தான் முதன்முதலாக வெளியிட்டேன் என்பதும் சொந்த விஷயங்கள்!

தமிழ் இனம் விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றதென்பது இலக்கிய பூர்வமானதொரு உண்மை. இத்தகைய விருந்துபசாரத்துக்கு அடித் தளம் பரப்புவது திருமண அழைப்பு. அழைத்த வீட்டுக்குத்தான் யாரும் வருவார்கள். மனத்தை யும் மாற்றிக்கொண்டு, உற்ற நண்பர்கள் இரண்டு மூன்று பேர்களையும் அழைத்துச் சென்று பதிவு நிலையத்தில் மாலைகளை மாற்றிக் கொள்பவர்களுக்கு வேண்டுமானல், திருமண அழைப்பு அச்சடிக்கும் பணம் மிச்சமாகலாம். ஆனல், பெரும்பாலான வர்கள் திருமண அழைப்பு விஷயத்தில்தான் அதிகப் படியான கருத்துப் பதிப்பது வழக்கம்.

சாதாரணமாக, ஒருவரின் வீட்டைப் பார்த் தால், அவரது இருப்புப் பெட்டகத்தின் நிலை மையை அனுமானம் செய்துகொள்ள முடியும். அதை ஒப்பத்தான், திருமண அழைப்பின் தரத்தை

எடை போட்டால், நடைபெறும் மணவினையின் ஆடம்பரத்தைப்பற்றியும் கோலாகலத்தைக் குறித்தும் நாம் அளவிட்டு விடலாம்.

அந்தக் காலத்திலே மோதிரத்தில் அடக்கி விடக்கூடிய அளவுக்கு அவ்வளவு, மெல்லியதாகத் துணியை நெய்து தயாரித்தார்களாம். அது சரித்திரக் காலம்! இந்த நாளிலோ, முன்மாதிரி மோதிரங்களில் அழைப்புக்களைத் தூது அனுப்ப வேண்டியது ஒன்றுதான் பாக்கி. மற்றபடி, அழைப்புக்களை தயாரித்துவிடும் கலையில் பற்பல வகைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. வண்ணக் காகிதங்களிலிருந்து வனப்பு மிக்க துணிமணி வகை வரை சகலமான தினுசுகளிலும் திருமண அழைப்புக்கள் அச்சாகின்றன. ஒவ்வோர் அழைப்பிற்கும் ஒவ்வொரு தனிப்பேழை செய்து அழைப்புக்களை அனுப்பி வைக்கின்றனர் நிதிமிகுந்தவர்கள்.

இந்நிலையை எண்ணும்போது, பண்டைச் சரித்திரம் நம்முன் ஏடு புரள்கின்றதல்லவா? அரண்மனைகளிலே காதல் விளையாட்டு ஒரு ரகம். சுயம்வரம் இன்னொரு வகை. எல்லாம் ஒருபுறம் இருந்தாலும், ஐம்பத்துஆறு தேசத்து ராஜாக்களுக்கும் அரசாங்க முத்திரை, கொடி தாங்கிய முகூர்த்த ஓலைகள் கொண்டு சேர்க்கப்பெறும் செல்வாக்கே தனித்தன்மைகொண்டு விளங்கியது. இதைக் காலமும் நூலும் எப்போதும் மறக்கவோ, மறைக்கவோ இயலாது.

திருமண அழைப்புக்களை அனுப்புவது சில வரம்புகளுக்கு உட்பட்டது. வேண்டப்பட்டவர்களுக்கு அசந்து மறந்து அழைப்பு அனுப்ப மறந்து விட்டால், அதனுல் ஏற்படும் விளைபலன்களை மட்டும் சோதித்துப் பார்க்க ஆசைப்படாதீர்கள்! நெருங்கிய சொந்தக்காரர்கள் என்ருல், அவர்களுக்கு வெற்றிலை பாக்குடன் அழைப்பைக் கொடுக்கவேண்டும். கல்யாண தினத்தன்று வாசல் முகப்பில் நின்று ''வாருங்கள்!'' என்று முகமன் கூறி, விருந்து வைக்கவேண்டும். அப்புறம் அவர்கள் 'மொய்' எழுதினுல், வாங்கினுலும் வாங்கலாம்; மறுத்தாலும் மறுக்கலாம். பரிசுப் பொருள்களுக்கும் இதே கதைதான். இதைப்பற்றிய தீர்ப்பைக் கூட அழைப்பில் குறித்து விடுகிருர்கள். அவ்வாறே தபால் தந்தி முகவரிகளையும் ஜாடை காட்டிவிடுவதும் இயல்பு. விருந்திற்கு உக்கிராண அறை போன்று, திருமண அழைப்புக்கு ஈடாக விநியோகிக்கப்படும் திருமண வாழ்த்துப்பத்திரங்களை 'மைக்' கின் முன்னிலையில் வாசிப்பதற்கென தனியே ஓர் இலாகாவே பணி செய்யும்.

திருமண அழைப்புக்கள் காரணமாக இன்னெரு சங்கடமும் இல்லாமல் இல்லை. நம்முடைய மேலான நல்வரவை ஆவலுடன் எதிர்நோக்கும் ஒரு டஜன் பேர்வழிகள் தங்கள் ஊர் மதிப்பைப் பெற எண்ணியோ, அன்றி, தங்களது தலைவலியைப் பகிர்ந்தளிக்கவேண்டியோ ஏற்பாடு செய்த வாய்ப்பாட்டு, சதிர், நாகசுரம் இத்யாதி நிகழ்ச்சிகளுக்கான நிரலையும் அழைப்பில் அச்சடித்து, இவற்றிற்கெல்லாம்


நம்மையும் இருத்தி வைத்து வேடிக்கை பார்ப்பார்கள். கல்யாண விருந்தில் நாம் உண்ட களைப்பை அவர்கள் அறிந்ததாகக் காட்டிக் கொண்டால், அப்புறம் நாம் தொண்டர்களாகவன்றோ உருமாற நேரிடும்!

ஆம்; இந்தத் திருமண அழைப்புகளை வாழ்க்கையின் புனிதத் தொடக்கத்திற்கு ஓர் அன்புச் சாட்சியமாகவே கொள்ளுகிறோம்.

காதல் வாழ்க்கைக்கும்—வாழ்க்கைக் காதலுக்கும் இவையே அத்தாணி மண்டபங்களாகவும் அமையக்கூடும்!

காதலர்கள் தங்கள் காதலை மறந்தாலும், இந்தத் திருமண அழைப்பை மறக்கவே முடியாதல்லவா..?






அலுவலகத்துக்குப் புறப்பட என்னைத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்தேன். அம்பிப் பயலைக் கூப்பிட்டு' ''மணி என்னவென்று பார்த்து வா'' என்றேன். ''மணி பார்க்கத் தெரியாது'' என்றான் அவன்.

''சரி, சின்ன முள் எதிலே இருக்கிறது, பெரிய முள் எதிலே இருக்கிறது என்று பார்த்து வா'' என்று ஆலோசனை சொல்லி அனுப்பினேன். அவன் திரும்பி வந்து, ''சின்ன முள்ளும் பெரிய முள்ளும் கடிகாரத்துக்குள்ளேதான் இருக்கிறது!'' என்ற பெரிய ரகசியத்தை என்னிடம் சொன்னான்.

இந்தக் கடிகார முள் என் சிந்தனையில் சுற்றியது. நல்லவேளை, அது என் மூளையைக் குத்தவில்லை. ஆனால், அலுவலகத்துக்குப் புறப்பட்ட என்னைத் தடுத்து நிறுத்தியது ஒரு பொருள். பாதத்தில் ரத்தம் கசிந்தது. குனிந்து பார்த்தேன். அது ஒரு முள்! அந்த முள்ளை மற்றொரு முள்ளினால் எடுத்துப் போட்டுவிட்டு மேலே நடந்தேன். முள்ளை முள்ளினால்தான் எடுக்க வேண்டுமென்ற 'சாணக்கிய தந்திரம்' எல்லோருக்குமே சீக்கிரம் பிடிபடாது.

முள் மூர்த்தியில் சிறியதுதான். ஆனால் அதன் கீர்த்தி மிகமிகப் பெரிது. அது மட்டுமல்ல. அன்றாட வாழ்க்கையில்தான் இந்த முள் எத்தகைய முக்கியத்துவம் பெற்றிருக்கிறது? 'வாழ்க்கை ராஜ பாட்டையல்ல; அது முள் நிறைந்த பாதை' என்கிறார்கள் சிலர். 'வாழ்க்கை முட் பாதை என்றாலும்கூட, அதையே ராஜ பாட்டையாக ஆக்கிக்கொள்ள முயல வெண்டும்' என்று உபதேசிக்கிறார்கள் வேறு சிலர்.

நம் சமூகம் முள் வேலியாக அமைந்துவிட்டது என்று எழுத்தாளர்கள் வர்ணிக்கிறார்கள். இவர்கள் உபயோகிப்பது பேனா முள்! காதலன் பிரிவால் அல்லற்படும் காதலிகளுக்குப் படுக்கை முள்ளாகக் குத்தும்! இதுவும் பேனா மன்னர்கள் அளக்கும் கதைதான்!

'தூண்டிற் புழுவினைப்போல்' என்ற பாட்டை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இங்கே தூண்டில் என்பது, தூண்டில் முள்ளையேதான் குறிக்கும்.

நம் வாழ்க்கையில் மட்டுமல்லாது, புராண காலத்திலும்கூட இந்த முட்கள் மிகுந்த பெருமை பெற்றிருக்கின்றன.

அஞ்சன வண்ணனை ஸ்ரீராமபிரான் கானகம் செல்ல ஆயத்தமானபோது தானும் உடன் வருவதாகச் சீதாதேவி கூறுகிருள். அது கண்டு தசரத ராஜகுமாரன் மனைவியை நோக்கி, ''நான் செல்லும் இடம் கல்லும் முள்ளும் மண்டிய ஆரண்யம்!'' என்கிருன். அதுகேட்ட ஜனககுமாரி, ''நீங்கள் செல்லும் இடம் எதுவாஞலும் அதுவே எனக்கு சொர்க்கம்; அதுவேதான் எனக்கு அயோத்தி!'' என்கிருள். கடைசியில், மனையாட்டியையும் அழைத்து ஏகுகிருன் தெய்வ மனிதன்.

இலக்கியத்திலே காதற் சுவையிலும் 'முள்' அங்கம் வகிக்கிறது. சகுந்தலைக்குக் காலில் முள் தைத்து விடுகிறது; அப்பொழுது எதிர்ப்படுகிருன் துஷ்யந்தன். ''முள் எடுக்கும் பாவனையில் முறுவல் நகை பூக்கின்ருள் சகுந்தலை!'' முள் இல்லையேல், இங்கே காதல் பிறந்திருக்க முடியாது.

ஊசி முனையில் உமையவள் தவம் செய்ததாகச் சொல்வதுண்டு. முள் முனையில் அப்படித் தவம் செய்ய ஏனே முனையவில்லை, பார்வதி தேவி. முள் முனையில் ஒரு பிரகஸ்பதி மூன்று குளம் வெட்டியதாக ஒரு நாடோடிக் கவிதை உண்டு!

முள்ளை ஒதுக்க முள் வாங்கி தாற்காலிகச் சாதனமாக அமையலாம். ஆனல், இந்த முள்

வாழ்க்கை என்ற சொல்லடுக்கைச் சுற்றி ஒரு இரும்பு முள் வேலியை அமைத்துக்கொண்டுள்ளது. முள்ளில் வாழ்க்கைத் தத்துவம் ஒடுங்கி விடுகிறது. முள் நிறைந்த ரோஜாவிலிருந்துதானே உள்ளம் கொள்ளை கொள்ளும் நறுமணம் புறபபடுகிறது! அதுதான், கஷ்டங்களுக்குப் பிறகே வாழ்வில் ஆனந்தம் என்பதைக் காட்டுகிறது.

'அவரவர்களின் கண்களைக் கொண்டே அவரவர்களை அறியலாம். முட் செடிகளிலே திராட்சைகளையும் முட்பூண்டுகளிலே அத்திப் பழங்களையும் பறிக்க முடியாது!'

இயேசுவின் உள்ளம் பேசுகிறது இப்படி. ஆனாலும் இத்தனை பிரக்யாதி பெற்ற முள் நம் காலில் தைக்கும்போது 'முள்ளே, நீ அடியோடு வீழ்க!' என்று சபிக்கத் தோன்றுகிறது.

—★—

# காதற்ற ஊசியும்..!

கேவலம், காதில்லாத ஓர் ஊசியிலே அப்படி என்ன மகத்துவம் இருக்கிறதென்று அடியேனுக்கு நாளது தேதி வரைக்கும் தெரியவில்லை!—1966-ம் வருஷம் பிறந்து இன்றைய தினம் வரைக்கும்தான் சேர்த்துச் சொல்லுகிறேன்.

ஆனால், சுவேதாரண்யர் என்று பெயரிடப் பெற்று, திருவெண்காடர், என்று அழைக்கப்பட்டு, பட்டினத்துச் செட்டியார் ஆகி, பிற்பாடு பட்டினத் தாராகவே ஆகிவிட்ட ஸ்ரீமான் பட்டினத்தடிகளுக்கு இந்த ஊசி—அதுவும் காதற்ற ஊசிதான் ஞானோதயத்தினை நல்கிய விந்தை இருக்கிறதே அதுதான் எனக்குச் சிருஷ்டிப் புதிராக இருந்து வருகிறது!

கதையைச் சொன்னால்தானே பாவம், உங்களுக்கு விஷயம் புரியும்?

ஒரு சமயம் பட்டினத்துச் செட்டியார் மாபெரும் செல்வச் சீமானாக இருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாத பெருங்குறையைத் திருவிடை மருதூர் பெருமான் சந்நிதியிலே விண்ணப்பித்துக் கொண்டார். உடனே அவருக்கு சிவசருமர் வாயிலாக ஒரு குழந்தை கிட்டிற்று. அதற்கு மருதபிரான் என்று நாமகரணம் செய்வித்து வளர்த்து வந்தார். அப்பிள்ளை பெரியவனாகி, கடல் கடந்து வியாபாரத்துக்குச் சென்றான். மீண்டான். அவன் கப்பலில் கொணர்ந்த வற்றில் வெறும் வராட்டியும் எருவுமே மூட்டை மூட்டையாக இருக்கக் கண்ட பட்டினத்துச் செட்டியார் ஒரு விரட்டியை எடுத்து வெஞ்சினம் பறக்க வீசி எறிந்தார். அவ்விரட்டி உடைந்து ஒளிமிக்க நவரத்தினங்களாகச் சிதறியது. தவுட்டு மூட்டையெல்லாம் பொன்னாய் மாறியது. பட்டினத்தார் வீடு வந்தார், மாறாத திகைப்புடன்! ஆனால் அங்கே அவரது திகைப்பு மேலும் வளர்ந்தது. காரணம் அங்கே அவர் மகன் காணப்படவில்லை. குமாரன் கொடுத்ததாகச் சேர்ப்பிக்கப்பட்ட சிறிய பெட்டியில் காதற்ற ஓர் ஊசியும், ஓர் ஓலைச் சீட்டும் இருந்தன. ஓலை நறுக்கிலே, "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே!" என்றிருந்த வாசகம் அவருக்கு அறிவு நிலையினை உணர்த்தியது. பற்றற்ற துறவியானார். அளப்பரிய செல்வம் படைத்த

பட்டினத்துச் செட்டியார் பட்டினத்தடிகள் ஆனூர். இந்த ஊசியை—அவர் அதாவது, காதற்ற ஊசியை மறக்க மாட்டார். அவரை இவ்வாறு ஆக்கிய தெய்வம் அவர் மகன்!

ஆனால், எனக்கென்னவோ இந்தக் காதற்ற ஊசியில் துளிக்கூட பற்று இருப்பதில்லை. ஏன்? காதுள்ள ஊசி என்றால்கூட எனக்கு அவ்வளவு ஈடுபாடு கிடையாது!—ஏனென்றால், மூன்று காசை நீட்டினால், டஜன் கணக்கில் ஊசியும் டஜன் கணக்கில் வெகு சமீபத்திய ''சினிமா'' பாட்டும் கொடுக்க நரிக் குறத்திகள் இருக்கும்போது எனக்கு இந்த ஊசியில் உணர்வு எப்படிப் பிறக்க முடியும்?—நீங்களே சொல்லுங்கள்!—

ஊசி குத்தினால் உணர்வு இருக்கும். ஆனால், உணர்வு உண்டாகக் கூடாதே என்றுதான் டாக்டர் கள் ஊசி குத்துகிறார்கள்—அதாவது, ''இன்செக் ஷன்'' போடுகிறார்கள்!—பெரிய ஆபரேஷன் என்றால், அவர்கள் மட்டும் இந்த ஊசி விஷயத் தில் ''ரேஷன்'' செய்வது கிடையாது!

ஒரு நடப்பு என்ன தெரியுமா?

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி சிலர் ''நைசாக'' பேசுவார்கள். அவர்கள் இம்மாதிரி டாக்டர்களாகத் தான் இருக்க வேண்டுமென்று சாஸ்திரம் ஏதும் இல்லையே!

ஊசியும் நூலும்போல வாழ வேண்டுமென்று நான் ஒரு புது மணத் தம்பதிக்கு வாழ்த்துக் கடிதம்

அனுப்பி வைத்தேன். அந்தத் தம்பதியின் நாயகன் ஒரு தையற்காரர். ஊசியும் நூலும் எவ்வளவு முக்கியம் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ளும் ரீதியில் ''காஜா'' எடுக்கும் பதவி யிலிருந்து உயர்வுபெற்ற மாப்பிள்ளை அந்த டைலர்! —மேலும், ஒருமுறை என் அகிலாண்டம் ஊசியில் நூலைக் கோர்த்துத் தரும்படி சொல்லப்போக, நான் பட்ட கஷ்டத்திலிருந்து ஊசிக்கு நூலின் நிலையும் புரிந்திருந்தது. ஆகவேதான் அப்படி வெகு இயல்பாக எனக்கு வாழ்த்தத் தோன்றியது! ஓடிக்கொண்டே ஊசியில் நூலை நுழைக்கும் விளையாட்டில் வல்லவளாம் அந்த டைலரின் மனையாட்டி!

ஜோடிப் பொருத்தம் இப்படியல்லவா அமைய வேண்டும்!......

காதுள்ள ஊசியால் கிழிசலைத் தைக்கிறோம்.

காதில்லாத ஊசியால் கதை பேப்பர்களை 'பின்' பண்ணுகிறோம். வாயாடிகள் யாராவது இருக்கும் பட்சத்தில் அவர்கள் வாய்களைத் தைத்து விடவும் இந்த ஊசியும் உதவும்! இது என் யோசனை மட்டுமல்ல! ஆகவே இதனால் உண்டாகும் பின் பலாபலனுக்கு நான் ஜவாப்தாரியல்ல!

ஆபீசர் வந்துவிட்டால், அங்கு ஓர் ஊசியை—குண்டூசியை போட்டுப் பாருங்கள்! அங்கு குண்டூசி விழுந்த சத்தம் கேட்டால், அங்குள்ள ஆபீஸரின் கெடுபிடித்தன்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்!

அந்த நாளிலே கைதிகளின் நகக் கண்களில் ஊசி செலுத்தும் ஒருவகைத் தண்டனையும் இருந்த தாம், உங்களுக்குத் தெரியுமா?...அடடே, கோபித் துக்கொண்டு விடாதீர்கள், ஐயா!''

ஊசி முனையில் தவம் செய்தார்களாம் அர்ஜுனனும் பார்வதியும் புராணத்திலே!

இந்த நாளில் ஊசியை விழுங்கவே தெரிந் திருக்கிறதே நம் பிள்ளைகளுக்கு! சாதாரண குண்டூசியை ஒரு குழந்தை விழுங்கி விட்டதாம்; நிலை மோசமாகியதாம்! உடனே வேளாங்கண்ணித் தெய்வத்துக்கு ''நேந்து'' கொண்டவுடன், அவ்வூசி வெளியேறியதாம். அங்கே மாதா கோயிலில் இதற்கு நிரூபணமாகப் புகைப் படங்கள் இருக்கின்றன.

தங்க ஊசி என்றால் அதற்காகக் கண்களில் குத்திக் கொள்ளமாட்டேன் நான்!

உங்கட்கு ஓர் இதோபதேசம் செய்யலாமா, இலவசமாக!— உங்களுக்கு ஆபீசில் கொறிக்க பட்டாணி, ஓமப் பொடி, வைத்திருங்கள். ஆனால் ஓமப்பொடி பட்டாணி ஞாபகத்தில் ஆபீஸ் குண்டூசிகளை மட்டும் வாயில் போட்டுக் கொண்டு விடாதீர்கள்! என் யோசனை உங்களுக்கு அலட்சிய மாகப் பட்டால், அப்புறம் உங்கள்பாடு, அந்தக் குண்டூசிகளின் பாடு!...

கதைகளிலே ஊசிப் பார்வை செலுத்துவார் கள் வில்லன்கள். இவர்களைத் திரையிலும் தரிசிக்க

லாம். இவர்கள் ஊசி மிளகாய் சாப்பிட்டிருப் பார்கள். அல்லது ஊசிப் பட்டாசு விட்டவர்களாக வும் இருக்கக்கூடும்!

கோணி ஊசி, இந்த ஊசி இனத்திற்கு ''சீனியர்!''

கொண்டை ஊசியையும் சீப்பையும் கொண் டையில் அப்படியே வைத்துக் கொள்வார்கள் பர்மியப் பெண்கள். இங்கே நம் பெண்கள் கொண்டை ஊசியை ரகசியமாகத்தான் உபயோகப் படுத்துவார்கள். ஏனென்றால், நரிக் குறத்தி விற்கும் சாமானல்லவா? ஆனால் கொண்டை ஊசி, கைகொடுக்காவிட்டால் இந்த நாகரிகக் குஞ்சுகளை துளியும் சட்டை செய்யாது அவர்களது தலைமுடி கள் என்பதை மட்டும் அவர்கள் மறந்து விடு வார்கள்!

உணர்வு உள்ள மட்டும் ஊசியின் உணர்வும் இருந்துதான் தீர வேண்டும்!

—★—




முக்காலத்தையும் சமதர்ம இலட்சியத்துடன் பார்த்து, சுதந்தரங் கொண்ட மனிதப் பண்புடன் சிந்தித்து, இதயத்தோடு இதயமாக ஆழ்ந்து அனுபவித்து முக்காலத்தையும் வெல்லும் வண்ணம் பாப்புனைபவனே கவிஞன்—அசல் கவி வாணன் அவனே ஆவான்!

பாரதி காலத்தை வென்றவன்.

அதனால்தான் நாம் அக்காலத்துக்கு வணக்கம் செய்கிறோம்.

வில்லியம் வேர்ட்ஸ்வர்த், ஷெல்லி, காம்பெஸ் போன்றோர் மேலை நாடுகளிலே வானம்பாடி, கிளி,

நாய், இராப்புள் என்று சுட்டிக்காட்டி அழகையும் அழுகையையும் கொட்டி ரசனைப் பாடல்களும் இரங்கற்பாக்களும் செய்திருக்கிறார்கள். இங்கே நம் தமிழ் இலக்கியத்தில் அன்னத்திலிருந்து மட நாரை வரை தூது விடுத்துள்ளார்கள்.

எல்லாம் சரி.

சாதாரணக் காகத்தையும் குருவியையும் பாரதியைப் போல இவ்வளவு இரக்கச் சித்தத்துடனும் மனித தர்மத்துடனும் வேறு யார் பாடியிருக்கிறார்கள்!—இந்தத் துணிவு இந்த மனம்-மாண்பு தமிழ் மரபாகவே வந்து உதித்திருக்க வேண்டும்.

பாரதி பாடுகிறான்; ஜயபேரிகை கொட்டுகிறான்

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெல்லாம் நாமின்றிவேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம்!''

தீக்குள் விரலை வைத்துப் பாருங்கள். சுட்டுப் பொசுக்கிவிடும். ஆனால் இந்தப் புரட்சியாளனுக்கோ தீக்குள் விரலை வைத்தால் தெய்வத்தைத் தீண்டும் ஆன்ம நேயம் உண்டாகிறதாம். அதனால் தான் காக்கைச் சிறகினிலே நந்தலாலாவின்—தெய்வத்தின் கரிய நிறத்தைத் தரிசிக்கும் பரிபக்குவம் உண்டாகின்றது.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறந் தோன்றுதையே, நந்தலாலா!..."

ஆம்; தத்துவத்தின் விதிதான் கவி. சமுதாயத்தின் விதிதான் கவிஞன்!

நாம் தமிழ்ப்பண்பு-தமிழ்ப்பண்பு என்று ஓயாமல் பேசுகிறோம். எழுதுகிறோம். மேற்படி தமிழ்ப் பண்பாட்டின் நிகழ்ச்சி நிரலிலே விருந்தோம்பலும் உண்டு. இத்தகைய ஒரு குண நிலைக்கு அல்லது உண்மையை மறைக்காமல் சொன்னால் இப்படிப்பட்ட ஒரு நவகால நாகரீக மெச்சலுக்கு —ஒரு வழிகாட்டியாக—ஒரு முன்னோடித் தூண்டுதலாக ஒரு காக்கை—ஒரு அழகிழந்த சர்வ சாதாரண பறவை இருந்திருக்கிற அதிசயத்தை நாம் எண்ணுகிறோம். இறும்பூது எய்துகின்றோம்.

கிட்டிய பொருள்களை மறைக்காமல் மறுக்காமல் கரைந்து சுற்றம் கூட்டிக் கூட்டுச் சேர்ந்து உண்ணும் பக்குவ நலம் கொண்ட பெருமை காக்கை இனத்துக்கே உரியது.

"காக்கை கரவா கரைந்துண்ணும்!" இது தமிழ்மறை.

காக்கையைச் சொந்தம் கொண்டாடிய கவிஞருக்குக் குருவியும் இணைப்புச் சேர்ந்தது.

ஓர் அதிசயம் என்னவென்றால் மானையும் மயிலையும் "ஷூட்" செய்த அதாவது படம் பிடித்த சினிமாக்காரர்கள் இப்போதெல்லாம்

காக்கை, சிட்டுக் குருவி, தூக்கணங்குருவி என்று எல்லாவற்றுக்கும் "சான்ஸ்" கொடுத்து வருகிறார்கள். காதல் ஜோடி "டூயட்" பாடத் தொடங்கினால் தோட்டத்து மரத்தில் குயில் ஜோடிகள் ஒன்றைக் காட்டி அதை "கிக்கீ" என்று கத்த-அல்லது பாடச் செய்வார்கள். இந்தக் குயில் காதல் ஜோடியால், டைரக்டருக்கு "அப்ளாஸ்" கிடைத்துவிடும்!

காக்கை கறுப்பு என்றால் என்ன? காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்!

எருது, நோய்ப்பட்டிருந்தால், அதன் மேனியில் சமய சந்தர்ப்பம் பார்த்து உட்காரப் பழகிக் கொள்ளும் இங்கிதத்தை இனியாவது இந்தக் காகங்கள் பழகிக் கொள்ளுவது நல்லது!

மிதிலைச் செல்வியை இலங்கையர் கோன் தூக்கிச் சென்ற செய்தியை ராஜாளி என்னும் பறவை சொல்வதை நாம் சினிமாவில் காது கொடுத்துக் கேட்டதுண்டு. ஆனால் காக்கைபாடினியார் என்ற பெண்பாற் புலவருக்கு இப்படிப்பட்ட பெயர் எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்லியனுப்புங்களேன்!

தூக்கணாங்குருவி தன் கையுழைப்பினாலேயே தனக்கு வேண்டிய கூடு, விளக்கு இரை ஆகியவற்றைத் தேடிக் கொள்ளும். சிட்டுக் குருவி ஜோடி இணைபிரியாத் தன்மைக்கு ஓர் உதாரணம். உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்து ஆக

முடியாதாமே! இது வெறும் ''பருந்துப் பார்வை'ப் பேச்சாக இருக்க முடியாது!

கருட சேவை நற்சகுனம்.

''காக்கை வலம் போனுல் நல்லது. அதற்காக நாம் முறுக்குக் கொத்தைக் கையில் வைத்துக் கொண்டு போனுல், அது கட்டாயம் அது இடது கைப் பக்கம் பாய்ந்துதான் நம் முறுக்குகளைக் கொத்தி கொண்டு பறந்து செல்லும் பணியினின்றும் தப்பாது! உஷார்!...

நற்சகுன சாஸ்திரங்கள் இவை எல்லாம் சரி, யார் போய் இந்தப் பறவைகளைப் பொறுக்கி எடுத்துப் பிடித்து இன்ன திசையில் செல் என்று தாக்கீது கொடுப்பாதாம்?

அகத்திய முனிவர் நிஷ்டை செய்வதற்காக காவிரி எனும் தம் மனைவியை நீராக்கிக் கமண்டலத்தில் அடைத்துத் தம் பக்கலில் வைத்திருந்தாராம். ஒரு சமயம் தேவேந்திரன் ஏதோ வினையால் சூரபத்மனுக்குப் பயந்து பூந்தோட்டப் பராமரிப்பில் ஈடுபட மழையற்று தோட்டம் வாடியதாம். பூலோகம் விட்டு, மேலுலகில் வருந்தினுனும் இந்திரன். உடனே நீர் இருக்கும் ''துப்பு'' கிடைத்ததாம். விநாயகரிடம் சிபாரிசுக்குப் போனுனும். கணநாதன் காக்கை வடிவு கொண்டு, மெதுவாகச் சென்று நீர்க் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டாராம். காவிரி நமக்குக் கிட்டியது! தேவேந்திரனுக்குப் பூந்தோட்டம் செழித்தது!

சனீஸ்வர பகவானுக்கு வாகனம் காக்கை. இந்தக் காக்கையை யாராகிலும் வரும் தேர்தலிலே தேர்தல் சின்னமாகக் கொண்டால், கடைசிப் பட்சம் சனீஸ்வர பகவான் சந்தோஷப்பட்டு, அவர்கள்பால் தம் பார்வையைத் திருப்பாமல் ஒதுங்கியிருக்கக் கூடுமல்லவா?

ஓர் அதிசயம். குயில் முட்டையை காக்கை அடைகாக்குமாம்!

ஊராட்சியிலிருந்து மாநகராட்சி வரை சுத்தப் பணிக்கென எவ்வளவு பணம் செலவழித்தாலும் சரி; அந்தச் சுத்தப் பணியிலே இந்தக் காக்கைகளுக்கும் ஒரு பங்கு நிச்சயம் உண்டு என்பதை யார் தான் மறுக்கக் கூடும்?......



# ஊஹூம் சிரிக்காதே!

ஆபீஸ் முடிந்து வீட்டிற்குள் நுழைந்த என்னை, அமிர்தம் உதட்டில் புன்னகை ஏந்தி வரவேற்றாள். அவள் ஆசை காட்டி, அந்த ஆசையையெல்லாம் ஆனந்தச் சிரிப்பாகப் பண்ட மாற்றல் செய்தவாறு ஏந்தி நின்ற காபியைக் குடிக்கவே எனக்கு ஓடவில்லை. அவள் சிரிப்பு என்னை இல்லாததும் பொல்லாததும் நினைக்கத் தூண்டியது. சோளியன் குடுமி சும்மாவா ஆடும் என்ற பயம் எனக்கு! அவளைப் பொருத்த மாத்திரத்தில் முத்துப் பல் வரிசை லேசாகப் பளிச்சிட்டுமின்னச் சிரிப்பதென்பது அடியார்க் கடியார்க்கு 'க்யூ'வில் கிடைக்கப் பேறு பெறும் தேவதரிசனம் போலத்தான். நான் சிரிக்கிறேன். அவள் என்னைத் தேடி வந்த தெய்வம். தரிசனம் எங்களுக்குள் புஸ்வாணச் சிரிப்பிற்

கும் பட்டாஸ் வெடச் சிரிப்பிற்கும் உள்ள உறவைப் போல.

''அத்தான், காபி சாப்பிடாமல் என்ன இப்படிப் பிரமாதமாக யோசிக்கிறீங்க...! புதுசா தொடர்கதைக்கு 'ப்ளாட்' போடுறீங்களா?''— போதைப் புன்னகையும் காந்தச் சிரிப்பும் கை கொட்டிச் சிரித்தன.

அவள் இப்படி என்னைத் 'தாஜா' பண்ணுவதில் ஏதோ 'பிரகாச தந்திரம்' இருக்க வேண்டுமென்று நானும் நேருவைப்போல யோசனை செய்து அலசி ஆராய்ந்து முடிப்பதற்குள். என் மோனம் பூத்த நிலை கண்டு அவள் கண்கலங்கிவிட்டாள். சரிதான். ஆந்திரப் பிரச்சினைதான்!' என்று தணியும் எந்தன் அமிர்தத்தின் பேசரிதாகம்' என்றேன் சிரித்துக் கொண்டு. அவள் விம்மினுள். என் சிரிப்பும் அவள் அழுகையும் 1:2 விகிதத்தில் வளர்ந்தது. அவள் சிரிக்கச் சிரிக்கப் பேசியதன் விளைவுதானே இன்று என் பணப்பை கண்ணீர்விட்டு எங்கள் குடும்பப் பிரச்சினை ஐ. நா. சபைவரைத் தூது செல்லும் நிலையிலிருக்கிறதென்பதை நான்—அதாவது என் சுய மூளை அறிகிறது. ஆனால் அவள் பிரஸ்தாபித்த நகையை வாங்கித் தருவதாக அரிச்சந்திரன் ஸ்தானத்தில் என்னை நிறுத்தி உறுதி வழங்கினேன் என் பாதி உயிரிடம். என்னை டிசம்பர் பூப்புன்னகை யால் தன்வசமாக்கிவிட்டாள். விரும்பிய நகையை அவளிடம் தண்டனிட்டுச் சமர்ப்பித்ததும்தான். அடியேன் நாடிய நகையை அவள் முகத்தில்

தரிசிக்க முடிந்தது. 'சிரிக்கச் சிரிக்கப் பேசி என் கைவளையல் தொட்டார்...? என்ற பாட்டை அப்போது அவள் மறந்துவிட்டவரை நான் பிழைத்தேன்...!

'லோகோ பின்ன ருசி' என்னும் பழமொழி சிரிப்பவர்களையும், அந்தச் சிரிப்பை ரசிப்பவர்களையும் பொறுத்தமட்டில் மிகவும் பொருந்தும்.

அறிமுகமான நண்பர்களை வழியில் சந்திக்க நேரிட்டால் முதலில் 'வணக்கம்' சொல்லி, பின் அதைத் தொடர்ந்து லேசாக 'ஸ்மைலிங்' ஒன்றையும் பரிமாறிக்கொள்வதுடன் நம் குசலப் பிரசனத்தை முடித்துக்கொள்ளுகிறோம். நட்பின் பண்பாட்டுக்கு முதல்படி புன்னகை.

'சிரிப்பில் எவ்வளவு அடங்கியிருக்கிறது! மனிதனை முழுதும் அறிந்துகொள்ளுவதற்குரிய திறவுகோல் அதுவே. நகைக்க முடியாதவன் துரோகம், தந்திரம், திருட்டு முதலியனசெய்யத் தகுந்தவன்' என்கிறார் அறிஞர் சார்லேன்.

உலகத்தில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் சிரிப்பதற்கென்றே அவனியில் பிறந்திருப்பதைப் போல, இச்சமயம் தப்பினால் மறுசமயம் வாய்ப்பது அரிது என்று அப்படி ஆழ்ந்து அனுபவித்து, ராகம், தானம், பல்லவி முதலிய உபகரணங்களை உள்ளடக்கி ரசிக உள்ளத்துடன் சிரிப்பார்கள். படைப்பின் சிரிப்புக்கு இவர்கள் விதிவிலக்காகலாம்; விதியின் சிரிப்பு இவர்கள் போக்கில் விலக்கு விதியாக

வும் அமையலாம். ஆனால் சிரிப்பது அவர்களுக்கு நிலாச் சோறு உண்பதுபோல. கொடுத்து வைத்த வர்கள்!

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்களின் முகங்களில் சிரிப்பைக் காணவேண்டுமானால், சாம்பிராணி தூபம் காட்டினால்தான் முடியும். ஒருவேளை சிரிப்பிற்கும் இவர்களுக்கும் சிம்ம சொர்ப்பனமோ என்னவோ? மற்றும் சிலர் சிரிப்பதைப் பார்த்துவிட்டால், அப்புறம் நமக்கெல்லாம் இம்மைக்கும் ஏழேழு பிறப்பிற்கும்(!) சிரிக்கவே தோன்றாது. அதற்குப் பதிலாக வாய்விட்டு 'ஓ'வென்று அழுது தீர்த்துவிடத்தான் நாட்டம் கொடுக்கும். இன்னும் ஒரு 'செட்' உண்டு. புன்னகை புரிந்து முப்புரங்களையும் எரித்த ஈசனைப்போன்று இவர்கள் உதட்டின் நுனியில் விஷத்தை ஒளித்து வைத்தவண்ணம் அபாயச் சிரிப்பைச் சிரித்துவிடுவார்கள்! சில பிரகிருதிகள் அசட்டுப் பிசட்டென்று முகத்தில் எண்ணெய் வழியப் பல்லெல்லாம் தெரியக் காட்டிச் சிரித்து, தங்கள் மேல்மாடி காலி என்பதைப் பிறருக்குத் தம்பட்டமடித்துக் காட்டிவிடத் தவறுவதுமில்லை. பைத்தியத்தின் 'ட்ரேட்மார்க்' டார்பிடோச் சிரிப்பு என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது.

'சிரிக்கத் தெரிந்தவன் பாக்கியசாலி; பிறரைச் சிரிக்கப் பண்ணுபவன் பெரியவன்? தனக்குள் சிரித்துக்கொள்ளுபவன் ஈடுசோடில்லாதவன்' என்கிறது ஆராய்ச்சிப் புத்தகம்.

பெரிய மனிதர்களில் ஒன்றிரண்டு பேர்வழிகள் எடுத்ததற்கெல்லாம் தங்கள் திருவாயைத் திறந்தால், எங்கே தம் பெரிய மனிதத்தன்மை மாற்றுக் குறைந்துவிடுமோ என்று பயந்து சிரிப்பு விஷயத்தில் ரொம்பவும் கட்டுச் செட்டாக இருக்கப் பிரயத்தனப்படுவார்கள். ஆனால் அவ்விதம் அவர்கள் சிரித்தாலும், சிரிக்காவிட்டாலும், உலகம் அவர்களைக் கண்டு கட்டாயம் கைகொட்டி எள்ளி நகையாடும் என்பது மட்டும் நிச்சயமே! 'சிரி! உலகம் உன்னோடு சேர்ந்து, சிரிக்கும்!' என்கிறாரே ஆசிரியர் எல்லா வீலர்!

இப்போது நாட்டிலே சிரிப்பு ஒன்றுக்குத்தானே ரேஷன் இல்லை! சிரிப்பின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் வகையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் சமூக ஊழியர்கள் என்றால் நீங்கள் சிரிக்கத்தான் சிரிப்பீர்கள். அவர் கடன் களிப்பூட்டுதல்...! நாம்தான் அவருக்குக் கடன் பட்டவர்கள்—நாம் சிரிப்பதால், நமக்குச் சிரிக்கத் தெரிவதால், நம்மால் சிரிக்க முடிவதால்—! உலகின் துன்பத்தையும், மாந்தரின் பொய்க் கவலைச் சுமையையும் ஒரு நொடியேனும் போக்க உதவுபவன் போற்றப்படவேண்டியவன்.

"கொள்ளைச் சிரிப்பினிலே;
கொட்டிடுவாள் தேனமுதம்
வெள்ளைக் குதலைமொழி
விந்தைபல செய்யுமம்மா!"

பச்சைக் குழந்தைகள் கள்ளங் கபடமற்ற கதுப்புக் கன்னங்களில் குழிவு தோன்றச் சிரிக்கையில், அவர்களது களி துலங்கும் வெள்ளை உள்ளத்தின் குலுங்கும் கொள்ளைச் சிரிப்பில் மனம் பறிகொடுத்துப் போகாதவர்கள் யார்தான் இருக்க முடியும்?

''புன்னகை பூத்திடும் வேளை—ஒரு
புதுமையும் காண்பதேனோ''

என்றுதானே நமக்கும் கவிமணியைப்போல எண்ணத் தோன்றுகிறது...!

உடல் பெருக்க என்னென்னவோ விளம்பரங்கள் வருகின்றன. ஆனால் 'சிரி; பருமனடை, என்ற வாசகத்தை ஒதுக்கி வைத்து விடுகிறார்கள், இன்றையக் காஷ்மீர் பிரச்சினையைப்போல், சந்தோஷம் பரம ஔஷதமாம்!

அமெரிக்காவுக்கும் ஐஸன்ஹோவருக்கும் உள்ள உறவு, புன்னகைக்கும் பூவையர்க்கும் இருக்க வேண்டும்.

சிரிப்பு விஷயத்தில் கொஞ்சம் கணிசமாகத்தான் இருக்கவேண்டும் பெண்கள். அதுதான் நியதியுங்கூட. சாதாரணமாகப் பெண்கள் சிரித்த முகத்துடன் காணப்பட்டால் ''ஸார், அந்தப் பெண்ணைப் பார்த்தீர்களா? லட்சுமி களை நிறையத் ததும்புகிறது. களையான சிரித்த முகம்...'' என்பது போன்ற இப்படிப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களை ஸ்வீகரித்துக்கொள்ளத் தூண்டுவதற்கு மூலகாரண

மாக இருப்பதும் இந்த இளநகையே அல்லவா? அப்புறம் அவர்களுக்கெல்லாம் 'கல்யாண மார்க்கெட்'டில் ஏற்படும் மௌஸைப் பார்க்கவேண்டுமே! ஆனால் அவர்கள் மட்டும் 'அழகர்கள் போட்டி'யை மட்டும் உலக அரங்கில் பிரஸ்தாபிக்காதிருக்க வேண்டும். வேண்டுமானால், 1953ம் வருஷத்திய ஓராண்டுத் திட்டப்படி சுயம்வரம் ஏற்படுத்திக்கொள்ளட்டும்; துரைத்தனத்துக்குத் தூது அனுப்பி யதாஸ்துவிடுவோம்.

'முள்ளெடுக்கும் பாவனையில் முல்லை நகை பூத்த' சகுந்தலையின் வாரிசுக் காதலாவது புன்னகையால் பிறந்து வளரட்டும்! ஆனால்...

பட்டிதழ்ப் புன்னகைமெட்டி சைத்து—காதற்
பாட்டுக்குப் பொருளாகப் பின்னலிடைத்
தொட்டுத் தொடர்ந்திடும் காதலெனில்—அவன்
தூவிய குறிப்பென்ன புன்னகையோ!"

என்று பாட்டெழுதக் கன்னியர் குழாம்மட்டும் பேனா பிடிக்கக்கூடாது...! ஆக, புன்சிரிப்புக்குப் பதிலாக கண்களும் சேர்ந்து சிரிப்பில் லயித்துவிட்டால்...!

அத்தி பூத்த மாதிரி முத்துப் பல் ஒளி சிந்தச் சிரிக்கும் சிரிப்பு பெண்களுக்கு ஆபரணம். வேறு எந்தப் பொன் நகையும் அவர்களது புன்னகைக்கு முன் ஈடு நிற்க முடியாது. 'புகையிலை விரிச்சாப் போச்சு; பொம்பளை சிரிச்சாப் போச்சு' என்ற பழ

மொழி பெண் இனம் அளவு மீறிச் சிரிப்பில் ஈடு பாடில்லாதிருக்க எழுந்த எச்சரிக்கையாகத்தான் இருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே? (அடடே, அமிர்தம், உன்னைச் சொல்ல வில்லை. நீ அளவுக்கு மிஞ்சும்போதுதானே அமிர்த மாகிறாய்!) அதே சமயம், முன்பு பளிங்கு மண்டபத் திலே பொங்கி வழிந்த சிரிப்பை திரௌபதை அடக்கச் சக்தியற்றுப்போக அதன் காரணமாக, துரியோதனன் கோபங்கொண்டு பிறகு பாரத யுத்தமே பிறந்ததாகக் 'கதை' சொல்லப்படுவதைக் கேட்கும்போது, சிரிப்பு விஷயத்தில் ஒரு 'கண்' ஜாடையாக வைக்கத் தோன்றுவது சகஜம்தான்...!

ஊழித் தாண்டவத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக்கு ஒப்பு உவமை இல்லையாமே! இது கூடக் கதைதானோ...!

காரிய சித்திக்குக் கைகண்ட ஆயுதம் இந்தச் சிரிப்பு. பொங்கலுக்குச் சட்டை தைத்தாக வேண்டுமானால், டெய்லர் மாபூப் சாகிப்பிடம் செய்தியைச் சொல்லி, அத்துடன் 'நியாய விலை ரேஷன்' ரீதியில் அளந்து முறுவல் கீற்றொன்றைச் சிந்தினால், உடனே காரியம் கைமேல் பலன். ஆபீஸ் செல்லக் கொஞ்சம் நாழி ஆகிவிட்டால், மானேஜ ரிடம் நீங்கள் புன்னகை மலரை உங்கள் உதட் டோரத்திலும் கண்ணோரத்திலும் தூவிவிட்டு, பிறகு பெண்டிங்கில் வைத்திருக்கும் நொண்டிப் புளுகையும் ஒருமுறை ஒப்புவித்துவிட்டால் போதுமே...! சிரிப்பு உங்களை ஆபீஸ் நாற்காலியில்

அலக்காகத் தூக்கி வைத்துவிடாதா, விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தைப்போல?

குடும்பச் சச்சரவுகளில் தம்பதிகளின் மனதில் படியும் வேற்றுமை உணர்ச்சியை அலம்பித் துடைத்துவிடும் புனிதத்தன்மை பொருந்தியது, சிரிப்பு.

அந்நாளில் சிரிக்கவைப்பதற்கென்றே, அரண் மனைகளில் 'விதூஷகன்' ஒருவன் நியமிக்கப்பட்டிருந்தான்...!

இந்தச் சிரிப்பிற்கும் இந்த எழுத்தாளர்களுக்கும் மட்டும் நிரம்ப நெருக்கம் இருந்து வருகிறது, கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் கை குலுக்கிக்கொள்ளுவதைப் போல. மன் காடின் வெற்றி கண்டு பாகிஸ்தான் மலைப்பதைப்போல, சிரிப்பினால் காதலைத் தோன்றச் செய்து, கல்யாணம் செய்துவைத்து, நம்மையெல்லாம் விருந்துக்கு அழைப்பார்கள் கதாசிரியர்கள். அதே சிரிப்பினால் பின் குடும்பங்கள் பிளவுபடுவதைப் படிக்கும் நாம், கிங்காங் ராட்சச மல்யுத்த மனிதனைக் கண்டு நடுங்குவதைப்போல நடுங்கவும் வேண்டி வருகிறது. ஆனால் ஒன்று...! இந்த எழுத்தாளர்கள் மட்டும் காதலி, அல்லது காதலன் உதடுகளில் சிரிப்பை மட்டும் வரவழைக்காமல் கதைக்கு 'சுபம்' போடமாட்டார்கள். வாழ்க!

'புன்னகையும் புது நிலவும்போல தாங்கள்

அதாவது என்னையும்—என் அமிர்தத்தையும் வாழ்த்தியதை நான் மறந்தாலும். அமிர்தம் மறக்க மாட்டாள். ஏனென்றால், சிரிப்பு பற்றிய இக் கட்டுரைக்கே அவள் குமிழ் சிரிப்புத்தான் காரணம். கட்டுரை வெற்றிபெற்றால் கட்டாயம் அவளுக்குத் தான் இந்தச் சிரிப்பைக் காணிக்கை செலுத்தப் போகிறேன்!

ஒரு சமயம் என் புத்தகம் ஒன்று வந்தது. 'அமிர்தம்' என்று பெயர் புத்தகத்துக்கு. இது பிரசுரத்தார்கள் இட்ட பெயர். ஆனால் இதைக் கண்டு என் மனைவி கொட்டிய கொள்ளை முறுவல் வெள்ளத்திற்குக் குவலயமே ஈடில்லை. ஏனென்றால் அவள் பெயரும் அதுதானே. நானே வேண்டு மென்று அவள் நினைவாக அவள் பெயரையே புத்தகத்திற்குச் சூட்டிவிட்டதாக அவள் நினைத் திருக்கிறாள்! நல்லவேளை, புத்தகத்தின் அட்டையை யும் தனதாக்கிக்கொள்ளாமல் என்னைத் தப்புவிக்கச் செய்துவிட்டாள்...!

கலைக் கண்களுடன் உற்று நோக்கினால் வானம் சிரிப்பதையும், வையம் சிரிப்பதையும் பூ புன்னகைப் பதையும் இயற்கை சிரிப்பதையும், நிலா, அருவி சிரிப்பதையும் கண்கூடாகக் காணலாம். பூக்கள் சிரிக்கின்றன; புள்ளினங்கள் நகைக்கின்றன. தெரி யாமலா அழகின் சிரிப்பைப் பாடுகிறார் நம் கவி யரசர்!

'ஊஹூம் சிரிக்காதே' என்று 144 போடும் நிலையிலும்கூட—அதாவது துக்கத்தின் வரம்புமீறிய

நிலையிலுங்கூட நாமெல்லாம் சிரிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். உள நூல் இப்படிச் சொல்லுகிறது. பார்க்கப்போனால் சிரிப்பது ஒரு கலை என்று தான் சொல்லவேண்டும். மனம்விட்டுச் சிரிக்க வேண்டும். விளக்கெண்ணெய் புகட்டியதற்காக அழும் குழந்தை, சர்க்கரை சாப்பிட்டதும் உடனே சிரிப்பதுபோல, இன்றைய இரவின் இருட் துயரில் நாளை உதயமாகும் நம்பிக்கை ஒளியை எண்ணிச் சிரிக்கவேண்டும்.

'ஹாஸ்யம்—சிரிப்பு, தூய்மையான ஓர் ஆனந்தம்' என்கிறார் ஸ்ரீபிரகாசா.

போட்டோ எடுத்துக்கொள்ளப்போனால் ஸ்டுடியோவில், 'ஸார், கொஞ்சம் லேசாகச் சிரியுங்கள்' என்கிறான் காமிராக்காரன். சினிமா ஸ்டுடியோவில் நம் நடிகைகளிடம் சிரிப்பை வரவழைப்பதற்கு, கண்ணீரைக் காணிக்கை செலுத்தித் தவம் கிடக்கும் டைரக்டர்களைப் பற்றிய கதையை நாம் அறிய மாட்டோமா, என்ன? பத்திரிகைகளில் 'டால்' அடிக்கும் சோப்பு விளம்பரங்களில் கோலப் புன்னகை குருத்துவிட நம் நட்சத்திரங்கள் காட்சியளிக்கிறார்கள் நம் புன்னகைக்குப் பரீட்சை வைப்பதுபோல. இவர்கட்கெல்லாம் ஏன் நம் அரசாங்கச் சார்பிலே கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சிரிப்புப் போட்டி வைக்கக்கூடாது. அண்மைப் புயல் நிவாரணத்துக்காகிலும் பணம் சேருமே! அதைவிட, அவர்களது பூங்கரங்கள் கிரிக்கெட் மட்டை பிடிக்கும் தலையெழுத்தும் மாறிவிடும்; எக்ஸிபிஷனில்

கடைகளில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் தலை வலியும் எட்டிப்போய்விடும்...; சென்ற ஆண்டு நட்சத்திரங்களின் பொங்கல் தமாஷ் பலேஜோர்! ஏன், இவர்களையெல்லாம் சேர்த்து தேர்தல் வாடையே இல்லாமல் கூட்டணியாக்கி, நம் சிரிப்பின் கலையை அயல் நாட்டுக்கும் பரப்ப ஒரு தூதுகோஷ்டி அனுப்பக்கூடாது...! நம்மிடம்தான் கலைவாணர், புளி மூட்டை...! ஊஹூம், தொடராது இது!

''சென்னை நகரின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் வளர்ந்து இப்பொழுது யாருக்குச் சொந்தம் எனும் சர்ச்சை பிரமாதமாக நடக்கிறது. ஆனால் சென்னையை இரண்டாகப் பிரித்தால்கூட என்னையே கவர்னராக வைத்துக்கொள்வதாக எல்லோரும் கூறுகின்றனர்...''

இப்படிச் சமீபத்தில் நம் கவர்னர் ஸ்ரீபிரகாசா கூறுவதைக் கேட்க யார்தான் சிரிப்புக்கு இடம் தராதிருக்க முடியும்? இம்மாதிரிதான் நீதிபதி ஏ.எஸ்.பி. ஐயரின் பேச்சு ஒவ்வொன்றிலும் நகைச்சுவையும் சிரிப்பும் இரண்டறக் கலந்திருக்கும், கொரியாவும் கொரியப் பிரச்சினையும் மாதிரி!

என்னைச் சிரிக்க வைக்க சிட்டி, பரதன், கல்கி, சுந்தா, சுகி, நாடோடி, ஸ்டீபன் லீகாக், ஷா, செஸ்டர்ட்டன் போன்றவர்கள் தினமும்—என்னை, அதாவது பங்களாவில் புடைசூழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நான் சிரிக்

கிறேன்; சிரிக்கிறேன்; சிரித்துக்கொண்டே இருக்கிறேன். சிரிப்பே என் உலகம்; சிரிப்பே என் படைப்பு; நானே சிரிப்பின் படைப்பு! சிரிப்பே என் சிரிப்பு!

சிரிப்பிலே 'குமரிச் சிரிப்பு' 'காந்திச் சிரிப்பு', 'பொங்கல் சிரிப்பு', 'மஞ்சிவிரட்டுச் சிரிப்பு', 'கன்னிச் சிரிப்பு', 'டார்பிடோச் சிரிப்பு', 'முல்லைச் சிரிப்பு' என்று இப்படிப் பலரகம் உண்டு. பெயர்களைக் கேட்டுவிட்டு ஏன் அமிர்தம், இப்படிக் குலுங்கக் குலுங்கக் கும்மாளமிட்டுச் சிரித்துக் கொட்டுகிறாய்? உஷ்...ஊஹூம், சிரிக்காதே...!

# குப்பைக்கு ஒரு கும்பிடு!

நான் சொல்வதெல்லாம் உண்மையேயன்றிப் பிறிதொன்றில்லை என்று சத்தியம் செய்கிறேன்.

வருஷப் பிறப்பன்று பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு ஊர் திரும்ப, எழும்பூர் ஜங்ஷனில் வந்து நின்றேன். திடுதிப்பென்று மேற்குப் புறத்திலிருந்து பயங்கரக் கூச்சல் கேட்டது. ஜனங்களும் ஓடத்தலைப்பட்டனர். நானும் ஓடினேன். நான் ஒருவன் வராவிட்டால் அதற்காக ரெயில் நிற்கவே நிற்காது. அது தெரியும். தெரிந்துதான் ஓடினேன். குப்பைத் தொட்டியில் யாரோ பிடி கொளுத்திப் போட்டு விட்டானும், அவ்வளவுதான். தீ, குப்பையைப் பற்றி, அத்துடன் பற்ருமல், அடுத்திருந்த ஒரு பெரிய பங்களாவின் முகப்புக் கீற்றுக் கொட்டகை யையும் எரித்து விட்டது. குப்பை கோபுரமாகாது என்றுதான் எனக்குச் சொல்லித் தந்திருக்கிருர்கள். ஆனல் அன்று குப்பை, கேவலம் குப்பையானது ஒரு பங்களாப் பிரச்னையாக மாறி, அது அரசாங்கக் கோட்டை அளவிலும் போய்ச் சேர்ந்து விட்டது.

குப்பை விளைவித்த அதிசயத்துடன் ரெயிலை அடைந்தேன். என்ன ஆச்சரியம்! எனக்காக ரெயில் காத்திருந்தது. வண்டியில் ஏறிக் கொண்டேன். ஆமாம், ஐயா! டிக்கெட் வாங்கிக் கொண்டுதான்!

வீட்டுக்கு வந்ததும் இந்தக் குப்பையைப் பற்றியே என் மனம் சதா சுற்றித் தொலைத்தது. அதைப் பற்றி எதையாவது கிறுக்கினுல்தான், என் மூளை சமாதானமடையும் என்று எண்ணினேன். அதன் விளைவுதான் இக்கட்டுரை.

இவ்வளவு காலம் எழுதி முடித்துவிட்டு, இப்போது இருந்திருந்து குப்பையைப் பற்றி எழுதத் தொடங்கி இருப்பது கண்டு நேயர்கள் என் பேரில் ஏளனம் காட்டாமல் இருக்க வேண்டுமென்று தான் இவ்வளவும் சொன்னேன்!

குப்பையின் மகிமைக்கு ஓர் உண்மையைச் செப்பினுல் போதும்!

அதாவது, பொழுது பிறந்து பொழுது போனுல், குப்பைப் பிரச்னைதான் நம் வீடுகளிலே எடுத்த எடுப்பில் தலை தூக்குகிறது. ''குப்பையைப் பெருக்கினுல்தானே வீட்டில் லட்சுமி தங்குவாள்?'' என்று ஒவ்வொரு மனையிலும் வீட்டுத் தாய்மார்கள் எச்சரிக்கை செய்வதை எப்படி காலையில் மறக்காமல் இருக்கிறுர்களோ, அது மாதிரியாகவே அந்திப் பொழுதிலும் இருந்து எச்சரிக்கை விடுக்கிறுர்கள்! அந்தியிலேயே வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து குப்பையை அப்புறப் படுத்திவிட

வேண்டும் என்பதும், விளக்கு வைத்து விளக்கு மாற்றைக் கையில் எடுக்கக் கூடாது என்பதும் பெரியவர்கள்ன்-குடும்ப அதிகாரிகளின் சித்தாந்தம்; பண்பாடும்கூட!

இனிமேல்தான் குப்பையின் மகாத்மியம் ஆரம்பம்.

பிரமசாரி வாலிபன் ஒருவன் ஒரு வீட்டின் அறையொன்றில் — அதாவது, ''காதல்'' நடமாடும் அறையொன்றில் வாடகைக்கு இருப்பான். அவன் அறையில் வெறும் குப்பை கூளம் நிறைந்து கிடக்கும். பலநாள் பார்த்து மனம் பொறுக்காத வீட்டுக்காரரின் அல்லது, வீட்டுக்காரியின் கல்யாணமாகாத மகள் கல்யாணத்துக்காக ஒற்றைக்கால் தவம் இயற்றும் மகள்-பிரமசாரியின் அனுமதியைக் கோராமலேயே அங்கே அவன்முன் பிரசன்னமாகி, அங்குள்ள குப்பைகளை நகச் சாயம் கெடாத வகையில் ''ஸ்டைலாக''வும் ஒயிலாகவும் நின்று பெருக்கி வீசிவிட்டு, உடனேயே அந்த அப்பாவி பிரமசாரியை-அப்-பாவி பிரமசாரியை ''லவ்'' பண்ணவும் ஆரம்பித்து விடுவாள்!

அப்புறம் மீதிக் கதைதான் உங்கள் எல்லோருக்கும் தெரியுமே!

சில இடங்களிலே, மாடி வீட்டுக் கன்னி இளமான்கள் மேலே நின்ற வாக்கிலே குப்பைக் கூடையைக் கீழே கவிழ்ப்பார்கள். அந்தக் குப்பை சொல்லி வைத்தது போல, அங்கு வழியில் நடந்து

செல்லும் இளவட்டத்தின் மீது, அந்த டெர்லின் ஸ்லாக் கசங்காத வகையில்—விழும். கீழே உள்ளவன் மேலே பார்ப்பான்.

'அண்ணலும் நோக்கினுன்!
அவளும் நோக்கினுள்!''

இந்தப் பாட்டு வேறு கேட்கத் தொடங்கி விடும். மாடி வீட்டுப் பாவை கீழே இறங்கி வந்து—இறங்கி வந்து அந்த யுவனை நேர் கொண்ட பார்வையால் நோக்குவாள். ''ப்ளீஸ் எக்ஸ் யூஸ்மி!...'' என்று கம்பீரமான குழைவுடன் நெளிந்து நெளிந்து—முகப் பவுடர் பூச்சு வெடித்து உதிராதபடி — மன்னிப்புக் கேட்பாள். குற்றத்தை உணர்ந்த அந்தப் பேசும் கிளியை பெரிய மனசு பண்ணி மன்னித்து, தன்னுடைய நிலையை தெய்வத்தின் அந்தஸ்துக்கு உயர்த்திக் கொள்ளுவான் அவ்வாலிபன். போக மனமில்லாமல் அவன் மறுக, போகச் செய்யாமல் இவள் மறுக, இப்படிப்பட்ட ''காதல் தவிப்பு'' சில கணங்கள் தொடர, கடைசியில் ''மாரன் கணை'' தெய்வமே என்று அல்ல, ''ஏ மன்மதப் பிரபுவே!'' என்று குறுக்கிட்டு, அவர்கள் இருவரையும் சம்சார சாகரத்தில் தள்ளி வேடிக்கை பார்க்கவும் செய்து விடும்!

''ஏண்டி பாமா! நீ இப்படியே அசமந்தமாய் இருந்திண்டே யிருந்தா, புக்ககத்திலே போய் எப்படியடியம்மா குப்பை கொட்டப் போறே?'' என்று அருமை மகளைச் செல்லமாகக் கடிந்து

கொள்ளும் அன்புத் தாய்மார்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். இதற்கு விடையாக, ''என்னம்மா இது? சந்திரமண்டல யாத்திரையிலே வெறும் சூன்யத்திலே நாலு நிமிஷம், ஆறு நிமிஷம்னு நடந்திண்டு திரும்பற இந்த யுகத்திலே இப்படி நீ என்னைக் கேட்டா, நான் என்னம்மா பண்ணுறதாம்? புக்ககத்துக்கு குப்பையைக் கொட்டவா போவா? குப்பையை அப்புறப்படுத்தன்னு போவா!'' என்று யாரும் ''ரிடார்ட்'' செய்ததாக, நாம் பத்திரிகையில் நாளது வரையிலும் படித்தது கிடையாது. ''குப்பை கொட்டுவது'' என்ற குறிப்பு, ''எவ்வாறு குடும்பம் நடத்துவது:'' என்பதைச் சுட்டுவதற்கே பயன்படும் சொற்றொடராகவே நாம் கொள்ள வேண்டும்.

நம் நாட்டிலே குப்பையை வயலுக்கு உரமாக உபயோகப்படுத்துகிறோம். எருக் குழியாகவும் அதே குப்பைக் கிடங்குதான் பயன்படுகிறது. அடுப்புச் சாம்பல், காய்ந்த சருகு, புளிய ஓடு, நெல் உமி, கொஞ்சம் எரு-இவ்வளவும் சேர்ந்து குப்பையின் தரம் — விஞ்ஞானத்தரமல்ல — விலைத் தரம் உயர்த்தி, (அசந்து மறந்தால் தெரு மணலைக் கொட்டி மூடி, குப்பையைப் பெரிதாகக் காட்டுவோரும் உண்டு) அதன் மூலமாக விலையையும் உயர்த்தி விடுவது சகஜம். எங்கள் பக்கங்களிலே இந்தச் சர்வ சாதாரணமான குப்பைக்காக எங்கள் பகுதிப் பெண்கள் சண்டை போட ஆரம்பித்து, பதினெட்டு நாள் நீடித்து பாரத மகிமை

உண்டாக்கி விடுவதும் வழக்கம். இவர்கள் செம்புத் தண்ணீரை மட்டுமே குடித்துவிட்டு, நாள் கணக்கில் ''ட்யூன்'' போட்டு பாடும் பாட்டை— எதுகை மோனைச் செழிப்புப் பாட்டைக் கேட்டால், சினிமாக்காரர்கள் அப்படியே மயக்கம் போட்டு விழுந்து விடுவது நிச்சயம்!

ஆடி அண்டுகிறதல்லவா, அப்போதெல்லாம் எங்கள் நாட்டுப் புறங்களிலே குப்பைப் பருவம் ரொம்பவும் கூடுதல். பத்திரிகைக்காரர்கள் பணம் கேட்பதால், குப்பை ''ரேட்'' விவரத்தை வெளியிட முடியாமல் எங்கள் ஆட்கள் தவிக்கிறார்கள். அதற்காக, அலஞ்சிறான் காடு செல்லையா, ஆவணத் தான் கோட்டை அம்பலம், குளமங்கலம் கங்காணி, மாங்குடி செட்டியார் எல்லோரும் நான் முந்தி--நீ முந்தி என்று குப்பைக்குப் பணம் கொட்டிக் கொடுத்துக் கொடுத்துப் போட்டிப் போட்டுக் கொண்டு ஓடாமலா இருக்கப் போகிறார்கள்?

கேவலம் குப்பை என்போம்!

சீனக்காரர்கள் பண்டைய நாட்களிலே மனிதர்களின் சித்தபேதத்துக்குத் தெளிவுண்டாக்க, குப்பைக் குழிக்களுக்குள்தான் புதைத்து நாட் கணக்கில் அப்படியே வைப்பார்களாம்! இவர்களது ''மூளைச் சலவை'' முறைக்கும் இதுவேதான் பிள்ளையார் சுழி இட்டது போலும்!

எங்கள் வீட்டுக் குப்பை மேட்டில் நின்று சேவல் ''கொக்கரக்கோ'' பாடினால்தான் பொழுது பலா

றென்று விடியும். ஆனால் நாங்கள் ஆயிரம்தான் ''ரோஜா குல்கந்த்'' செய்து போட்டாலும், அந்தச் சேவலுக்கு குப்பையைக் கிளறும் புத்தி மட்டும் போவதில்லை. குப்பையில் குருக்கத்தி முளைத்த கதைதான் அது. குப்பையில் குன்றிமணி யாக அந்த ''டாக்டர் கொக்கரக்கோ'' இருந்து விடக்கூடாதா, கடவுளே!

பணம்தான் பந்தியில் பேசும். பணம் இருந்து விட்டால், குலம் குப்பையில்தானும்! அதைப் பற்றி யாரும் சட்டை அல்லது ''ஸ்லாக்'' பண்ண மாட்டார்களாம்! வாஸ்தவம்தான்!

இன்றைக்கு அரசனுக் இருப்பான் நாளைக்கு அவனே ஆண்டியாவதும் உண்டு. அதுவே அப்படி யிருக்க, இந்தக் குப்பைகள் ஒரு நாள் குருட்டு அதிர்ஷ்டத்தினால் உயர்ந்து, கோபுரங்கள் ஒரு நாள் கெட்ட நேரத்தினால் தாழ்ந்துவிடுவதும் இல்லையா? திருடர்கள் தாங்கள் திருடிய வைரங் களைக் குப்பையில் குழிபறித்துப் புதைத்து மறைத்து வைத்து விட்டார்களாம், எங்கோ ஓரிடத்திலே!... அப்புறம் குப்பைகள் கோபுரமாக உயர்ந்து விடு வதில் அதிசயம் என்ன இருக்க முடியும்?

குப்பையிலும் இனப் பாகுபாடு ரொம்பவும் உண்டு. ஆசாரிப் பட்டறைக் குப்பை என்றால், அதைக் கிளறினால் ஒரு குன்றிமணி தங்கமாவது சிக்காமல் இருக்காது. அதற்காக, ஒரு சலூன் குப்பையை யாராவது கிளறுவார்களா? ஆனால்

அந்தக் குப்பைக்கும் ''மவுஸ்'' இல்லாமல் இருப்பதில்லையாம்!—

குப்பை கூளங்களை அப்புறப்படுத்தும் பணியில் இயற்கையின் செல்வமிகு தூதுவர்களாக காக்கைகள் உலவுகின்றன. அரசாங்க முத்திரைகளுடன் குப்பை வண்டிகள் உலவுகின்றன. இம்மாதிரிப் பணிக்கென்றே ஒரு தனிப்பட்ட செக்ஷனே இயங்குகிறதென்றால், குப்பைக்குள்ள அந்தஸ்து—ராசாங்க அந்தஸ்து உங்களுக்குப் புரிகிறதல்லவா?

துப்பறியும் நிபுணர்களுக்கு எவ்வளவோ சமயங்களில் இந்தக் குப்பைகள் கை கொடுத்திருக்கின்றன! ''சஸ்பென்ஸ்'' தலங்களாக இதே குப்பைகள் பரிமளிக்கின்றன--என்னுடைய இரண்டொரு கதைகளிலே!

காதலுக்கும் இந்தக் குப்பைக் கூடைக்கும் வெகு பொருத்தம் உண்டு. எத்தனையோ காதல் கடிதங்களை ஒன்றுமில்லாமல் ஆக்கி மென்று விழுங்கி ஏப்பம் விட்ட மகாபுண்ணியம் இந்தக் குப்பைக் கூடைகளுக்கு உண்டு.

எங்கள் நாட்டிலே-அதாவது ஊரிலே சிறுவர் சிறுமியர் மணலைக் குவித்து வைத்து, பிறகு அதைக் கலைத்துவிட்டு விளையாடுவார்கள். விளையாட்டுடன் பாட்டும் விளையாடும்.

''குப்பையைக் குப்பையைக் கிளறி
கோணல் கையாய் போச்சு!

ஆவுடையார் கோயிலுக்குப் போனேன்
அழகு கையாய் வந்திடுச்சு!...''

குப்பைப் பாட்டு அழகாக ஒலிக்கின்றதல்லவா?

கைம்மை நோன்புக்கு ''குப்பை சால் குணமலிக் கீரை''யை விலக்கியும், உடல்வள நல்லாரோக்கியத்துக்கு அதே குப்பைக் கீரை வகைகளைச் சேர்த்தும் வருகிற பழந்தமிழ்ப் பாக்கள் புறநானூறு போன்றவற்றுள் பல உண்டு.

# டாக்டர் கொக்கரக்கோ

இந்தச் செய்தியை நீங்கள் அதற்குள் மறந்து விட்டிருக்க மாட்டீர்கள்!

திருமதி இந்திரா காந்தி பாரதத்தின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி லண்டன் மாநகரில் படித்துக்கொண்டிருந்த அவரது புதல்வர் தன்னுடைய சிநேகிதர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தார். விருந்துக்கு பாரதத்தின் தலைநகரிலிருந்து கோழி ஒன்று தருவிக்கப்பட்டது. மேற்கண்ட விருந்தின் சுவைக்குப் பிரதம பொறுப்பேற்றிருந்த அந்தக் கோழியின் மகிமை மிகவும் சிலாகிக்கப்பட்டது. இதன் மூலமாக பாரதக் கோழிக் குலத்துக்கே ஒரு ''மவுஸ்'' ஏற்பட்டுவிட்டது!

இச்செய்தியை அறிந்த பாரத நாட்டுக் கோழிகள் எல்லாம் ஓர் அடி கூடுதலாக உயர்ந்து மகிழ்ந்தனவாம்; கோழிகளின் அன்புக்குப் பாத்திரமான சேவல்கள் சிவப்புக் கொண்டைகளை ஓர் அடி உயர்த்தி ''கொக்கரக்கோ'' கீதம் பாடினவாம்!

நடைமுறை வாழ்விற்கும் இந்தக் கோழிகளின் இனத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து கொண்டுதான் வருகிறது. இந்தத் தொடர்பு இன்று நேற்று வந்ததல்ல; தொன்றுதொட்டு வந்ததாகும். உலகத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே கோழி முட்டையின் அறிமுகம் உண்டாகி விட்டிருந்ததாகச் சொல்வார்கள்.

எப்படி என்று தெரியுமா!

யாரோ ஒருவன் உலகத்தின் அமைப்பு எப்படி இருக்குமென்று சந்தேகம் கேட்டானும்!

உடனே இன்னொருவன் கோழி முட்டை வடிவத்தில் உலகம் இருக்கும் என்றானும்.

அக்கணமே, அந்த மனிதன் கோழி முட்டையைத் தேடிப் போனானும்! முட்டையைப் பார்த்துவிட்டால், உலகத்தின் அமைப்பை நிர்ணயம் செய்துகொள்ளக் கூடுமென்று எங்கு தேடியும் முட்டையும் கிடைக்கவில்லையாம்! கோழியும் கிடைக்கவில்லையாம்! மனமுடைந்த அம்மனிதன் திரும்பிவந்து கொண்டிருக்கையில், பள்ளிப்பிள்ளை ஒருவன் அழுதுகொண்டே வந்தானும்.

''ஏனப்பா அழுகிறாய்?'' என்று முட்டை தேடி வந்தவன் கேட்டானும்.

''வாத்தியார் முட்டை போட்டு விட்டா ரய்யா!'' என்று அந்தப் பிள்ளை அழுதானும்.

தேடிப்போன முட்டை வழியில் கிட்டிவிட் டதே என்று சந்தோஷப்பட்ட அந்த அப்பாவி, அந்தப் பையனின் சிலேட்டுப் பலகையில் இருந்த ''சைபர்'' அடையாளத்தையே முட்டை என்று அறிந்து, அந்த ''சைபர்'' வடிவத்தையே முட்டை யாகக் கற்பனை செய்துகொண்டு, அந்தக் கற்பனை யின் வடிவத்திலேயே உலகத்தின் அமைப்பினையும் கணித்துக் கொண்டானும்!

இது ஒரு கதை!

முட்டைக்கும் பள்ளிப் பிள்ளைகளுக்கும் இருக் கக்கூடிய ஒட்டுறவு ஒரு பக்கம் இருக்கட்டும்.

முட்டை, வாழ்க்கையில் பெற்றிருக்கக்கூடிய இருப்பிடமும், அந்தஸ்தும் உள்ளனவே, அவை உடலியல் ஆரோக்கியத்தின் சாஸ்திரத்தால் உண் டாக்கப்பட்டவையே அல்லவா?

ஆரோக்கிய நல்வாழ்வுக்கு முட்டையிலுள்ள 'பி' வைட்டமின் மிகவும் பயன் தரவல்லது. முட்டையின் வெள்ளைக் கருவில் 100 சிரெடையில் ·067 அளவு சுதையச் சத்தும் ·180 அளவு எரியச் சத்தும் உள்ளன. மஞ்சள் கருவில் சுதையச் சத்து

·137 அளவும், எரியச் சத்து ·524 அளவும் (எல்லாம் 100–க்குத்தான்) உள்ளன.

இது விஞ்ஞான விந்தை.

முட்டைகளை ''அடை'' காத்து குஞ்சுகள் பொரிக்கின்றன கோழிகள்.

இது சிருஷ்டியின் விசித்திரம்!

கோழி மிதித்துக் குஞ்சு முடமாவதில்லை!''

இது வாழ்வியல் பழமொழி.

வைட்டமின் வகைகள் கொண்ட உணவுப் பண்டங்களைப் படைத்து, இந்தக் கோழிகளை விருந்துக்கு அழைத்துப் பாருங்கள். அவற்றின் நாட்டமெல்லாம் குப்பை மேடுகளில்தான் இருக்கும். அது தான் அவற்றின் தலைச் சுழி!

சென்னையில் ஒரு கோழி ''புராண மகிமை'' பெற்று ஏதேதோ செப்பிடு வித்தை செய்து மகத்துவம்பெற்ற விவரங்களை முன்பு நாம் பத்திரிகைகளில் பார்த்திருந்தோம்! இந்தக் கோழி கோயில் ஒன்றிற்கு 'நேர்ந்து' விடப்பட்டதாம்!

இந்தோனேஷியாவிலோ அல்லது ஜப்பானிலோ இந்தக் கோழிகள் தேசீயப் பறவைகளாக மதிக்கப்படுவதாக நான் படித்திருக்கிறேன்.

கோழிகளும், கோழி முட்டைகளும் அண்டிக் கொண்டிருக்கும் தேர்தலுக்கு உரிய சின்னங்களாக

வும் தேர்ந்தெடுக்கப்படுவது இயல்பு! தேர்தல் கூத்துக்களிலே—தேர்தல் கூட்டங்களிலே முட்டைகளுக்கு ஏற்படும் கிராக்கியே அலாதி!

நாகரிகம் பரவினுலும், கடிகாரம் பரவாத பட்டிக்காடுகளிலே சேவல் கோழிதான் அவ்வூர் ஜனங்களுக்கு 'காலம்' அறிவிக்கும் 'டைம்கீப்பர்' களாக விளங்கி வருகின்றன, கோழி கூப்பிட அவர்கள் எழுந்து அலுவல்களைக் கவனிப்பார்கள். கோழிகள் உறங்கிவிட்டால், அப்புறம் கிராம மக்களும் உறங்க வேண்டியதுதான். விண்ணிடைத் தெரியும் கதிரவன் மூலம்தான் பொழுது புலரப்போகும் ரகசியத்தின் உணர்வு கோழிகளுக்குத் தெரிகிறதாம்! அதன் வாயிலாகத்தான் அது ''கொக்கரக்கோ'' என்றி அறிவிப்பு கொடுக்கிறதாம்! இந்த நுண்ணறிவுக்காகவே அதற்கு 'டாக்டர்' பட்டம் சூட்டி டாக்டர் கொக்கரக்கோ என்று போற்றலாமல்லவா?

'' சேவற் கோழியுண்டு காகமுண்டு—வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே[ அதிகாலை தெரிந்திட
வேறு கடிகாரம் வேண்டுமோடி!''

—இவ்வாறு கேட்பவர் கவிமணி.

கொத்தித் திரியும் கோழியைக் கூட்டிவைத்து விளையாடச் சொல்லவில்லையா பாரதி?

'இரவறிவான்' என்று சேவல் கோழிக்குப் பட்டப் பெயர் உண்டு!

தமிழ்க் கடவுளுக்குச் சேவல் என்றால் வெகு பிரியம். அதனால் சேவற்கொடி அவனுக்கு உகந்த தாகி, ''சேவற்கோடியோன்'' என்ற பெயரும் ஏற்பட்டது போலும்!

இந்திரன் சேவல் உருக்கொண்டு கூவ, அதன் மூலம் கௌதம முனிபுங்கவர் நீராடச் செல்ல, அந்த இடைப்பொழுதில் இந்திரன் அகலியையின் கற்பைச் சூறையாட நினைத்தான். தேவர் தலைவனுக்கு ஏற்பட்ட பழியில், அந்தச் சேவலுக்கும் பங்கு கிடைக்க நேர்ந்தது, அனுதாபப்படத்தக்க விஷயமேதான்!

இலக்கிய உலகத்திலும் கோழிகளுக்கு ஏகப் பட்ட கிராக்கி உண்டு.

என்னுடைய கிராமியக் கதைகளில் கோழி கூவினால்தான் பொழுது விடியும். பட்டிக்காட்டுப் பூவையான மருக்கொழுந்துவுக்குப் போட்டிபோடும் முத்தையனும் சிங்காரமும் கோழிப் பந்தயம் ஒன்றை நடத்தி, அதன் மூலம்—அதாவது, யார் கோழி கெலிக்கிறதோ, அந்தக் கோழிக்குரியவர் அந்த மருக்கொழுந்தின் கழுத்தில் மூன்று முடிச்சுக் கள் இடுவதும் இயல்பான சங்கதிதானே! அரிசிக் குறுணைகளைத் தன் வீட்டுக் கோழிகளுக்குத் தூவி விட்டுக்கொண்டே பக்கத்து வயலில் நாற்று நடும் சோலையாவை ''லவ்'' செய்யும் பரிபக்குவமும் என்னுடைய கதை நாயகியான பஞ்சவர்ணத்துக்கு மட்டுமே சொந்தமாகும்!

கோழிக்கு அயர்ந்த நித்திரை பிடிப்பதில்லை. நினைத்து நினைத்துத் தூங்குகிற வழக்கத்திற்குத் தான் "கோழித் தூக்கம்" என்று நாமகரணம் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த நோய் கோழிப் பெண்களைப் பொறுத்த அளவில் அண்டவே முடியாது!

ஒரு விடுகதை போடுகிறேன். விடை சொல்கிறீர்களா?

"அரியலூார் தாதி அதிகப் பிள்ளைக்காரி; பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில் பலே கெட்டிக்காரி?"

புதிரின் விடை உங்களுக்குத் தெரியாமல் இருந்தால், அப்புறம் உங்கள்பேரில் "கோழி" கோபப் படப் போகிறது!...



# இப்படியும் சில தர்ம சங்கடங்கள்!

தர்மத்தை வழிபட்டு, மனித தருமத்துடன் நடந்துவரும் நம்மை பாகிஸ்தான்காரனும் சீனக்காரனும் ''பூச்சாண்டி'' காட்டிப் பயமுறுத்தி வருகிற தர்மசங்கடமான நேரத்தில், தர்மத்தைப் பற்றியும் சங்கடத்தைப் பற்றியும் கொஞ்சம் சிரிப்புடன் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?—பேஷாக வேண்டும்!

''வாழ்க்கை என்பது ரோஜா மெத்தையல்ல!'' என்று கனகச்சிதமாக மற்றவர்களுக்கும், மற்றவர்கள் நமக்குமாகச் சொல்லிக் கொள்வது இப்போதெல்லாம் ஒரு வகைப்பட்ட நாகரீகமாகப் போய் விட்டது.

''நமக்கு ரோஜா மெத்தை எதற்கு? சாதாரணப் பாயும் தலையணையும் போதாதா?''

என்று கேலியாக நாம் விமர்சனங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் நேரத்திலே, மேற்படி பொன்மொழியில் இருக்கும் பொன்னின் ''காரட்'' அளவைப் பற்றியோ, அல்லது அதன் வாசகத்திலுள்ள எச்சரிக்கைப் பண்பைப் பற்றியோ அக்கறைப்படுவது இல்லை. அப்படி அக்கறைப்பட்டால், அப்புறம் கொஞ்ச நஞ்சம் இருக்கும் சந்தோஷம் கூட அக்கரைப் பச்சையாகி விடுமே! ''காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!'' என்று மணக்காத காயப் பாட்டு நம்மைச் சிவப்புக் கொடி காட்டிப் பயமுறுத்துமே என்கிற தர்மசங்கடமான நிலைவேறு ஏற்பட்டு விடுமே!

''காதல், காதல், காதல்
காதல் இன்றேல்
சாதல், சாதல், சாதல்!''

இப்படி ஒரே பாட்டில் வாழ்க்கைக்கு ஆரம்பமும் முடிவும் கட்டிக் கொண்டு ''லவ்'' செய்யத் தொடங்கும் யுவனும், யுவதியும் திருமணக் கட்டம் அண்டுவதற்குள்ளாக, அவர்களை அண்டி ஆட்டிப் படைக்கும், தர்மசங்கடங்கள் ஒன்றல்ல, இரண்டல்லவே!......காதல் கீதத்துக்கு ப்ருக்கா கொடுத்துச் சாதகம் செய்ய முனையும் ஜோடிக்குத் தங்களது குடும்பச் சூழல் சாதகமாக அமையாவிட்டால், மேற்கண்ட ''லவ்டூயட்''டில் அபஸ்வரம் தட்டி, தர்மசங்கடம் விளைந்துவிடாதா? அப்பா-அம்மாக்கள் சினிமாவில் வருவது மாதிரி

அல்லாமல், தங்கள் செல்வங்களின் காதற்கனவுகளை நிறைவேற்றி வைக்கத் துணியும் பட்சத்திலே, நம் டி. டி. கே. டிபார்ட்மென்ட் அபாய விளக்குக் காட்ட நேர்ந்து விட்டதென்றால், அப்புறம் அவர்கள் இருவருமே வாழ்க்கையைக் கண்டு பயந்து ஆரம்பித்த காதல் பாட்டையும் முடிக்கத் தெரியாமல், காதல் பாட்டையும் முடிக்க முடியாமல் ஆளுக்கொரு திசையாக ''குட்பை'' போட்டுப் பிரித்துவிடுகிற தர்மசங்கடத்தை நல்ல ஆள் ''டைரக்ட்'' செய்து பார்த்தால், அப்போது தான் அதன் யதார்த்த நிலை பளிச்சிட்டுத் தெரியும்! காதலிக்கத் துணிந்த இணைக்கு இணைப்பாக எல்லாம் அமைந்து இருந்து; ''விதி'' மட்டும் அவர்களுக்கு அனுசரணையாக அமையாமற்போனால் அப்புறம் அவர்கள் வாழ்க்கைப் பந்தயத்தில் தளைப் பட்டு, சம்சார சாகரத்தில் மூழ்கி உப்பெடுத்து அந்த உப்பின் கரிப்பில் மனம் கசந்து ''தெய்வமே'' என்று காலண்டர் தாள்களைக் கிழித்து வீசும் பணிக்கு ஆளாகும் தர்மசங்கடத்தை யார்தான் ரசிக்க முடியும்?

''திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன!'' என்று ஓர் ஆங்கில வாசகம் உண்டு. திருமணங்களின் முன்னேற்பாட்டுச் சடங்கிற்கான நிச்சயதாம்பூல வைபவத்தை நடத்துவதற்கென்று சொர்க்கத்துக்குப் போய் வர வேண்டிய இக்கட்டையும் தர்மசங்கடத்தையும் தவிர்ப்பதற்காகவேதான் போலும், எல்லாச் சடங்குகளையும் இந்தப்

பூலோகத்திலேயே நடத்தி விடுகிறார்களோ? சொர்க்கத்தின் ''ஏ கிளாஸ்'' நபர்களின் மானசீகமான ஆசியுடன்தான் இங்கே கல்யாணங்கள் செய்யப்பட வேண்டும்! ஒரு வதுவை விழாவை நடத்துவதற்கு ஆயிரம் பொய் சொல்லலாமென்று லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள், பெரியவர்கள். அதற்காக, தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றி ஒன்பது பொய்களைச் சொல்லிவிட்டு, கேவலம் ஒரு பொய் கிடைக்கவில்லையே என்று தாபப்பட்டுக்கொண்டு, கல்யாணத்தைச் செய்து வைக்கும் தர்ம காரியத்தை ''டிலே'' செய்ய வேண்டிய தர்மசங்கடத்தை யாரும் மேற்கொள்ள வேண்டியதில்லையல்லவா?

பட்டணத்து வீதிகளிலே அங்கங்கே ஓர் எச்சரிக்கைப் பலகை நின்று கொண்டிருக்கும். ''நில், கவனி, போ!'' என்ற மூன்று தாரக மந்திரங்கள் நம்மை மூச்சுத் திணறவடித்துவிடும். அப்பலகையின் வேண்டுதல் பிரகாரம் நாம் நின்று கவனித்தால், அங்கு எதுவும் இருக்காது. ''சரி, போகலாம்'' என்று நடையைக் கட்டினால், அருகில் செல்லும் பட்டிக்காட்டான் ஒருவன் ஒரு பள்ளத்தில் விழுந்து திண்டாடும் தர்மசங்கடமான கண் கொள்ளாக் காட்சியை நாம் காண்போம். உடனே நாமும் சுதாரித்துக் கொண்டு, பள்ளங்களைத் தேடியபடியே நடையைத் தொடர்ந்து செல்வோம்!

முச்சந்தி, நாற்சந்திகளிலே போக்குவரத்துக் காவலர் குடை நிழல் இருந்து கைகளை அபிநயம் காட்டி, போக்குவரத்துக்களை சமன் செய்து

தன்னுடைய ராஜ்ய பாரத்தைச் செம்மையுடன் நடத்துவார்; சிவப்பு பச்சை விளக்குகளும் இப் பணியினை மின் இயக்கத்தின் மூலம் நடத்துவதும் உண்டு. எல்லாம் இருந்தும், தினம் தினம் அமர்க் களமாக நடந்தேறும் விபத்துக்களுக்குக் கணக்கு உண்டா, வழக்கு உண்டா? மேற்படி விபத்துக் களின் கணக்கைச் சொல்லி, வழக்கை உண்டாக்க வழிவகுத்துக் கொடுக்கும் தாள்களுக்கு ''இடம் பூர்த்தி'' என்ற மகிழ்ச்சியும் நமக்கு இப்படிப் பட்ட தலைவலிச் செய்திகளாகப் படிக்க நேரிடு கிறதே என்ற தர்மத்தின் சங்கடமும் இருதுருவப் புள்ளிகளிலே உண்டாவதென்னவோ உண்மை தான்!

ரயிலில் பிரயாணம் செய்கிறோம். ஜங்ஷன் களிலே பிரயாணிகளின் சமதர்மமான சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்காகவே, அவரவர்களின் பர்ஸ் களுக்கு ஏற்ப, வசதிகள் உண்டாகி விடுகின்றன. சக பிரயாணிகட்கு அசௌகர்யமாக புகை பிடித் தல் தவறு என்று நம் பணத்தைக் கொண்டு எழுதி வைக்கிறார்கள். ஆனால், சக பிரயாணிகள் என்னும் போது, ஒருவர் புகைப் பிரியராக இருந்து ஏனையவர் புகை வெறுப்பாளராக இருந்து விட்டால், மூண்டு விடும் ''கட்ச்'' கலவரம்! சகட்டு மேனிக்கு, புகை பிடிப்பவர்கள் என்று ஒரு கும்பலைப் பிரித்து ஒரு பெட்டியில் போட்டு அடைத்துவிட்டால் மேலே விமானத்தில் பறந்து வேவு பார்க்கும் ஒரு சீனன், இங்கே நெளியும் புகை மண்டலத்தைக் கண்டு பயந்து அப்படியே ஹாங்ஹாங்குக்கு நழுவி விடக்

கூடுமே! புகை பிடியாதவர்கள் மேற்படி புகை எனும் தர்மசங்கடத்தினின்றும் விடுதலை பெறவும் பொன்னான வாய்ப்பும் கிட்டும்!...''வண்டியை நிறுத்திக் கைபிடியை இழு!'' என்று எச்சரிக்கை விளம்பரமும் பெட்டிகளில் கண் சிமிட்டும். வண்டியை ஓடுவதினின்றும் நிறுத்தி வேடிக்கை பார்க்க விழையும் சீமான்கள், அல்லது சீமான் வீட்டுப் பிள்ளைகள் கையில் அபராதத் தொகையை வைத்துக் கொண்டு கைபிடியை இழுத்து விட்டால், ரயில்வேக்காரர்களுக்கு இதனால் எவ்விதமான தர்ம சங்கடமோ, சங்கட தர்மமோ இருக்க முடியாது என்பது மட்டும் உறுதி, உறுதி! லக்கேஜ்களுக்கு மட்டும் என்ற பலகைத் தட்டுக்களிலே மனிதர்கள் புளி மூட்டைகளாக அடைந்து விட்டால் பாவம், இந்த லக்கேஜ்களின் தர்ம சங்கட நிலைக்கு யார் தான் அனுதாபம் தெரிவிப்பார்களோ?

சரி.

இப்போது, பஸ்களிலே செலவு செய்கிறோம். செலவு—சவாரி; சவாரி பிரயாணம்!.. ஒரு பக்கம் திரும்பினால், ''தூங்காதே!'' என்றிருக்கும். அதைப் பார்த்த சடுதியிலேயே நமக்குத் தூக்கம் வரும்! பெரிய மனிதர் கண்களில் அந்த அட்டை பட்டாலோ, அவருக்குத் தம்மை ஏகவசனத்தில் எச்சரித்திருக்கிறானேயென்று கோபம் வரும்! இலக்கண விதிகள் அங்கு யாரையும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவது கிடையவே கிடையாது. ''சில்லறைக் காசுகளை கண்டக்டரிடம் கேட்டு வாங்கவும்'' என்று

நமக்குச் சிபார்சு செய்யப்பட்டிருப்பதை கண்டு, நாம் நமக்கு வர வேண்டிய ஒரு பைசா, இரண்டு பைசாக்களை, பயந்து கொண்டு காக்கிச் சட்டைக் காரரிடம் கேட்டாலோ, அவர் இறங்கும் வழியையும் நம்மையும் ஒருமுறை முறைத்துப் பார்ப்பார்! நமக்கோ அதற்கப்பால், அந்த ''வேண்டுகோள்'' பலகையை ஏறெடுத்துப் பார்க்கக்கூட திராணி ஊறுவதில்லை.

''அறஞ்செய்ய விரும்பு'' என்று ஔவையாரோ யாரோ சொல்லிலோ, பாடியோ இருக்கிருர்களா? அதற்காக, அறம் செய்ய முடியாதவர்களின் தர்மசங்கடமான கதி என்ன என்பதைப் பற்றி யாரும் அனுதாபப்பட்டதாகவே தெரியவில்லை.

''புலிக்குப் பிறந்தது பூனையாகப் போகுமா?'' என்பது ஒரு பழமொழி. அதைச் சோதித்துப் பார்ப்பதற்காக, ஒரு புலியையும் அதற்குப் பிறந்த ஒரு குட்டியையும் தேடிப் போகும் தர்மசங்கடத்தை யாரும் சிரமேற்கொள்ளார் என்றே தோன்றுகிறது. உங்களில் யாருக்காவது விருப்பம் இருந்தால், தாராளமாய் முயன்று பார்க்கலாம்! முயற்சி மெய் வருந்தக் கூலி தருமாம்!

காப்பி சாப்பிட ஒரு ஹோட்டலுக்குள் பிரவேசிக்கிறோம். ''இங்கே செய்த பட்சணங்கள் அசல் நெய்யில் செய்தவை அல்ல!'' என்று விளம்பரமொன்று ரொம்பவும் தயவுடன் பரிதாபக் குரலில் செப்புகின்றது. நாம் அசல் நெய்ப் பலகாரம்தான்

வேண்டுமென்று இவர்களிடம் கேட்டு இவர்களைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தவில்லையே என்று மனத்திற்குள் அரை நிமிஷ நேர வருத்தம் செலுத்தி விட்டு, வந்ததற்கு ஒரு காப்பியை ஊற்றிக் கொண்டு ஓடி வந்து விடுகிறோம்—பதினைந்து காசுக்கு நம்மை எந்த நாயும் துரத்தி வரும்படியான தர்மசங்கடத்தை உண்டாக்காத புண்ணியத் தோடு!......காற்றை வாங்கிக் கொண்டு திரும்புகிறோம்.

அதோ, பிச்சைக்காரன்!

''தர்மம் போடுங்க...தர்மம் தலைகாக்குமுங்க!'' என்கிறான். அவன் தத்துவம் அப்படி நம் தலையைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு தர்மம்தான் செய்ய வேண்டுமா, வேறு மார்க்கம் இல்லையா என்று ஆராயும் தர்மசங்கடத்தையுமல்லவா அவன் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிடுகிறான்!...... அவனும் இந்நாட்டு மன்னர்களில் ஒருவனே! நான் மட்டும் என்னை மன்னனாக எண்ணத் துணிவதில்லை. காரணம், என் வசம் ராஜ மகுடம் ஏதும் இல்லாத தர்மசகங்கடமேயாகும்!

இப்போதெல்லாம் நான் , தஞ்சாவூருக்கு வேலைக்குப் போய் வருவது கிடையாது. இருந்த இடத்திலேயே பணம் நூறு இருநூறு என்று வந்து கொண்டிருக்கிறது. இந்த அதிசயத்தைக் காணும் என் ஊர்க்காரர்கள், ''அட கடவுளே! நமக்கும், முதல் இல்லாத இந்தத் தொழிலை-இந்தக் கலையை பகவான் சொல்லித் தரவில்லையே!'' என்று அங்க

லாய்ப்பதுடன் நில்லாமல், என்னைத் தேடி ''அட்ச ராப்யாசம்'' பெற வந்து, என்னைத் தர்மசங்கட மான கட்டத்தில் நிறுத்தி வைத்துச் சோதித்து, அந்நிலையிலேயே என்னை ஒரு ''ஸ்ராப்'' எடுத்து விட முனைந்தால், அப்புறம் என் தர்மசங்கடத்தைப் போக்க, ''அபயம்'' என்று அந்த ஆதிமூலப் பெருமாளையன்றோ நான் சரணடைய வேண்டி வரும்!

அப்பப்பா!—போதும் இத்தத் தர்மசங்கடங் கள்!...



# நடமாடும் தெய்வங்கள்!

## 1. திருவாளர் '144'

படுக்கையை விட்டெழுந்தவுடன் பல் துலக்காமல் 'பெட் காப்பி' சாப்பிட்டானதும், உங்கள் பார்வையில் ஆஜராகும் பத்திரிகை தரும் புதுப் புதுச் செய்திகளைக் கொஞ்சம் நினைவு படுத்திப் பார்க்கிறீர்களா? அந்த இடத்தில் கொள்ளை, இந்த இடத்தில் கொலை, காதல் வியவகாரத்தில் போட்டியிட்ட இருவர் மரணம், பசிக் கொடுமையால் பத்துப்பேர் கூண்டோடு கைலாசம்! — அப்பப்பா, செய்திகளை மேலோட்டமாகப் பார்த்தாலே நீங்கள் குடித்த காப்பி உங்கள் உயிரையே குடித்து விடுகிற மாதிரி தோன்றுகிறதல்லவா? இப்படிப்பட்ட விசித்திரமான, அல்லது அநீதியான சம்பவங்கள் நடக்கக் கூடாதென்றுதான் 'சட்டம்' என்ற ஓர் அழகுச் சொல்லைப் படைத்து, அத்துடன் நின்று விடாமல்,

அதைக் கட்டிக் காக்கக் கோடிக்கணக்கிலே 'நம்' பணத்தையும் செலவிட்டு வருகிருர்கள், 'நீதி'யை எல்லே கட்டி வகுத்துக் கொண்டவர்கள்!

நீங்கள் பாட்டுக்கு ஹாய்யாக சைக்கிளிலே 'பிரேக்' கூட இல்லாமல் பவனி வந்து கொண்டிருப்பீர்கள். சோதனை மாதிரி உங்களைச் சோதித்து நிறுத்தி, தன்னுடைய ஸ்டாக்கிங்ஸிலிருந்து ஒரு ஐந்து காசு நோட்டுப் புத்தகத்தை எடுத்து, உங்களது சுய சரித்திரத்தையே எழுதி முடித்து உங்களை 'சார்ஜ்' செய்துவிடும்; அப்பால், நீங்கள் காணிக்கை செலுத்திஞல் தான் உங்கள் உருவம் இவ்வுலகைத் திரும்பிப் பார்க்கமுடியும்! 'தவருன பாதை'யில் — வேளை கெட்ட வேளையில் — 'இருவர் ஒருவராகி'ப் போக முடியுமா? புதிய படங்கள் திரையிடப்படும் கொட்டகைகளில் நாசூக்காக அசல் டிக்கட் ஒன்றுதான் வாங்கிக் கொள்ளக் கூடுமா? முதல் தேதிச் சம்பளம் பத்திரமாகப் போய்ச் சேர வேண்டிய இடத்தில் போய்ச் சேருவது தான் சாத்தியமா? 'நான் இருக்கப் பயம் ஏன்?' என்று சொல்லி உலகோரைப் பயமுறுத்தும் அதிசயப் பிரகிருதியல்லவா இந்த நடமாடும் கடவுள்!

காக்கி உடுப்பில்தான் இத்தெய்வம் உணவு பெறுகிறது; '144' என்ற சொல்லில்தான் உலகத்தைத் தரிசனம் செய்கிறது; 'சட்டம்' என்ற பண்பாட்டில்தான் உலக உருண்டையைச் சுற்றுகிறது. ஓடும் பஸ்ஸில், நழுவிப் பாயும் மின்சார வண்டியில்

உருகியோடும் தார் ரஸ்தாவில், நிதி மிகுந்தவர்கள் நீதி மறந்து நிர்மாணிக்கும் இந்திர லோகத்தில், ஜனசமுத்திரத்தில் பெருங்காயங்களாகக் கரைக்கப் படும் 'பிரச்னை'க் கும்பலில், ஏன், சட்டம் மதிக்கப்படாமல் மிதிபடும் மூலை முடுக்கு ஒவ்வொன்றிலும் 'நீக்கமற நிறைந்'திருக்கும் 'சர்வ வியாபி'யல்லவா இந்தத் தெய்வம்!

புதிய துப்பறியும் ஏஜண்டுகளான 'போலீஸ் நாய்கள்' தாம் இந்தத் தெய்வ மனிதன் பேரில் உண்மையான அனுதாபம் காட்டுகின்றனவென்றால் நீங்கள் நம்பவா போகின்றீர்கள்?

—★—

# 2. வாழ்க்கையே ஒரு 'காலி ப்ரூப்!'

உங்களுக்குத் தலையெழுத்து என்ற வார்த்தை யில் நம்பிக்கை உண்டா? அப்படியென்றால், தன் தலையெழுத்தைச் சரிவர எழுதிக் கொள்ளத் தவறிப் போன, அல்லது மறந்து விட்ட 'அவன்' பேரில் நீங்கள் அனுதாபப் படத்தான் செய்வீர்கள்.

குனித்த புருவம் இல்லை; குழி விழுந்த கண்கள் உண்டு. கொவ்வைச் செவ்வாய் இல்லை; வெற்றிலைக் காவி படிந்த உலர்த்த உதடுகள் உண்டு. பனித்த சடைக்கு 'மேக் அப்' செய்ய ஆள் கிடைக்கவில்லை;

ஆனால் வேதனை மண்டிய விரக்திச் சிரிப்புக்குப் பஞ்சமே கிடையாது. விசித்திரமான பிறவி என்கிறீர்களா? 'உலகம் யாவும் தானாகி, புறமாகி, அறம் ஆகி' நிற்பவனையே அனுதாபப் பொரு ளாக்கிக் கொண்ட இந்தத் தெய்வம் அற்புதப் பிறவியோ என்னவோ? ஆனால் 'வேண்டாத பிறவி' யல்ல! முதல் பிரம்மாவுக்குப் போட்டியாக முளைத்த இரண்டாவது பிரம்மாக்களையெல்லாம் மண்ணைக் கவ்வச் செய்யும் சாகஸம் இந்த மூன்றாவது பிரம் மாவுக்கு உண்டு!

தன்னை 'மேக்கப்' செய்து கொள்ளத் தெரியா விட்டாலும், இவனது 'மேக்கப்'பின் கீழே கொள்ளை கொள்ளையாகத் தயாராகும் விஷயங்கள் எத்தனை எத்தனையோ? வாழ்க்கையில் கூடிப் பிரியும் அரைப் புள்ளி, கால்புள்ளிகளெல்லாம் இந்த அப் பாவியிடம் முற்றுப் புள்ளியின் கௌரவத்தைச் சம்பாதித்துக் கொள்ளத் தவறுவது இல்லை. இவன் வாழ்க்கையில் அரை 'எம்' அளவு நிம்மதிக்குறா வழி கிடையாதென்றாலும், கஷ்ட நஷ்டங்களை 'லெட் அவுட்' ஆக்கி விடுவதில், மண்டை ஓடேந்திய பிச்சையாண்டிகூட இவனிடம் பிச்சைவாங்கத்தான் வேண்டும். இவனுடைய நடப்பு வாழ்க்கை அசல் 'காலி ப்ரூப்'தான். ஆனால், யந்திரத்தில் ஓடும் 'பார'த்தின் தெளிவு இந்த மனித யந்திரத்திடம் ரொம்ப ரொம்ப உண்டு. ஆக்கல், அழித்தல் — ஏன், படைப்புத் தொழிலின் ரகசியமே இவன் கைக்குள்தான் அடக்கம்! துயரங்கள் 'லாக்கப்' பாகக் கிடந்த போதிலும் - பாக்டரி சட்டத்தில்

சட்டமில்லாத படமாகி ஒற்றைக்கால் தவம் புரிந்தாலும் - 'ஸிங்கிள் சாயா'விற்குள் தன் வாழ்க்கையையே அடக்கி இந்திர ஜாலம் புரியும் இந்தக் கடவுளுக்கு ஒரு ஜிந்தாபாத் ஆகிலும் போட வேண்டாமா?

—★—

# 3. அசல் பிரம்மா அல்ல!

"சாகத் துணிந்தால், பேனாவைக் கையில் எடு!"

அதிசயமான இந்த எச்சரிக்கை, வாழ்க்கையை வேதாந்தமயமாக ஆக்குவதற்கா? அல்லது பாவம், அந்த அப்பாவிப் பேனாவின் மீது 'அபயம்' என்ற அறிவிப்பை ஒட்டிவைப்பதற்கா? அல்லது மேற்படி பொன் மொழியை உளறிக் கொட்டிய 'திர்க்கதரிசி' யின் கோழைத்தனத்துக்கு இது ஒரு நினைவு மண்டபமா, என்ன?

'முதல் பிரம்மாவைக் காணவில்லை. நான்முகன் என்ற புனைப் பெயர் உண்டு. பேனாப் பெயருக்கு பங்கம் விளைவிக்காத வகையில் கனகச்சிதமாக இரு ஜோடி முகங்கள் உண்டு. உயிர்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையின் ஏகபோக உரிமைக்காரன். அந்தப் பைத்தியக்காரனைப் பிடித்துக் கொடுப்

போர்க்கு அந்தப் படைப்புக் கடவுளையே பரிசாகக் கொடுக்கப்படும்!' —விளம்பரம் இது!

முதல் பிரம்மா இருக்கும் இடம் நாளது தேதி வரை தெரியவில்லை. ஒரு சிலர் தேடுகிறார்கள்; தேடுகிறார்கள்; தேடிக் கொண்டேயிருக்கிறார்கள். இரண்டாவது பிரம்மாவின் இடம் தெரிகிறது. ஆனால், நடமாடும் இத்தெய்வத்தைப் பற்றிப் பலர் சட்டை செய்யாமல் ஒதுக்குகிறார்கள்; ஒதுக்குகிறார்கள்; ஒதுக்கிக்கொண்டேயிருக்கிறார்கள்!

சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறதாம்— ஜாக்கிரதை!

நீங்களெல்லாம் சூயஸ் பிரச்சினை என்ன ஆயிற்று என்று தினசரித் தாளை வரி விடாமல் பார்ப்பீர்கள்; ஆனால் இந்த 'சாமி' சூயஸ் கால்வாயில் எந்தக் கோணத்தில் என்ன மாதிரிக் காதலை நுழைக்கலாம் என்று மண்டையைப் போட்டு உருட்டிக் கொண்டிருக்கும்; கனம் ராஜா அரசியல் ரகசியம் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்; அதைப் பகைப் புலனாக வைத்துக் கொண்டு ஓர் அரசியல் சரடு திரிக்கலாமே என்று 'ஜபம்' செய்து கொண்டிருக்கும்; ஹைதராபாத்தில் ரயில் கவிழ்ந்ததல்லவா? அப்படியே காதலும் கவிழ்ந்துவிட்ட கதையைக் காது மூக்கு வைத்துப் பொது மக்களுக்குச் சொல்லலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்!— விசித்திரமான இந்தப் 'பேனா' மூலம் காதல் தூங்கும்; அன்பு அழும்; ரோஜா சிரிக்கும்; சமூகத்திற்கு 'ப்ளுக்லாக்ஸ்' கொடுக்கப்படும்; 'பச்சை

அறை' விஷயங்கள் பச்சை பச்சையாக மேடை ஏறி இந்திய நடனமாடும்!

இந்தப் பேனு மன்னர்கள்—'பேனு மன்னி'கள், நடமாடும் தெய்வங்கள் மட்டுமல்ல-காலம் கடந்தவர்கள்; காலத்தைக் காலடியில் போட்டு மிதித்துக் கொண்டு அதன் மீது நிற்பவர்கள். இவர்கள் மாஜி அமரர்கள்! நீங்கள் மதித்தால் மதியுங்கள்; 'மூளை' உள்ள 'பைத்தியக்காரர்கள்' மதிப்பார்கள். வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்கி, கறுப்பான உங்கள் உள்ளங்களை வெள்ளையாக்கும் இந்த ஏழைத் தெய்வத்திற்கு இந்த வரவேற்புக்கூட வேண்டாமா, என்ன?

—★—

# 4. பாக்கி அரையணு எங்கே?

தட்சணப் பிரதேசக் குழப்பத்திற்குச் சாங்கோபாங்கமான விளக்கம் வேண்டுமா?-அப்படியென்றால் நீங்கள் ஜார்ஜ் கோட்டைக்குள் அடியெடுத்து வைக்க வேண்டியதில்லை; ஏன், தியாகராய நகருக்கு நடையைக் கட்ட வேண்டிய அவசியம் கூடக் கிடையாது. காரக்பூர் விபத்தைப் பற்றி நேரில் விஜயம் செய்து செய்திகள் திரிக்க ஆவலுண்டா? போகாத ஊருக்கு வழியைத் தேடிப் பிடிக்க வேண்டவே

வேண்டாம். இலங்கைத் தமிழர்களின் கொந்தளிப்புக்கு இன்னும் கொஞ்சம் உஷ்ணம் சேர்த்துக் கொடுக்க ஆசைப்படுகிறீர்களா? அப்படியென்றால் இராவணபுரிக்குப் போக 'விசா'வுக்கு ஏற்பாடு செய்து விடாதீர்கள். ஒரே ஒரு அணு மாத்திரம் நீங்கள் செலவிடுங்கள், போதும்! கொதிக்கும் வெய்யிலைப் பற்றியோ, கொட்டும் மழையைப் பற்றியோ, இடித்துத் தள்ளும் மனிதப் பிராணிகளைப் பற்றியோ ஞாபகமேயில்லாமல், முற்றும் துறந்த மோன நிலையிலே கிடைத்த ஏதாவது ஒரு நம்பருள்ள பஸ்ஸில் ஏறிக் கொண்டு விடுங்கள்! அப்புறம், நான் சொல்லும் அந்த அதிசயபுரி உங்கள் கண்களிலே படம் காட்டத் தொடங்கி விடும்.

இத்தகைய ஓர் இன்பச் சூழ் நிலைக்குக் காரணமான இந்தச் சூத்திரதாரியைப் பற்றி — இந்த நடமாடும் தெய்வத்தைப் பற்றி நீங்கள் ஒரு நிமிஷமாவது அனுதாபப்படவேண்டும்?—இந்தத் தெய்வமல்லவா உங்கள் மீது அனுதாபம் காட்டித் தொலைக்கிறது? இல்லையென்றால், 'டிக்கெட்' குரல் எழுப்பி, அப்புறம் உங்களுக்குக் கடன் பட்டிருக்கும் அரையணு நாணயங்களை நாணயமாக உங்கள் வசம் ஒப்புவிக்குமா?

'பீக் அவர்' என்கிறார்களே, அந்தத் தர்மசங்கட நிலையிலே இந்தக் கடவுளுக்கு எண்சாண் உடம்பும் ஒற்றைச் சாணாகி, பாவம், காக்கி உடம்புக்குள் புதைந்து வியர்வையில் மிதக்கும் காணாத அக்

காட்சியைக் காண ஒரு முகம் போதவே போதாது; காதற் கடவுளுக்கு உள்நாட்டுத் தூதுத் தலைவராகப் பதவி ஏற்று, காதற் கட்டங்கள் சரிவர நடந்தேற உதவும் டைரக்டராக வேஷம் போட்டு, பிறகு 'லாலி' பாடும் வரை காதலுக்கு ஒரு சாட்சியாகவும் விளங்கும் 1956-ஆம் வருஷத்துத் தெய்வமல்லவா இது!

மனித யானைகளிடம் 'ஐயாவுக்கு ரெண்டு டிக்கெட் தானுங்களே?' என்று இதம் பதமாகக் கேட்டால், சரியான விடை கிடைக்கும் என்கிறீர்களா? ஓடும் பஸ்ஸில் உருளும் உலகத்தில் 'பெண்கள் ஜாக்கிரதை' பலகையின் திரை மறைவிலே 'அம்மா பூக்கடையா?' என்ருல், அந்த நகைச் சுவைத் துணுக்கை அனுபவிக்கவா தெரிகிறது நம் பெண்களுக்கு......! கல்யாணத்திற்குப் பெண் பார்க்கப் போகும் 'டிப் டாப்' இளைஞரை 'ஸார், எங்கே போறீங்க?' என்ற அபசகுனக் கேள்வி கேட்டுத் திணறடிக்காமல் எப்படித் தப்ப முடியுமாம்? 'ஜோபடித் திருடர்கள் ஜாக்கிரதை!' என்ற அபாய அறிவிப்புப் பலகைகளின் பிரதிகளை இந்தத் தெய்வத்தின் நெஞ்சகத்திலேயும் நீங்கள் தாராளமாகத் தரிசிக்கலாமே! அடே, நீங்கள் எங்கே போக வேண்டும்? பாரீஸா? சைனுபஜாரா? ஸ்டாப்பிங் — ஹோல்டான் ப்ளீஸ்...!

# 5. "ஓரம், ஓரம்!..."

கோடை வெயில். தார் உருகி ஒடுகிறது. கையில் உயிர் பிடித்து, மானிடன் ஒருவனை ஏந்தி, நடமாடி ஓடிவரும் இந்த மனித தெய்வத்தை நீங்கள் யாராவது கண்டதுண்டா?

இவன் தெய்வம்; ஆனால், மாறிக் குதிக்க ஜதி பயிலவில்லை. லயம் தவறாமல் கால்கள் மாறி மாறி ஆடுகின்றன. காரணம்: தாளம் என்கிறீர்களா? அதுதான் தவறு - சிருஷ்டித் தவறு.- உருகும் தார்; படை அஞ்சும் சூடு; வெயில்; வாங்கும் கூலி!

கொட்டுகின்ற மழையா? படை பதைக்கின்ற கோடையா? கண் தெரியாத இருட்டா? மண் தெரியாப் பாதையா?— உங்களுக்கெல்லாம் எங்கே செல்லவேண்டும்?

இதோ ஒரு மார்க்க பந்து-வழித்துணை மன்னன் -வழிகாட்டி-பத்திரமாய் உங்களைப் பாதுகாத்துச் சேர்ப்பிக்கும் மகாவிஷ்ணு. அவனுடைய சேஷ சயனம், படியளக்கும் நிதி மனைவி மகாலக்ஷ்மி யெல்லாம் அந்த அரியாசனம் ஒன்றேதான்! பாதை தெரியாத பாலகன் முதல், பாதை தெரிந்த பருவ மங்கை வரை நகரிலே நடமாட தான் நடமாடும் அசல் தெய்வம் இது. அரகர சம்போ மகாதேவா!

என்னு நயினு?' என்று ஆரம்பித்து, 'வாத்தி யாரே!' என்று அழைத்து, 'என்ன அய்யரே, சும்மா வா சாமி...மாம்பலம் தானே?...ம்...வா ஸ்வாமி!' என்று தமிழ் வளர்க்கும் தாதா இவன்.

''என்ன ஷார், இம்மாந்தூரம் இஸ்த்துகினு வந்ததுக்கா ஆரஞ்ஞதர்றே?'' என்று பொருளாதார விளக்கம் காட்டி, அரை அடி தூரத்தை ஆறு மைல்களாக வர்ணித்து, போக வேண்டிய இடத்தில் சேர்ப்பிப்பதோடு, புதிதாக வருகிறவர்களுக்கு நகரம் பூராவையும் நரகமாகப் படம் பிடித்துக் காட்டிய படியே காசு சேர்க்கும் கர்ண மகாராஜன் இவன்!'

'ஓரம், ஓரம்!' என்று கத்தி நடு ரோட்டையே ஓரமாக்கிக் காட்டும் இந்தக் கஜக்கோல் மன்னர் களுக்கு 'போணி' என்ற சொல் 'நாஸ்தா'வுக்குள் சமாப்தி. கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு 'துறவி உபதேசம்' செய்ததை இவர்கள் ஒட்டுக் கேட்ட தாகப் புராணம் ஒன்று சொல்லக் கேள்வி! இரண்டு எண்ணிலே பஞ்சாய்ப் புதையும் எள் - எண்ணெய் ரகசியம் சிருஷ்டிப் புதிர் அல்லவே அல்ல!

—★—

# 6. பிரம்மே நீ வாழி!

கடவுளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? ஐயா ...என்ன அப்படி விழிக்கிறீர்கள்?.. முதலில் புறக் கண்ணை மூடித் தொலையுங்கள்: இப்போது மனக் கண்ணைத் திறந்து பாருங்கள்! ஓ, ஔவைப் பாட்டி தரிசனம் தருகிருளா? உங்களுடைய அணுசக்தி மூளையில் ஓங்கித் தட்டி அவள் அந்தப் பாட்டைச் சொல்லித் தருகிருளா? ஆஹா! வேடிக்கையான மனிதர் ஐயா நீங்கள்!

'அரி, சித்தரி, நாளு, மோளு, பாடம் கற்றுக் கொண்ட 'பழங்கதை' யிலிருந்து சூயெஸ் கால் வாயை விட்டு அப்பொழுதுதான் கப்பலில் இறங்கி யவர் மாதிரி ஆங்கிலம் பேசும் 'புதுக் கதை' வரை நடந்த சரித்திரத்தின் ஏடுகளை எப்படி அதற்குள் நீங்களெல்லாம் மறந்திருப்பீர்கள்!

உங்கள் மறதி என்றும் சிரஞ்சீவியாக வாழட்டும்!—ஆனுல் இந்தத் தெய்வத்தின் மறதி கூட சிரஞ்சீவி வரம் பெருமலேயே சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகின்றது, அன்று தொட்டு இன்று வரை இந்தத் தெய்வ பரம்பரைக்கென அமல் நடத் துவதாகப் 'பயங்காட்டப்படும்' 'உத்தரவு'கள் ரொம்ப ரொம்பக் குறைவு.

அதோ, 'படம் கண்ட தெய்வம்' பேசுகிறது. கேளுங்கள்: ''ராமநாதபுரம் மந்திரி என்கிட்டே

ஆறு ஆவன்னு படிச்சார்; தஞ்சாவூர் கலெக்டருக்கு நான்தான் அட்சராப்யாசம் சொல்லித் தந்தேன்!''
எல்லாம் சரிதான்!—இவர்கள் முன்னுக்கு வந்து விட்டார்கள் : ஆம் : இந்தக் கண்கண்ட ஆண்டவனின் கைப்பிரம்பின் மகிமை அது! ஆனால், இந்தத் தெய்வத்திற்கு மாத்திரம் ஒட்டுப்போட்ட பழைய கோட்டும் டர்பனும் அழியா வரம் பெற்றவையோ! ஒருவேளை, இதற்குக் காரணம், சிஷ்ய கோடிகளிலே ஏகலைவன் ஒருவன் கூட வழி தப்பிப் பிறக்கவில்லையே என்பதா:...இல்லையென்றால், 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற ஒரு வரிப் பாடலுக்குச் சரியான 'பொருள்' சொல்ல உரையாசிரியர் யாருமே இப்பூவுலகில் இன்னமும் ஜனனம் எடுக்கவில்லையே என்பதா...?

பிரம்பே! உனக்கு என் அந்தரங்க சுத்தமான அன்பு வணக்கங்கள். அதுவே இந்த ஏழையின் குரு காணிக்கை!

சட்டமே! பிரம்பு அலறுகிறது: அதன் அலறலுக்கு 'ட்யூன்' போட வேண்டியது தற்சமயம் அவ்வளவு முக்கியப் பிரச்னை அல்ல: முதலில் அந்த 'முகாரி'க்கு முற்றுப்புள்ளி இட ஆவன செய்...?

—★—

# 7. "ஸார் போஸ்ட்!"

அமிர்தம் சொட்டும் அந்த தேவகானம் காற்றிலே மிதந்து வரும்; அதைக் கேட்ட மாத்தி ரத்திலே நம் மனம் துள்ளி விளையாடும்? இடது தோளும் கண்ணும் துடிக்கும்; 'ஒற்றைக் கால் நெடுந்தவம்' பலித்துவிட்ட மாதிரி ஒரு வகை மகிழ்ச்சி; ஹிந்தி 'ட்யூ'னும் இங்கிலீஷ் 'ட்யூ'னும் குசலம் பேசிக் கை குலுக்கிக் கொள்ளும்; 'தலை போகிற' காரியங்களெல்லாம் 'தலைமறைந்து' போய் விடும்; 'சற்றே விலகியிரும் பிள்ளாய்!'' என்ற பாட்டுக்கு வழி ஏற்படாமல், 'ஹோம் டிபார்ட்மெண்ட்' கூட ஒதுங்கி வழி விட்டுவிடும்! —மீண்டும் மீண்டும் அந்த மதுர ஒலிதான் நம்மைச் சுற்றிச் சுற்றி வரும்; மீண்டும் மீண்டும் நாம்தான் அந்த மதுர ஒலியை சுற்றிச் சுற்றி வருவோம்-கானம் அஞ்சல் செய்யப்பட்ட இடம் நோக்கிக் கரங்கள் கூப்பும்; கால்கள் ஓடும். கண்களைத் திறந்து பார்த்தால், அந்த தேவகானம் இழைத்த அதிசயப் பிறவி தேஜோ மயமாகத் தெய்வ லோகக் காட்சி தரும். நம்மை மறந்து நாம் மெய் சிலிர்த்து நிற்போம்; நம்மையறியாமல் நாம் கைநீட்டி நிற்போம்—பல்லெல்லாம் தெரியக் காட்டி!

அப்படி என்ன, அவர் இந்திர ஜாலக்காரரா? ...இல்லை, மகேந்திர ஜாலக்காரரா?

ஆம் அதற்கும் மேலே என்று சொல்லலாம். அந்த மனிதரின் சொல் முக்காலமும் நின்று நிலவும் விந்தைச் சொல்; மந்திரச் சொல்; தந்திரச் சொல் —அதுதான். ''ஸார், போஸ்ட்!''

இந்தக் கீதத்துக்கு சங்கீத டைரக்டர் தேவையில்லை; பின்னணிப் பாடகர் தேவையில்லை. ஆனால் இந்தப் பல்லவி உள்ளம் உருகச் செய்யும்; ஊனுருகச் செய்யும்; கேட்டோர் பிணி நீங்கும் இச்சொல்லை 'ஆரத்தி' எடுத்து வரவேற்காத மாட மாளிகைக் கூடகோபுரம், சாதாரண வீடு, எட்டடிக் குச்சு— ஏதாவது ஒன்று சாஸ்திரத்துக்காகிலும் இருந்தால் அது சர்வ நிச்சயமாகப் 'பலே செய்தி' யாகத்தான் பரிமளிக்க முடியும்!

ஒரு வீட்டுப் படி ஏறி இறங்குவதென்றால் அதற்குக்கூட ஒரு 'லிப்ட்' இருக்கலாகாதா என்று 'லகாரப் பெருமூச்சு விட்டு, கப்பல் கவிழ்ந்தமாதிரி தலையில் கையை லாகவமாக வைத்துக் கொள்ளும் அதிசய நாள் இது. அப்படிப்பட்ட நாளிலே சோர்வும் ஓய்வும் காணமல் கருதாமல், கருமமே கண்ணாகி, படிக்குப்படி ஏறி இறங்கி, எதிர்பார்த்திருப்பவர்களுக்கெல்லாம் 'உண்டு—இல்லை' என்பதை இதமொழியாக்கிப் பலமுடன் சொல்லும் அந்த ஒரு சொல்லுக்கு மாத்திரம் லட்ச ரூபாய் கொடுக்கலாம்—பணமும் மணமும் ஒன்று கூடும் சந்திப்பு நிலையமாக 'நாம்' இருக்கக் 'கொடுத்து' வைத்திருந்தால்!

அதோ பாருங்கள்—டெலஸ்கோப் இருந்தால் தலையைச் சுற்றித் தூர வீசி விடுங்கள்—கலப்படமில்லாத 'ஒண்ணும் நம்பர்' ஊனக் கண்களால் மட்டும் பாருங்கள் — ஏன் தெரியுமா? கோவில் கொண்டு விளங்கச் சகல யோக்கியதாம்சங்களும் ஒருங்கே நிரம்பப்பெற்ற அந்தத் தெய்வத்தின் சட்டையிலுள்ள 'ஆயிரம் கண்கள்' உங்களுடைய ஞானக் கண்களிலே பட்டுத் தொலைத்து, 'திருஷ்டி கிருஷ்டி' ஏற்பட்டு விட்டால் அதற்கு யார் ஜவாப்தாரி?

அந்த அரசாங்க ஆசைக்குள்ளே — ஜமீன் மோஸ்தரில் அணியப் பட்டிருக்கும் அந்த முண்டாசுக்குள்ளே—தோள்மீது இமயமலைப் போலச் சுமந்து கிடக்கும் தபால் பைக்குள்ளே—எலும்புந் தோலுங் கொண்ட அந்தப் பஞ்சை உருவத்தினுள்ளே ஒரு தபால்காரரையாவைத் தரிசிக்கின்றோம்? கண்ணுக்கெட்டாத தொலைவிலுள்ள நம் அருமைத் தந்தையை—அம்புலியின் எழில் காட்டி, அன்னம் பிசைந்தூட்டி ஆளாக்கிய அன்னையை—ஒரே ரத்த பாசக்குரல் எழுப்பும் உடன்பிறப்பை—காதலியை—இல்லற ஜோதியை—உயிர் காக்கும் தோழனை—'ப்ராக்ரஸ் ரிப்போர்ட்' அனுப்பும் காலேஜ் பிரின்ஸ்பாலை—பத்திரிகை ஆசிரியரை—இன்னும் எத்தனை எத்தனையோ பேரையல்லவா தரிசிக்கின்றோம்?

நடமாடும் தபாலாபீஸ்' வேண்டுமானால் தபால் இலாகாவில் நடைமுறைச் செயல்களின்

பட்டியலுக்குப் பெருமை தரட்டும்; ஆனால் இந்த 'நடமாடும் தெய்வம்' முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலோ, அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலோ கோயில் கொண்டால், அது அந்தத் திட்டத்தின் பிறந்த வேளைதான்!

இன்னும் கேளுங்கள்:

கதையை எழுதித் தொலைத்து பத்து பைசா தபால் தலையை வேறு அழுது பெட்டிக்குள்ளே திணித்து, அந்த வினாடியிலிருந்து தபாலாபீஸிலேயே டபிகிடக்கும் இரண்டாவது பிரம்மாக்களுக்கு— 'கடல் தண்ணியை முழுக்கத் தாண்டி, நல்லபடியா கடுதாசி எம்மவன் கைக்கு எட்டணுமே, காளி ஆத்தா!' என்று தபால் பெட்டிக்குச் சூடம் சாம்பிராணி காட்டும் உலகமறியாக் குப்பண்ணன்களுக்கு—'நாய்கள் ஜாக்கிரதை!' என்ற எச்சரிக்கைப் பலகையின் குடை நிழலிலே எழுந்தருளி, 'க்யா பாத் ஹை?' என்று விசாரிக்கும் 'படே ஆத்மி'களுக்கு இந்தத் தோழர், பேதம் கருதாத மணிப் பிரவாள நடையில் பதில் சொல்லும் பாணியே அலாதிதான், போங்கள்!

இவர் வருஷிப்பது இன்ப மொழியாக இருக்கலாம், இழவுச் சேதியாகவும் இருக்கலாம். சில சமயம் இன்னொருவருக்காக வேண்டி 'வசவு' வாங்கும் தடுப்பு ஆயுத மாகவுங்கூட இவர் 'திரு அவதாரம்' எடுப்ப துண்டு.

தில்லைப் பெருவெளியிலே ஆனந்த நடனமிடும் பெருமான் காலடி எடுத்து வைக்கும் போதெல்லாம்

புன்மையாளர்கள் நடுங்குவார்களாமே — அதே போலத்தான் 'வக்கீல் நோட்டீஸ்' எதிர்பார்க்கும் புண்ணியவான்களும், பொய்ச் சாட்சிகளும், இன்ன பிற போலி 'வெத்து வேட்டு' ஆசாமிகளும் நடு நடுங்க வேண்டும், இந்த வேடிக்கை மனிதரின் நிழல் பட்டமாத்திரத்திலே!

அது மட்டுமா?—அகில உலக முக்கியத்துவம் பெற்ற பிரமுகர் இவர்—நூற்றுக்கு நூறு உண்மை வாசகம் இது. காலத்தையும் தூரத்தையும் 'ராசி' பண்ணி வைக்கும் கால தூதன் இவர்—ஆனால் யமதர்ம ராஜன் என்கிறீர்களே, அந்தப் புண்ணிய வானுக்கும் இவருக்கும் 'ஸ்னானப் பிராப்தி' கூடக் கிடையாது!

போட்டோ பிடித்தாற் போல, குனித்த புருவமும், கொவ்வை இதழில் குமிழ்ச் சிரிப்பும் கொண்ட இந்தப் பேசும் தெய்வம், பாதை தெரியாமல் திண்டாடும் நண்பர்களுக்கு நம் விலாசம் சொல்லி, நம்மைக் 'காட்டிக்கொடுக்கும்' மார்க்க பந்துவாகவுமன்றோ காட்சி தருகின்றது?

''போஸ்ட் மேன், எனக்கு ஏதாவது லெட்டர் இருக்கா?''

''உங்களுக்கு இப்பத்தான் ஸார், ஊரிலே லெட்டர் எழுதிக்கிட்டு இருக்காங்க!''

''ஏம்பா, எனக்கு எம். ஓ. வந்திருக்க வேணுமே?''

''எம். ஓ. இல்லீங்க; எம். ஓ. ரசீதுதான் வந்திருக்கு!''

''என்ன அம்பி, அப்படிக் குதிக்கிறே?''

''காரணம் இருக்குது...என் தாத்தா சும்மா ஒண்ணும் சீட்டு வாங்கிக்கல்லே; ஐயாவுக்கு உயில் எழுதி வச்சுட்டுத்தான் டிக்கெட் வாங்கி யிருக்கார் ...இப்போ புரிஞ்சுதோ?''

விருப்பு வெறுப்பு, ஆசை பாசம், துயரம், சந்தோஷம் எதுவுமே இல்லாமல்—அதே சமயத் தில் அந்த எல்லோமே ஒன்று கூடித் தோன்றும் இந்தத் தெய்வத்தை உவமை காட்டிப் பேச எந்தப் புராணத்திலேனும் இடமிருக்கிறதா, சொல் லுங்கள்!

—★—

# அபாய அறிவிப்புக்கு ஜே!

எனக்கு நன்ருக நினைவு இருக்கிறது நான் இந்தத் தமிழ் மண்ணிலே 'குவா...குவா' என்று முதற் குரல் கொடுத்த அதேநேரத்தில், நான் செவி மடுத்த—அதாவது, கேட்ட முதல் பாட்டு என்ன, தெரியுமா?—''காயமே இது பொய்யடா, காற்ற டைத்த பையடா!'' என்பதுதான் அந்தப் பாட்டு. பாட்டின் ராகத்தையோ அல்லது தாளத்தையோ ஆராய்ந்தறிய அப்போது எனக்கு நேரம் இல்லே யென்ருலும், அப்பாடலின் அர்த்தத்தை—அந்த அர்த்தம் நளினமான சூட்சுமத்தோடு எச்சரித்துக்

காட்டிய உட்பொருளை—அந்த உட்பொருள் உள்ளடக்கிக் காண்பித்த அபாய அறிவிப்பை அப்போதே நான் அறிந்து கொண்டேன்; உணர்ந்தும் கொண்டேன். இல்லையென்றால். அபாய அறிவிப்பு விவகாரத்தைப் பற்றி இப்படிப்பட்ட ஆராய்ச்சியை நடத்த எனக்கு இன்று இப்படிப்பட்ட துணிவு வந்திருக்குமா, என்ன?—நீங்களே சொல்லுங்களேன்!

வாழ்க்கை என்பது ஒரு தத்துவம். அந்தத் தத்துவம், வாழ்க்கையை வாழ்க்கையாக விஞ்ஞான பூர்வமாக அறிந்து கொள்ளுவதற்குரிய சோதனையாகவும் அமைகின்றது. சோதனை என்றால், வெறும் சோதனைமட்டும் அல்ல; அச் சோதனையே ஓர் எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கிறது. அதனால்தான், நான் அந்த முதற் பாவைச் செவிமடுக்கும் பாக்கியத்தைப் 'பச்சை மண்ணாகப் பதவி ஏற்ற தருணத்திலேயே பெற்றிருந்தேன் போலும்! பாட்டைக் கேட்கும், பாக்கியம் பெற்றிருந்தது பெரிய அதிசயம் அல்ல; ஆனால், அப்பாடலை இந்தத் தாத்தா பதவி வரையிலும் இன்னமும் மறக்காமல் இருக்கின்றேனே, அதுவே ஒரு பெரிய அதிசயம்தானே?—அந்த அதிசயத்திற்குக் காரணம், அப்பாடலிலே பொதிந்துள்ள அபாய அறிவிப்புப் பண்புதான் என்ற 'சிதம்பர ரகசிய'த்தை நான் உங்களுக்குத் திருவாய் மலர்ந்தால், நீங்களும் அதிசயப்படாமல் இருக்க முடியாதல்லவா?

அந்த முதற் பாடலை மீண்டும் நினைவு படுத்தப் போகிறேன். தயை புரிந்து மன்னிக்கத்தான் வேண்டும்.

'காயமே இது பொய்யடா!
காற்றடைத்த பையடா!
மாயனார் குயவன் செய்த
மண்பாண்டம் ஓடடா!...'

அடடே. ஓடிவிடாதீர்கள். நில்லுங்கள் ஐயா, நில்லுங்கள். 'ட்யூன்' போட்டுப் பாடிப் பாருங்கள், அப்புறம், இந்தப் பாடல் எவ்வளவு இனிமையாக இருக்கிறதென்பதை நீங்களே உணர்வீர்கள். அப்போது, அதாவது நீங்கள் உங்களுக்குள்ளாகவே உய்த்துணருகின்ற காலை, இந்தப் பாடலின் அப்பட்டமான மேதைத் தனத்தை அல்லது கசக்கக்கூடிய உண்மையை—அல்லது, எச்சரிக்கை பொதிந்த பச்சையான தத்துவத்தை நீங்கள் உங்களையும் அறியாமல் உணர்ந்து கொள்ளவும் முடியும்!

'சூ, மந்திரக்காளி!' என்று நம்மை எச்சரிப்பதோடு நில்லாமல், அந்த மந்திரக்காளியையும் எச்சரித்து, அந்த எச்சரிக்கையின் அபாய அறிவிப்புச் சின்னமாகத் தன்னுடைய செப்பிடுவித்தை விளையாட்டின் கேந்திர நிலையத்திலே ஒரு மண்டை ஓட்டை காட்சிப் பொருளாக வைத்துக் கொண்டிருக்கும் குறளி வித்தைக்காரர்களை நான் எங்கள் பூவைமாநகரில் மட்டுமல்ல, நாகரிகம் வினாடிக்கு வினாடி வளர்ச்சி பெறுகிற சென்னை மாநகரத்திலும் கூட அடிக்கொரு முறை கண்டிருக்கின்றேன். இத்தகைய மண்டை ஓடு நம்முடைய வாழ்க்கையின் நிலையற்ற தன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகவே அமைந்துள்ளது; அல்ல, அமைக்கப்பட்டுள்ளது!

வாழ்க்கையின் இந்த உண்மையை—நியதியை அவ் வப்போது நமக்கு எடுத்துரைப்பதற்குத் தானே என்னவோ, மண்டை ஓட்டின் பயங்கரச் சித்திரத் தைப் போட்டு, அதனடியில்! அபாயம்! என்ற எச் சரிக்கையும் எழுதி, மின்சார இருப்புச் சந்திகளிலே தொங்க விட்டிருக்கின்றார்களோ?! அபாயம்— தொடாதே! என்ற கட்டளைக்கு அடிபணியாமல் இருந்தால், அப்புறம் நமக்கு நம்முடைய மண்டை ஓடுகள் தாம் மிச்சம் கிடைக்கும்!

அபாய அறிவிப்பும், எச்சரிக்கையும் இரட்டைப் பிள்ளைகள் மாதிரிதான். ஒன்றுக்கு ஒன்று ஆதார மாகவும் ஆதரிசமாகவும் இயங்கி வருகின்றன; இயக்கப்பட்டும் வருகின்றன. இதுவே சிருஷ்டிக்கு உகந்த தார்மீகப் பண்பாடாகவும் இலங்குகின்றது.

இந்நிலைக்கு உதாரணம் சொல்ல, எத்தனையோ விஷயங்கள் காத்திருக்கின்றன.

நமக்கு விதிக்கப் பெற்ற வாழ்வின் பயணத் தைத் தொடங்கவேண்டி, நாம் பயணத்தை மேற் கொள்வது உண்டல்லவா? அப்படிப்பட்ட பயணத் தின்போது, நமக்கு எச்சரிக்கைகள் விடுக்கும் சூழ் நிலைகள் எத்தனை எத்தனையோ உண்டுதானே! அபாய அறிவிப்புக்கள் நமக்கு வாய்த்திட்ட ஆசான் மாதிரி; அதாவது, தட்சணை விரும்பாத குருமாதிரி நாம் அவசரம் அவசரமாக வீதிகளிலே நடந்து கொண்டிருப்போம். ஒரு திருப்பம் வரும். பஸ்கள் திருப்பம் என்று பாராமல் அவற்றிற்கே உரித்தான வேகத்துடன்—'ஐந்து மைல் வேகம்' என்ற சிவப்பு

எழுத்து எச்சரிக்கைப் பலகைகளையும் அசட்டை பண்ணிவிட்டு ஓடோடி வரும். நம் விதி நம்மைக் காப்பாற்றியிருக்கும். பிறகுதான் நமக்கு ஞானோதயம் வரும்; தலையை நமிர்த்திப் பார்த்தால், "நில், கவனி, நட!" என்ற அழகான தூய தமிழ் வசனம் நம்முடைய அருமை மிகு விழிகளிலே தென்படும். போன உயிர் மீண்ட மகிழ்வும் பிறக்கும். அந்த எச்சரிக்கைப் பலகையின் அடியில் இன்னும் என்ன வெல்லாமோ உபதேசங்கள் பொறித்திருக்கும். அவற்றையெல்லாம் ஏறெடுத்துப் பார்க்க நமக்கு நேரம் இருக்காது; மனமும் இருப்பதில்லை. நமக்குத்தான் தலை போகிற அவசரத்துக்கு மட்டும் 'ரேஷன்' இருப்பது கிடையாதே! ஆனால் ஒன்று மட்டும் உண்மை. 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!' என்ற உள்ளுணர்வு மாத்திரம் நம்மையும் அறியாத விதத்திலே நமக்குள்ளே ஊடாடிக் கொண்டேயிருக்கும். நடந்துகொண்டேயிருப்போம் மீண்டும். ஆனால், திரும்பிப் பார்க்க மட்டும் மீண்டும் நமக்குச் சிந்தனை ஏற்படவே ஏற்படாது. அவ்வாறு ஏற்பட்டால் தான், மறுபடியும் அந்த எச்சரிக்கையை நாம் நெஞ்சிலும் நினைவிலும் பதிய வைத்திருப்போமே!

**"திரும்பிப் பார், மனிதா! திரும்பிப் பார்!**
**திருந்தப்பார், உன்னை நீயே திருத்தப்பார்!"**

பழைய நாடகமொன்றிற்கு நான் எழுதிக் கொடுத்த இந்தப் பாட்டின் 'பல்லவி' என்னுடைய வாழ்க்கை அனுபவம் எனக்கு அடிக்கடி சிவப்புக்

கொடி காட்டிக்கொண்டேயிருக்கும். இந்தப் பொது விதி எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும்தான் மனப் பாடம் ஆகவேண்டும்!

சரி, அதோ பஸ் வந்துவிட்டது.

பஸ்ஸில் ஏறிக் கொள்கிறோம். எடுத்த எடுப்பில் நம் கண்களில் சில அறிவிப்புப்பலகைகள் தென் படுகின்றன. ''சரியான சில்லறை கொடுக்கவும்!'' என்பது முதல் கோரிக்கை. 'சில்லரையா?—சில்ல றையா?' என்பதற்கான இலக்கண ஆராய்ச்சியை விட்டுவிட்டு, மாற்றி வைத்திருக்கிற சில்லறையைக் கொடுக்கின்றோம்! சில்லறை வைத்திருக்காதவர் கள், ரூபாய் நோட்டும் கையுமாக நின்று கண்டக் டரிடம் மல்லுக்கு நிற்கிறார்கள். 'கண்டக்டர்' ஜாக் கிரதை! நான் யார் தெரியுமா? நான் எதிர்கால லட்சாதிபதியாக்கும்! அடுத்த சீட்டுக் குலுக்கலில் எனக்குத்தான் முதல பரிசாக்கும்!' என்று கம்பீர மான குரலில் 'தாஜா' செய்கிறார் ஒரு 'ஆப்டி மிஸ்ட்'! ஏன் அப்படி நடக்காது என்ற சபலத்தில் கண்டக்டரும் மூச்சுக் காட்டாமல் பாக்கிச் சில்ல றையை எண்ணிச் சரியாகக் கொடுக்கிறார். ''சரி யான சில்லறை கொடுக்கவும்!'' என்ற எச் சரிக்கை கண்டக்ருக்கும் பிரயாணிக்கும் பொருந்தும் அதிசயத்தைக் கண்டு அதிசயப்படுகிறோம் நாம்.

பஸ் ஓடிக்கொண்டேயிருக்கிறது. திரும்பு கிறோம், ஏதாவது இடம் உட்காரக் கிடைக்குமா வென்று. 'பெண்கள்' என்ற குறிப்புப் பலகை காட்சியளிக்கிறது. அங்கே பார்த்தால், ஆண்கள்

அவ்விடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். 'பால் ஆராய்ச்சி'க்கு நேரம் ஒதுக்காமல், ஒதுங்கியுள்ள இடத்தில் 'சிவனே' என்று விழுந்து விடாமல் கைப்பிடிவாரைப் பற்றிக்கொண்டு நின்று தொலைக்கிறோம். 'பயணச் சீட்டைக் கேட்டு வாங்கவும்!' என்று மற்றொரு எச்சரிக்கை! பயணச் சீட்டை—ஆமாம், டிக்கெட் கேட்டு வாங்காதவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். திரும்புகிறோம். 'மூன்று வயதுக்கு மேற்பட்டு பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு முழுடிக்கட் வசூலிக்கப்படும்' என்று அடுத்த அபாய அறிவிப்பு செப்பும். அந்த வயது வரம்பு நம்மை ஒன்றும் செய்யமுடியாது என்கிற இறுமாப்பில், நாம் அகப்பட்டுக்கொள்ள ஆண்டவன் வைக்கவில்லை என்கிற தைரியத்தில், நாம் நிம்மதியாகப் பெருமூச்செறிகிறோம். அந்தப் பெருமூச்சில், 'ஓ மை காட்!...எனக்கு ஏன் இப்படி வயதை வளர்த்துவிட்டாய்?' என்ற முறையீடும் அங்கலாய்ப்பும் ரகசியமாகத் தொனிக்கும் சிதம்பர ரகசியத்தையும் நாம் மறந்து விடுவதில்லை. இறங்குவதற்காக வெளியே முண்டியடித்துக்கொண்டு விலகுகிறோம். அங்கே பார்த்தால், 'ஓடும் வண்டியில் ஏறவோ இறங்கவோ முயற்சித்தல் கூடாது!' என்று மற்றொரு அபாயம் அறிவிப்பாகப் பரிணமிக்கும். 'முயற்சித்தல்' என்று எழுதியிருப்பது பிழை. 'முயற்சி செய்தல்' என்றுதான் இருக்கவேண்டும என்ற உண்மையை வெளியிட்டு தமிழக அரசின் கோபத்துக்கு ஆளாகக் கூடாதே என்று. வண்டி நின்றபின் இறங்க முயல்கிறோம். இறங்குகையில்,

'இடுக்கண் வருங்கால் நகுக!'' என்று வள்ளுவர் எச்சரிக்கிறார். நமக்கு இடுக்கண் வராதபோது, ஏன் சிரிக்கவேண்டுமாம்?

சரி, இப்போது நமக்கு ரயில் பிரயாணம்—ரெயிலல்ல; ரயில்! டிக்கட் வாங்கிக்கொண்டு ஏறிக்கொண்டு நாணயமாகப் பயணத்தைத் தொடங்குகிறோம். 'கார்டு' சிவப்புக்கொடியைக் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு பச்சைக் கொடியைக் காட்டுகிறார். ஒரு சீட்டுக்கு—இருப்பிடத்துக்கு நான்கு பேர் என்பது ரயில் விதி. ஆனால் அங்கோ நாற்பது பேர் உட்கார்ந்திருப்பார்கள். சக பிரயாணிகள் விரும்பாத பட்சத்தில் ரேடியோவை போடக் கூடாது!' என்று எழுதப்பட்டிருக்கும். போடக் கூடாது என்றால் ரேடியோவை 'ட்யூன்' செய்யக் கூடாது என்பது பொருள். இந்தக் குறிப்பில் 'ட்ரான்ஸிஸ்டர்' சேர்க்கப்படவில்லையே என்று 'ஷரத்து' சேர்த்து, ட்ரான்ஸிஸ்டரை பாடவைத்து ரசிப்பவர்களும் இல்லாமல் இல்லைதான். ''குறைந்த லக்கேஜ், நிறைந்த இன்பம்'' என்று அடுத்த அறிவிப்பு. அங்கே பார்த்தால், லக்கேஜுக்குப் பதிலாக மனிதர்கள் கண்வளர்ந்து கொண்டிருப்பார்கள். மனிதர்களை லக்கேஜாக்கும் துணிவு யாருக்கு வந்ததாம்? ஒருவேளை, மொழிப் பிரச்னையில் சிக்கி, எழுதப்பட்டிருக்கும் மொழி புரியாத சிக்கலில் அப்படியும் அசம்பாவிதம் நேர்ந்திருக்கக் கூடும்! ''அபாய அறிவிப்பு—வண்டியை நிறுத்த, கைப்பிடியை இழு. அகாரணமாய் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு அபராதம் ரூ 250 வசூலிக்கப்படும்!''—

இது மற்ெருரு எச்சரிக்கை. 250 என்ற இலக்கத்தில் '0' அழிபட்டிருக்கும். அல்லது '2' கீறி அழிக்கப் பட்டிருக்கும். அபராதம் எவ்வளவு என்று பிடி படாமல், கைப்பிடியைப் இழுத்துச் சோதனை செய் யும் மாயவித்தையும் புரிபடாமல், நாம் நமது கண் களைத் திருப்புகிறோம். டிக்கெட் பரிசோதகர் டிக் கட்டுகளைப் பரிசோதிக்க வரும்போது, வெறும் அரிசி மூட்டைகளைப் பரிசோதிக்கும் இக்கட்டையும் தரிசிக்கிறோம். ரயில் நின்றால் போதும், காப்பிக் குரலும் 'இஞ்சிமுரப்பா' குரலும் பின்னிப்பிணையும். இரண்டும் ஒன்றுக்கொன்று அபாய அறிவிப் புப் பண்பு கொண்டவை என்ற வைத்திய சாஸ் திரம் தெரிந்தவர்கள், இரண்டையும் வாங்கிச் சாப்பிட்டு வைப்பார்கள்! பாட்டு கேட்கும் 'தூங் காதே தம்பி, தூங்காதே!' என்று பாடும் பட்டுக் கோட்டையாரின பாடலை படுத்துக் கொண்டிருப் பவர் சட்டை செய்யமாட்டார். சட்டையை இழுத்து மூடிக்கொண்டு அவர் தன்பாட்டில், பாட்டை அசட்டை செய்தவராகத் தூங்கிக்கொண் டேயிருப்பார். காரணம், அவர் 'தம்பி'யாக இல் லாமல், அண்ணனாக இருப்பதாகவும் இருக்கலா மன்றோ!

ரயிலைவிட்டு இறங்கி நடக்கிறோம். காப்பிக் கிளப் காட்சியளிக்கிறது. அங்கு காப்பி மட்டுமல்ல. இட்டிலி, தோசை, பூரியும் கிடைக்கலாம். 'பிராம ணாள் காப்பிக்கிளப்' என்று இருந்தாலும், நாமும் நுழையத் தடை இருக்க முடியாது 'பெரும் வியாதி யஸ்தர்கள் நுழையக் கூடாது!' என்ற அறிவிப்பு

நம்மை ஒன்றும் செய்துவிடாது. ஏனென்ருல், நமக்குள்ளாக நாம் சேமித்து வைத்திருப்பது சிறுவியாதிகள்தாம்! இங்குள்ள இனிப்புப் பண்டங்கள் அசல் நெய்யினுல் செய்யப்பட்டவை அல்ல!' என்று ஒரு போர்டு தொங்கவிடப்பட்டிருக்கும். அசல் நெய் எங்கே கிடைக்கிறது?—'டூப்ளிகேட் நெய்யே பரவாயில்லை என்று பலகாரங்களை வாங்குகிருேம், பலகாரங்களையும் சேர்த்து! அங்கு 'போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள்!' என்று மீண்டும் ஓர் அறிவிப்பு நம்மை எச்சரித்து, அடியில் ஒரு காப்பிந்தூள் கம்பெனியின் விளம்பரம் சிரிக்கிறது. "போலி எது, அசல் எது?" என்று ஆராய்ச்சிசெய்யும் தலைவலியை —அல்லது, தலைவிதியை காப்பித்தூள் ஆராய்ச்சியாளருக்கே விட்டுவிட்டு, நாம் அங்கிருந்து நகர்கிருேம் 'எச்சில் இலைகளை இங்கே போடவும்' என்ற இடத்தைவிட்டு விலக்கி, அங்கங்கே எச்சில் இலைகள் மிதந்துகிடக்க, நாம் ஜாக்கிரதையாக வெளியேறி, வழியில் நந்தியாக மறித்திருக்கும் கல்லாவில் பில்லையும் காசையும் கொடுத்துவிட்டு நடக்கிருேம்.

பெரிய சுவர். அங்கே 'இங்கு நோட்டீஸ் ஒட்டக்கூடாது!' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும் இடத்தை பலவகைச் சுவரொட்டிகளும் "அண்ணு, வாழ்க!"—'எங்கள் ஓட்டு காங்கிரசுக்கே!' என்ற வாசகங்களும் மங்கியும் மங்காமலும் ஒளிரும். இதில் விசேஷம் என்னவென்ருல், அந்த எச்சரிக்கை வெறும் எச்சரிக்கையாகவே சிரஞ்சீவியாக மிளிர்ந்து கொண்டேயிருக்கும்.

அது ஒரு பெருமனை-பங்களா. வீட்டின் எழிலை ரசிக்க நமக்கு மனம் ஓடும். ஆனால் வாசலில் கூர்க் காவுக்குக் காவலாக 'நாய்கள் ஜாக்கிரதை!'' என்ற அபாயத்தின் அறிவிப்புத்தான் முதன் முதலில் படும். அந்த எச்சரிக்கைக்குப் பின்னே, நாய்கள் இருக்கின்றனவா, அல்லது நாய் இருக்கிறதா, என்று யோசிக்கப் பயந்து, நாம் நம்மனத்தோடு போட்டிபோட்டுக் கொண்டு ஓடத் தலைப்படுவோமாக!

திரை அரங்குகளிலே 'திருடர்கள் ஜாக்கிரதை' என்று கொட்டை எழுத்துக்களிலே அச்சடித்திருக்கும். திருடர்களை உஷார்ப்படுத்தும் நோக்கத்தில் அர்த்தம் செய்துகொண்டு திருடர்களும், திருடர்களிடமிருந்து விழிப்புப் படுத்தும் விதத்தில் பொருள் செய்துகொண்டு சினிமா ரசிகர்களும் எச்சரிக்கையோடு இருக்க, 'திருடர்கள் ஜாக்கிரதை!' படத்தை ரசித்தவாறு திரும்பும் மனித ஜடங்களும் உண்டு. எங்காவது 'தீ' என்று பயமுறுத்திக் கொண்டு வெறும் மணல் வாளிகள் இருந்தால், அவை தீயை அணைக்க உதவும் சாதனம் என்று எச்சரிக்கைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

வழியில் பாங்கு. அங்கே 'With Safe Deposit Vault' என்று நியான்ஸைன் ஒளி மின்னிக் கொண்டிருக்கும் இதை உணராத திருடர்களுக்கு மண்டை ஓடுகூட மிஞ்சாது!

அனுமதியின்றி உள்ளே பிரவேசிக்கக்கூடாது!'' என்ற அறிவிப்பில் ஏதேனும் அபாயம் இருக்க

வேண்டும் என்று வருமுன் காக்கும் பண்போடு நாம் அதன்படி நடப்பதே சாலச் சிறந்தது. இதை நாம் 'கேரோ' செய்தால், வந்தது வினை! அதற்காகத்தானே வருமுன் காக்கும் அவசியத்துக்கு ஒரு குறளைச் செலவு செய்திருக்கிறார் தெய்வப்புலவர்.

பெட்ரோல் பங்கு. இங்கே 'புகை பிடிக்கக் கூடாது!' என்பதுதான் தலைமை எச்சரிக்கை. இங்கே 'இன்று ரொக்கம், நாளை கடன்!' என்ற குறிப்பு மட்டும் இருக்காது!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு தமிழக அரசு, எனக்கும் அழைப்பு அனுப்பி வைத்தது. அழைப்பில் இருந்த ஒரு சீட்டில், இந்தச் சீட்டைக் காட்டி, சீட்டை—இடத்தை நிர்ணயம் செய்து கொள்ளுங்கள்!' என்ற ஒரு குறிப்பும் அச்சிடப் பெற்றிருந்தது. இடம் கிடைப்பது அரிது என்னும் அபாய அறிவிப்பு அக்குறிப்பில் தொக்கியிருந்த உண்மை நயம், இடத்துக்காகப் போராடிய பிறகுதான் அடியேனுக்குப் புரிந்தது.

''அளவோடு பெற்று. வளமோடு வாழுங்கள்!'—'இரண்டு மூன்று குழந்தைகளே போதும்!'' என்று பட்டணத்து வீதிகளிலே விளம்பரங்கள் சிரிக்கும். அடியில் கவனித்தால், 'குடும்பக் கட்டுப் பாடு செய்திடுவீர்!' என்றும் இருக்கும். இதே போலத்தான் எல். ஐ. ஸி. விளம்பரங்களும்! இவையெல்லாம் நம் வாழ்க்கைக்கே உரித்தான அனுபவ எச்சரிக்கைகளாகும்!

அரசியலில் இம்மாதிரியான அபாய அறிவிப்புக் களும் எச்சரிக்கைகளும் சகஜம். தேர்தல் வந்து விட்டாலே, இவற்றுக்கு ஒரு தனிப்பட்ட 'மவுஸ்' பிறக்கும்.

அரண்மனைக் காரத்தெரு. பாம்பாட்டி வித்தை செய்கிறான். அவனுக்குப் பாடவும் தெரிந்திருக் கிறது. பாம்பாட்டிச் சித்தருக்கு வாரிசோ, என் னவோ?

''ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் அவர் பண்ணும் பாண்டம்
வரையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே!''

பாட்டு கர்ண கொடூரம் தான். ஆனால், பாட் டின் வதி நமக்கே விதியாக அமைய, நாம் சற்றே சிந்திக்கவே துணிகிறோம். சிரிக்கிறோம். ஏனென் றால், சிரிக்கத் தெரிந்தவன் தான் மனிதன்!

நடக்கிறோம். சைனாபஜார். அதாவது, சீனத் துக் கடைவீதி. அழகும் அபாயமும் சேர்ந்த இடம். சமூகம்கூட ஒரு சைனாபஜார் தான்!'—இது என் சிந்தனை!

''இடது பக்கம் போ!'' என்ற ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோம். 'நோ பார்க்கிங்' என்ற கம்பத்தைச் சுற்றி புதிய பணக்காரர்கள்—பழைய பணக்காரர்களின் புதிய—பழைய வாகனங்கள் சுற்றித் தேடுகிறார் ஒரு தமிழர். 'பார்க்' ஏதாவது தென்படுமாவென்று தேடுகிறார் போலும்! 'நோ

பார்க்கிங்' என்ற விளம்பரம்-அல்ல, எச்சரிக்கையை அவர் அறியார். ஏனெனில். அவர் தமிழர். ஆங்கிலேயரென்றால், புரிந்திருக்கும்! இங்கே, மொழிகூட ஓர் அபாய அறிவிப்புதான்!

சீனாவும் பாகிஸ்தானும் பாரதத்துக்கு விடுக்கும் அபாய அறிவிப்புக்களை—அல்லது எச்சரிக்கைகளை '144' போட்டு நாம் ஒதுக்கிவிடப் பழகியவர்கள் நாம். காந்தி ஒளியும், ஜவாஹர் ஜோதியும் அவர் கட்குக 'டேஞ்சர் சிக்னல்' காட்டி வருகின்றன.

திருக்குறள் நூலே ஓர் எச்சரிக்கைதான்!

எச்சரிக்கை இல்லையென்றால், வாழ்க்கை இல்லை. வாழ்க்கை இல்லையெனில், எச்சரிக்கை கிடையாது. இவை இரண்டும் இல்லாவிட்டாலோ, பழமொழிகள் இல்லை; புதுமொழிகளும் இருக்கமாட்டா. அபாய அறிவிப்புக்களை நாம் அலட்சியம் செய்தல் கூடாது. ஏனென்றால், வாழ்க்கையே பொம்மலாட்டம்!

ஒரு பாடல்; நான் எப்போதோ கட்டிய பாட்டு இசையை உங்கள் இச்சைப்படி அமைத்துக்கொள்ளலாம். எச்சரிக்கை ஏதும் இல்லை. ஆனால் பாடலில் ஏகப்பட்ட அபாய அறிவிப்புக்களும் எச்சரிக்கைகளும் என்னையும் மீறி விழுந்து 'அபயம்' அளித்திருக்கின்றன. 'கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனை' என்று பத்திரிகைகளிலே காணப்படுமே, அம்மாதிரி, இப்பாடலில் உள்ள எச்சரிக்கைகளும் அபாய அறிவிப்புக்களும்

கற்பனை என்று சொல்லவில்லை நான். அவை எல்லாம் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது சதவிகிதம் உண்மை!

சரி, பாடலுக்கு வருகிறேன்:

சங்கராபரண ராகம்
ஏக தாளம்

பொம்மலாட்டம், வாழ்க்கை பொம்மலாட்டம்
ஆட்டம், பொம்மலாட்டம்!

பொம்மலாட்ட வாழ்வதனை வாழ்ந்துவிட்டாலோ
ஆட்டம், களியாட்டம்!

சூத்திரதாரியாய்த் தெய்வம் இருக்கையில்
மனிதன் கோட்டை கட்டுகிறான்.
சூத்திரக் கயிறு அறுந்து விட்டாலோ
மனிதன் கோட்டை விடுகின்றான்!

பொம்மலாட்டம் வாழ்க்கை பொம்மலாட்டம்
ஆட்டம்: பொம்மலாட்டம்!

சூத்திரக்காரன் நினைத்தால் பொம்மை சிரிக்கும்,
சூத்திரதாரி நினைத்தால் மனிதன் சிரிப்பான்;
சிரிக்கவும் அழவும் பொம்மைகள் பழகும்;
சிரிக்கவும் அழவும் மனிதன் பழகுவதில்லை!
சிரிப்பும் அழுகையும் சேர்ந்ததே வாழ்க்கை!
இதுவே வாழ்க்கை, இதுவே நியதி!

பொம்மலாட்டம், வாழ்க்கை பொம்மலாட்டம்;
ஆட்டம், பொம்மலாட்டம்!

இதோ, அபாய அறிவிப்புக்கு 'ஜே!' போடுகின்றேன்!

—★—

# கல்லும் சொல்லாதோ?

ஔவைப்பாட்டி பாடிய ''இளமையில் கல்'' என்ற அந்த ஆத்திசூடிப்பாடலை இளமை விடை பெற்ற பின்னர்தான் நான் தெரிந்துகொள்ள முடிந்தது. இப்படியொரு பாடல் உண்டென்னும் ரகசியத்தை யாராவது பெரிய மனசு வைத்து அடியேனிடம் முன்கூட்டியே கோடிகாட்டியிருந் தால், இளமையிலேயே அப்பாட்டைக் கற்றுக் கொண்டு, பாட்டிற்குக் கவுரவம் அருளியிருக்க மாட்டேனு? இளமையை விட்ட குறையோ, அல்லது இளமை கழிந்த பிற்பாடு அப்பாட்டினைத் தொட்ட குறையோ, இப்போது எனக்கு எல்லா விஷயமும் ரொம்பத் தெரிந்திருக்கிறது. அவ்வளவு தெரிந்து கொண்ட காரணத்தினுல்தானே என்னவோ ''இளமையில் கல்'' என்கிற பாவில் உள்ள ''கல்'' என்ற சொல்லை மட்டும் நான் பற்றுடன் பற்றிச் சிக்கெனப் பிடித்துக்கொள்ள நேர்ந்திருக்கிறது. அதன் விளைவுதான் இந்தக் ''கல்'' ஆராய்ச்சி!...

அப்பொழுது எனக்கு விணுத் தெரியாத பருவம். யாரும் விடுபோட்டால் விடை சொல்ல ''திரு திரு'' வென்று விழிக்கும் பருவம் போலும்! மழை கொட்டுகொட்டென்று கொட்டிக் கொண் டிருந்தது. வாசலில் எட்டிப்பார்த்தால் ''ஐஸ் ஃப்ரூட்'' காரன் அனுதை ரட்சகனுகத் தரிசனம் கொடுத்து நின்ருன். நான் அனுதையல்ல என்ற தைரியத்தில், உடனே தொண்டையைச் சரிப்படுத்

திக்கொண்டு, 'ஐஸ்ப்ரூட்' -தாகத்தை தாபத்தை அஞ்சல் செய்தேன், அம்மாவிடம். ''அஞ்சேல், அபயம்!'' என்று சொல்லவேண்டாமா அம்மா? பத்துமாதம் சுமந்தவளுக்கு ஒரு காலணுவை என்னிடம் விட்டு வீச மனம் வரவில்லை. ''மழை ஊத்துதுடா, பாலு! அதைத் தின்னுல், சளிபிடிச்சுக்கும்!'' என்று டாக்டரம்மாமாதிரி அபாய அறிவிப்புக் கொடுத்தாள். என்னுடைய ''ஐஸ் ஃப்ரூட்'' தவம் உடைந்தது; அக்கணமே என் மனசான மனசும் உடையப் பார்த்தது. மனம் உடைந்தால் என்னுவது? உடனே வீட்டை விட்டு, வீட்டிடம்கூட சொல்லாமல் கேள்ளாமல் ஓடிப்போய் விட்டேன். ஓடிப்போய்விட்டேன் என்ருல், லண்டனுக்கா நான் போவேன்? என் பாட்டி வீட்டுக்குள் போய் அஞ்ஞாதவாசம் செய்தேன். அந்த ஒரு மணி நேரத்திற்குள் பாவம், அம்மா படாத பாடு பட்டுவிட்டாளாம். அவளை இனியும் சோதிக்க விரும்பாமல், அவள் முன் தோன்றினேன். ''பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுங்கிறது சரியாய்ப் போச்சேடா!'' என்று அழுதபடி, காலணுவுக்கு அரையணுவாக என்னிடம் கொடுத்தாள். நான் ஐஸ் ஃப்ரூட்காரனிடம் அந்தக் காசைக் கொடுத்த துப்பைக் கண்டு பிடிக்க, அப்போது போலீஸ் நாய்கள் அமுலில் இல்லை!

எனக்கு விஞ தெரியும் பருவம் வந்தது. அதாவது, விஞவை விடுக்கவும், விடுக்கப்படும் விஞவைத் தெரிந்துகொள்ளவும் உரிய வயது வந்தது. உடனே கொஞ்சமும் தாமதம் செய்யாமல் எனக்

குக் கால்கட்டு போடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குச் சாட்சியாக ஓர் அம்மிக்கல்லும் ஓர் அருந்ததியும் அமைந்தன. ஒருநாள், சோறு படைத்தாள் என்னைக் கொண்டவள் அரிசியிலிருந்து கற்களை விலக்கிப் போடக்கூடாதா? என என் ஆத்திரத்தை அவளிடம் காட்டினேன். வேறு நான் என்ன செய்வேன்? வியாபாரி அரிசி+கல் வியாபாரத்தை ''ரேஷன்'' செய்வதற்காக, நாலுபேரைப்போல, அரசாங்கத்தை ஏச முடியுமா? ஏசினுல்தான், சட்டம் என்னைச் சும்மா விடுமா? கோழி விரட்டிக்கிடந்த ஒரு கல்லை-ரொம்ப ரொம்பச் சின்னக் கல்லொன்றை எடுத்து என் மனையாட்டிமீது வீச முயன்றேன். ஆமாம், முயன்றேன். ஆனுல் வீசுவேனு? அதற்குள் அவள் கல்லும் கரையும் வண்ணம் அழுதாள். ''கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன்னு எங்க பாட்டிக்குப் பாட்டி சொன்னதை மதிச்சு நடக்கிற எனக்கு இந்தத் தீவினையா?'' என்று ''வசனம்'' பேசினுள், நானே குத்துக்கல்லாக அப்படியே நின்றுவிட்டேன். நான் கேவலம் ஒரு கல்லுக்கும் புல்லுக்கும் ஈடாக நேர்ந்ததேயென்று கல்லாய்ச் சமைந்தேன். ஆனுல் அவள் சொன்ன அப்பழமொழியின் தத்துவம், என் வயிறு காய்ந்த பிற்பாடு தான் எனக்குப் புலப்பட்டது. ''கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்க் குடியின் மகத்தான பண்பாட்டில் கணவன் என்ற பாத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புக்கும் மரியாதைக்கும் கல்லும் புல்லும் உவமையான 'விதி' யை நான் இன்றுவரை மறந்தது கிடையாது!

கல்லினுள் தேரைக்கும் கர்ப்பை உயிர்க்கும் புல்லுணவு தந்து போற்றுகிருனும் தயாளனுன கடவுள். இந்தச் சிருஷ்டியின் அதிசயம் நாளது வரை எனக்கு விளங்கவே மாட்டேனென்கிறது. படைப்புத் தத்துவத்திலேயே கல் அமர்ந்து இமாலயப் புகழ்பெற்று விளங்குகிறதென்ருல், கல்லை நான் கடவுளாகத் தொழாமல் தப்பமுடியுமா?

''சரித்திரம் திரும்பவும் நடக்கிறது'' என்ெருரு வாசகம் உண்டல்லவா? இவ்வுண்மைக்கு ஆத்தாரமாகத்தான். கடல்மல்லைச் சிற்பங்களும் அஜந்தா, எல்லோராச் சிற்பங்களும் கல்லாகவும் கலையாகவும் பரிணுமம் பெற்றுச் சிரஞ்சீவிப் புகழ் பெற்றுத் திகழ்கின்றனபோலும்! புதைபொருள் ஆராய்ச்சியில் இந்தக் கல் பெறுகிற மதிப்பே அலாதி!

வழியில் கிடக்கும் கற்களை நாம் மதிக்காமல்- மதிக்கத் தெரியாமல் எற்றிவிட்டு நடக்கிருேம். ஆனுல் அவை சிற்பியின் கைவண்ணம் பெறும் போதுதான் நமக்கு அந்த வெறும் கற்களின் மகிமை தெரிகிறது! கல்லில் பிறந்த கதைகள் ஒன்ரு இரண்டா? இல்லை, கல்லில் பிறந்த கடவுள்கள் ஒன்ரு, இரண்டா?

எறும்பு ஊறக் கல் தேயும் என்கிருர்கள், கண்டவர்கள். கரைப்பார் கரைத்தால், கல்லும் கரையும் என்றும் சொல்லப்படுகிறது. கல்லைக் கரைத்த சித்தர் இனம் இவர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடும்! கல்லையும் மண்ணையும் சோருக ஆக்கிப்

புசித்து வருவதாக மேலே நாட்டுச் செய்தியொன்றைச் சமீபத்தில் பத்திரிகைகளில் படித்தேன். விஞ்ஞானம் விண்ணை அளப்பதுடன், மண்ணையும் அளந்து வருகிறது. ''கல்லேத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானே'' என்று ஏங்கிய பழைய கவிஞர் கிடைத்தால், அவர் வாயில் ஒருபடியல்ல—ஒரு பிடி ரேஷன் ஜீனியைப் போடத் தயார் நான்! அரிசியிலிருந்து கல்லேப் பொறுக்கும் மாயத்தைக் கண்டுபிடிக்க எண்ணியிருக்கும் என் மூளேக்கும் அப்போது ஓய்வு கிட்டுமே! சிறுநீரகத்தில் கற்கள் சேருவதால், அறுவைச் சிகிச்சைக்கு ஆளான சரித்திரபுருஷர்களேப் பற்றிய செய்திகளும் நம்மைத் திடுக்கிடவைப்பதுடன், கற்கள் நம்முள் விசுவரூபம் எடுக்கவும் தவறுவது கிடையாது. கிணற்றில் போட்ட கல்லாக நாம் ''கம்''மென்று இருப்பதைத் தவிர வேறு வழி ஏது?

'கல்' என்றால், 'வெறும் கல்' என்று நாம் சும்மா இருந்துவிடக்கூடாது. கல்லில் வைரக் கல்லும் உண்டு. சாதாரணக்கல்லும் உண்டு. அதை உணர நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு ஆதார மூலம் 'கல்' தான். கல்=படி.

கௌதமர் சாபமிட்டார் அகலிகைக்கு. கல் ஆனாள் அவள். 'கல்லானாலும் கணவன்' என்ற மூதுரையை அறிந்திருக்க வேண்டும். கல்லே அகலிகை ஆக்கினன் ஸ்ரீராமன். சாபவிமோசனத்திலும் கல் இடம் பெற்றுவிட்டது.

இமயத்தினின்றும் கல் கொணர்ந்தான் செங் குட்டுவன. கண்ணகி உருவானுள். சிலம்பு வாழ் கிறது!

தலையில் கல் சுமக்கச் செய்து பழிவாங்கியவன் தமிழன். அபிடேகபாண்டியன் கல்யானைக்குக் கரும்பு கொடுத்த படலம் திருவிளையாடற் புராணப் புகழ் கொண்டது! கல்லால் எறியுண்டவன் கடவுள் ஆயிற்றே! கல்லடிபட்டாலும் கண்ணடி பட நாம் தயாராக இருக்கலாகாது!

மனிதன் கல்லாக மட்டும் இருந்துவிடக்கூடாது. இந்தியதிக்குக் 'கல்வெட்டுக்கள்' தேவையில்லை.

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே!" என்று கேட்கும் பட்டினத்தடிகள் ஈசன் இருக்குமிடத்தைச் சுட்டி, சொல்லிலும் சொல்லினும் வேதச் சுருதியிலும் அல்லிலும் மாசற்ற ஆகாயத்திலும், ஆய்ந்துவிட்டோர் இல் லிலும் அன்பரிடத்திலும் ஈசன் இருக்குமிடத்தை வரையறுக்கின்ருர். 'கல்லுள் இருந்த கனல் ஒளி' யாய் இருக்கும் ஈசனின் விந்தையையும் அடிகளார் இயம்புகின்ருர்.

கல்லெல்லாம் மாணிக்கக் கல் ஆமோவென்று அங்கலாய்த்தார் புலவர் ஒருவர். ஆனல் கல்லுக்கு ஓர் இமயம் உண்டு என்பதையும் நாம் மறக்க முடி யாது. சரித்திரத்தில் 'கற்காலம்' என்ருெரு பிரிவு உண்டு. கற்கால வாசிகள் 'சிக்கி முக்கி' கற்களை உரசி, தீ உண்டாக்கிஞர்கள். ஓரே கல்லில் நந்தி

யையும் பிரஹதீஸ்வரர் கோயிற் கலசத்தையும் அமைத்தான் இராஜராஜ சோழன்!

'நம் தந்தையர் செய்த விந்தைகள்' என்கிற நூலில் கல் சொல்லும் கதையை பேராசிரியர் கல்கி அவர்கள் பாங்குற வருணித்துள்ள அழகே, அழகு!

இலக்கியத்தில் 'கல்' பெறுகிற இடங்கள் பலப்பல.

"களிறு கடை இய தாள்
மாவுடற்றிய வடிம்பு
— — — — — — —
கல் அலைத்த தோள்!"

இது எட்டாம் பதிற்றுப் பத்துப் பாடல் வரியாகும். 'கல் சேர்பு இருந்த சில் குடிப்பாக்க'த்துச் சூழலை 'அகம்' செப்பும்.

"செல்லாரும் பொழில் சூழும் புலியூரம்
பலவாண தேவா! உம்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென்று இரங்கி அருள்
ஈந்தது என்ன? இகழ்ச்சியொன்றும்
சொல்லாமன் மலரைக் கொண்டெறிந்த
வினைக்கொன்ற
தென்ன? சொல்லு வீரே!..."

—இப்படிக் கேட்கும் திறன் படைத்தது தனிப் பாடல். காளமேகப் புலவர் கேட்கிறார்!—ஸ்ரீ நடராசரைத் தரிசிக்கையில்!

எதற்கும் மசியாதவனை 'கல்லுளி மங்கன்' என்பார்கள் பெரியோர்கள். கல்லுக்குச் சிற்றுளி போதும். கல் கவிபாடும்; கலைகாட்டும் 'கல்...கல்!' என்ற நாதமே கல்லினின்று பிறந்த் ஞானலயம் தான். 'கல்லூர்' என்று ஓர் ஊர் அறந்தாங்கி—காரைக்குடி பஸ் வழியில் உள்ளது. இங்கே பெரும் பாலான மனைகளுக்குக் கற்கள்தாம் சுற்றுச் சுவர் களாகி உள்ளன. மாவுக் கல் பண்டங்களும் மாவுக் கல் கோலங்களும் இப்போதும் புழக்கத்தில் இருக் கவே செய்கின்றன.

இன்னொன்று:

பிறந்த நாட்டுக்காகத் தங்களது இன்னுயிர் களை ஈந்த மாவீரர்களை வியந்துபோற்றி ஏற்றினர் மக்கள். கல் எடுத்து அவ்வீரர் தம் நினைவுக்குச் சின்னங்கள் எழுப்பினர். அக் கல்லில் வீரர்களின் பெருமைகளையும் பெயர்களையும் குறித்தனர். மயிற் பீலியும் மலர்மாலையும் சூட்டித் தொழுதனர். இவ் வகையான வழிபாட்டுக்கு—பாராட்டுக்கு 'நடுகல்' நிகழ்வுகள் அடிக்கல் பரப்புகின்றன. கோப்பெருஞ் சோழனின் நடுகல்லைக் கண்டு, பொத்தியார் எனும் புலவர் பாடிய பாடலை புறநானூறு சொல்லும்.

> "வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
> நனந்தலை யுலகம் அரந்தை தூங்கக்
> கெடுவில் நல்லிசை சூடி
> நடுகல் லாயினன் புரவல னெனவே..."

**இனி கதை ஒன்று:**

தமிழறியும் பெருமாள். முற்பிறப்பில் ஓர் இள வரசி; அவளை வென்று மணம் புரிந்துகொண்ட விறகுத்தலையன் ஓர் இளவரசன். முற்பிறவியில் இவர்கள் இருவரும் தம்பதிகளாய் வாழ முடிய வில்லை. விறகுத்தலையன், தமிழறிவாளை மணப் பதற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளை வெல்ல, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரான நக்கீரரின் அமு தத் தமிழ்ப்பாக்கள் கை கொடுத்தன.

தமிழறிவாளைச் சந்திக்க வருகிறான் விறகுத் தலையன். நக்கீரர் அவ்வாறு வேடம் புனைந்திருக் கிறார். தோழிகளிடம் விறகுத்தலையனை அழைத்துச் சாப்பாடு போடும்படி ஆணையிடுகிறாள் தமிழறி வாள். அவ்வாறே அப் பெருமனையின் பதினாறுவது கட்டுக்குள் அழைத்துச் சென்று, ஒரு கல்லால் இலை யைத் தைத்து, வெந்ததும் வேகாததும் கல்லும் நெல்லுமாய்ச் சாப்பாடு போடப்படுகிறது.

நக்கீரர் சினம்பரப்பி நாவசைக்கிறார்.

“கல்லொன்று நெல்லிரண்டு காணுமணல் மூன்றரிசி
கல்லையுட னஞ்சுவகை காட்டிலேன்—வில் நுதலாய்!
வல்லபடி செய்த வகையெல்லாம் உங்களது
முல்லைநகை யாட்கு மொழி!...”

இப்பாடலைக் கேட்ட தோழிகள், தம் தலைவி யிடம் போய்த் தகவலைச் செப்ப, உடனே அவ்விற குத்தலையனைக் கச்சேரி மண்டபத்து வரச்சொல்லி மீண்டும் ஆணையிடுகிறாள். அவ்வாறே விறகுத் தலை யனை நக்கீரர் அங்கு செல்லும் தருணத்தில். சூத் திரப் பதுமைகள். அவரை அவமானப் படுத்த

எத்தனம் செய்ய, அவர் பலவாறு சமாளித்தார் அப்போது காந்தக் கல்லை கற்றூணிலே தட்ட அதிலே நெருப்பு பறந்தது.

இப்படிப் பல சோதனைகளைக் கடந்து, பின் திருமணம் கைகூடுகிறது!

இப்படி, கல் சொல்லும் கதைகள் அனந்தம்.

நாதானியல் ஹாதர்ன் என்ற அமெரிக்கநாட்டு ஆசிரியர் எழுதிய 'சூரிய காந்தக் கல்' (The Great Carbuncle) இலக்கிய ரசனை கொண்டது.

ஓராண்டில் பூமிமீது விழும் விண் கற்களின் எடை ஏறத்தாழ மூன்று கோடி டன்களாம்!—'ஸ்புட்னிக்'குகளின் வாயிலாகத் தெரிய வந்த உண்மை இது.

நட்டகல்லே சாமி.

கல் தெய்வம்.

ஆனால், தெய்வம் கல்அல்ல!—அல்லவே அல்ல!

இது தருமவிதி!

கல் கசியும்!

இது, வாழ்வியல் தத்துவம்.

கல் கனியாகும்!

இது; சிருஷ்டித் தத்துவம்.

—★—

# "ஸார், மணி என்ன?"

எப்போதோ படித்த மேலைநாட்டுக் கதை ஒன்று; அதை நான் எப்போதுமே மறப்பது இல்லை,

கிழவி ஒருத்தி. அவள் வீட்டிலே கடிகாரம் ஒன்று, அதைச் சாட்சி வைத்து, கொலை ஒன்று நடந்துவிடுகிறது. கடிகாரத்தையும், கிழவியையும் சாட்சி வைத்து, துப்பறியும் இலாகா வழக்குத் தொடுத்தது. அக் கொலை நிகழ்ந்த நேரம் பகல் மணி பன்னிரண்டு. இக்குறிப்பும் வழக்குக்கு ஆதார சுருதியாகிறது. கடைசியில், கொலை செய்தவன் தப்பிக்க நேரிடுகிறது. காரணம் ஒன்று: கிழவிக்குச் சித்தபேதம். காரணம் இரண்டு; ''என் அருமைமகன் இறந்த நேரம்; பகல் பன்னிரண்டு மணி. அப்போது நிறுத்தப்பட்ட கடிகாரம் இது. ஆகவே, எனக்கு இந்த ஒரு உண்மை மட்டிலும் எப்போதுமே நினைவிலிருக்கிறது. இந்த உண்மையை மட்டும் மறக்காத அளவுக்கு ஏன், மறக்க முடியாத அளவுக்குமட்டிலுமே எனக்குச் சுயசித்தம் இருந்து வருகிறது!'' என்று சாட்சியம் சொன்னாள். அரசாங்கப் பிரிவு தொடுத்த வழக்கு தோற்ற நிகழ்ச்சிகளுள் இதையும் அடிக்கடி நினைவுபடுத்தும் மேலைநாட்டைச் சார்ந்த குற்றப்பிரிவினைச்சேர்ந்த சஞ்சிகைகள்.

காலத்தின் விந்தைக்கு எத்தனை எத்தனையோ திருட்டாந்தங்கள் உண்டு.

காலம் ஒரு செப்பிடுவித்தைக்காரன். நான் கையாண்ட உவமைகளுள் எனக்குப்பிடித்த உவமை

இது. ஆமாம், காலம் ஒரு செப்பிடுவித்தைக் காரன். அவன் செய்யும் வித்தைகள் வியப்பூட்டும்; விளையம் தரும்; விவேகமும் ஊட்டவல்லன. இது மாதிரியேதான் காலம். காலத்தின் முப்பெரும் பிரிவுகளுக்குள் அடங்கவல்லது உலகமும் உலகத்தின் வாழ்வும். நேற்று, இன்று, நாளை என்ற முப் பெருந்தத்துவங்களைக் கையாளாத சிந்தனையாளர்கள் அபூர்வம். அவர்களுக்குக் காலம் செய்து காட்டுகிற செப்பிடுவித்தைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, காலத்தின் பிரதிபலிப்புக் கண்ணுடியாகச் சரித்திரம் சித்திரிக்கப்படும். காலத்துக்கு ஆட்பட்டு நிலவும் சக்தியை மீறும் சக்தி உலகிலே எந்த ஒரு ஜீவனுக்குமே இல்லை எனலாம். ஆனுல், காலத்தை ஆளும் சக்திபடைத்ததாக எங்களூர்ப் பஞ்சாயத்துப் போர்டு கடிகாரம், எங்களூர் சின்னச்சாமி வீட்டுத் தலைக்கோழி, எங்கள் வீட்டு முற்றத்து வெய்யில் ஆகிய இவை மூன்றும் அடிக்கடி 'ஜம்பம்' அடித்துக் கொள்ளுகின்றன.

'பொழுது புலர்ந்தது யாம் செய்தவத்தால்!' என்று பாடினுர் தேசீயமகாகவி. கடிகாரம் ஓடு முன் ஓடு!' என்ருர் புரட்சிக்கவியரசர். பொழுது புலர்ந்ததென்ருல், அப்போது காலைமணி ஆறு என்று பொருள். பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பும் தாய் கடிகாரத்தைச் சுட்டி, அத்துணை சுறு சுறுப்புடன் ஓடச்சொல்கிருள். இவ்விரு காவிய நயங்களும் காலத்தின் கடமைக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

உரியகாலத்தே செய்த நன்றி சிறிதென்ருலும், அது ஞாலத்தினும் மிகச்சிறப்புடையதாகும்!—இது வள்ளுவ வாசகம். இவ்வாசகத்தில் காலத்தின் மாண்பு பெரிதுபடப் பேசப்படுவதை பார்க்கிருேம் நாம்.

ஒரு சமயம், 'உமா' அலுவல்கத்திற்கு அவசரம் அவசரமாக நடந்து கொண்டிருந்தேன். கடிகாரம் மட்டும் காலத்தை மறைக்கவில்லை; அன்றைய மந்தாரமும் காலத்தை மறைத்து விட்டது. பத்திரிகைத் தலையங்கம் எழுதவேண்டிய பொறுப்புத் தான் என்னை அவ்வாறு விரைவுபடுத்தியது அவசரத்தோடு அவசரமாக, காலத்தைத் திருத்திக் கொண்டேன். அதாவது, கடிகாரத்தைச் சரிப் படுத்திக் கொண்டேன். வழியில் ஒருவர் தலை போகிற அவசரத்தோடு, ''ஸார், மணி என்ன?'' என்று அலறினர். நின்று நிதானமாக மணியைச் சொன்னேன். உடனே அந்த மனிதர் வெகு அலுப்புடன், ''பூ! இவ்வளவுதானு?' என்ருரே, பார்க்கலாம். காலத்தை அவரது அந்த 'பூ!' என்னும் குறிப்பு எவ்வளவு துச்சமாக்கி விட்டது. அந்தப் புண்ணியவான் தான் காலத்தை வென்றவர்! காலைக் காட்சிக்குத் திரைப்படம் பார்க்கச் செல்லும் குதூகலத்தில் அவர் அப்படிச் சொல்லி விட்டார்!

வாழ்ந்து கெட்டவர்களைக் கண்டால், 'பாவம்' 'போதாத காலம்!' என்பார்கள். தாழ்ந்து உயர்ந்தவர்களைத் தரிசித்தால், ''பேஷ், உமக்கு யோக

காலம்!'' என்பார்கள். ஆக, காலம் இவ்விரு துருவ நிலைகளுக்குமே சாட்சியங்களாகின்றன. ஹரிச்சந்திரன், நளன், பஞ்பாண்டவர்கள், இராம பிரான் முதலான பிரமுகர்கள் காலத்தின் கோலத் துக்குப் புள்ளிகள்!

காலத்தை ஆளுபவன் காலதேவன். அதனால் தான், அவனுக்கு அப்படிப் பெயர் வந்தது போலும்! ஆனால் காலத்தை ஆட்படுத்துபவர்கள் சோதிடர்கள், அப்பால், பஞ்சாங்கங்களும் காலண் டர்களும் ராகுகாலம், எமகண்டம், குளிகை என்று கால்த்தைப் பாகு படுத்தி ஒதுக்குகிறார்கள். ஆனால், சுபவேளைக்கு மட்டும் சோதிடர்கள் ஆரத்தி எடுக்கத் தவறமாட்டார்கள். மங்கலநல்லோரை களில்தான் திருமணம் முதலிய சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆனால், காலத்தை மதிக்காமல் சுபநேரங்கடந்து நடைபெறும் நல்ல நிகழ்ச்சிகளுக் கும் அவ்வப்போது குறைவில்லைதான்.

பெரிய மனிதர்களைக் காணவேண்டுமென்றால், அதற்கான நேரம் காலம் வேண்டும். எதற்கும் நேரம், காலம், வேளை வரவேண்டும் என்று எங்கள் பாட்டி அறம்வளர்த்தாள் ஆச்சி அடிக்கடி சொல் வது இதற்காகத்தானோ, என்னவோ?

அரசியல் பிரமுகர்களைப் பேட்டி காண பேட்டி நேரம் என்ற ஒன்று உண்டு. உலகப் பெருந்தலைவர் நேருஜி, அகில உலகப் பெருந் தெய்வம் காந்திஜி ஆகிய இருவரும் இத்தகைய பேட்டி நேரங்களை ஒதுக்கிவிட்ட நிகழ்ச்சிகள் பல உண்டு.

தமிழக அரசின் முதல்வர் பேரறிஞர் அண்ணுதுரை அவர்களும் பேட்டி நேரக் கெடுபிடிக்கு பெரும் பாலும் ஆளாவதில்லை.

காலம் பொன்னுனதுதான். ஆனாலும் அந்தப் பொன்னுன வாய்ப்பை அருளியவர்கள் பொது ஜனங்கள் என்ற உண்மையை மறந்துவிடாமல், காலத்தின் நடப்புச் சக்திக்கு மதிப்புக் கொடுத்து, அதே நேரத்தில் எதிர்காலத்திலும் கண் வைத்துச் செயலாற்றும் விவேகம்தான் மேல்மட்டத்திலுள்ள அரசியல்வாதிகளை வாழ்த்த வல்லது. 'காலம் வரும், காத்திருப்போம்!' என்ற மந்திரம் காலத் தோடு ஒட்டி நடைமுறை வாழ்விலும் செயற் பட்டால்தான் அந்த வாழ்த்துதலுக்குப் பொருள் உண்டாகமுடியும். தேர்தல் தருணங்களிலே அர சியல் வாதிகள் ''காலம்தான் உங்களுக்கு நிரூபிக்க வேண்டும்!'' என்று காலத்தின் பேரில் பழியைப் போட்டுவிட்டு, பேச்சை முடிப்பார்கள். ஆனல் பொதுமக்கள் ரூபத்தில்தான் காலம் தீர்ப்பு வழங்கும்!

காலம் மாறிப் போய்விட்டதாகச் சொல் கிருர்கள். காலத்தின் பருவநிலைகளைச் சொல்ல வில்லை. காலநிலையைச் சொல்லியிருக்கவேண்டும். காலம் மாறவில்லை; நாகரிகம் மாறிவிட்டது. சந்திர மண்டல யாத்திரை காலச்சக்கரத்தின் சுழற்சிக்கு ஓர் அற்புதம். 'செக்' அரசியல் பூசலுக்கும் அதே காலச்சுழல்தான் பரிகாரம் காட்டவேண்டும்.

'இன்று போய், நாளை நின் தானையோடு மீண்டும் 'வருதி!' என்று இலங்கேஸ்வரனிடம் ஆணை பிறப்பித்தான் அஞ்சனவண்ணன். 'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் வரும்! என்றிருந்தார்கள் பஞ்சபாண்டவர்கள். அடிமைத்தளை அகல தவம் இருந்தவள் பாரதத்தாய்.

காலம் இடைவெளி பரப்பிச் சோதிக்கும் கட்டங்கள் இப்படிப் பல இருக்கின்றன.

காலம் ஒன்று.

ஆனால் கால நிலைகள் தேசத்துக்குத் தேசம் மாறுபடும். 'க்ரீன்விச் மெர்டியம்' மேலைநாட்டுக்கு ஒரு காலவரம்பு 'இண்டியன் ஸ்டாண்டர்ட் டைம்' என்பது நமக்குப் பழக்கமான காலவிளிம்பு. ஆனால் பட்டிக்காட்டில் தன் நிழலைத் தன் காலால் அளந்து, காலத்தை அளந்து விடுவார்கள்.

நேரம் பொன்னானது. ஆனால் தேர்தல்கால மேடைப்பேச்சுக்கள் வேட்பாளர்களுக்குப் பொன்னானது. பொதுமக்களுக்கும் அப்படித்தான் என்பதை அவர்கள் மறந்து விட்டு, பேசிக் கொண்டேயிருப்பார்கள். அந்தப் பேச்சுக்கு வெற்றி கிட்டி, சட்டமன்றம் அழைத்தால், அவர்களின் பேச்சுக்கு எல்லைகட்டி, அழைக்கும் மணியை இயக்கி, அமர வைத்து விடும் தர்மத்தை அவர்கள் மறந்து விடுகிறார்கள். வேலை நேரம் என்பது சட்டத்தின் விதி.. இப்போது கோயில் தெய்வங்களுக்கும் வேலை நேரம் ஏற்பட்டது. இவ்வுண்மையை தம்புச்

செட்டித் தெரு மறைக்க முடியாது. ஒருவேளை மார்கழித் திங்கள் இம்முறை தளர்த்தப்பட்டிருக்கலாம்!

நாளைக்குக் கிடைக்கும் பலாப்பழத்தைக் காட்டிலும் இன்று கிடைக்கும் களாப்பழமே சிறந்தது! —இது பழமொழி. இதில் காலத்தின் அருமையும் புனிதமும் இழைபாய்ந்திருக்கின்றன. 'இன்றே செய்!' என்பதன் பாவனையும் இதிலிருந்து உதயம் தான். 'காலமும் அலையும் யாருக்காகவும் காத்திருக்காது!'—ஆம்!

குழந்தைகள் பிறந்தால், தகப்பன்காரன் உடனே கடிகாரத்தைத்தான் பார்ப்பான்.

பெரிய அலுவலகங்களிலே 'டைம்கீப்பர்' என்றொருவர் இருப்பார். ஆனால், ஸ்ரீமான் எமதர்ம ராஜன்தான் 'ஒரிஜினல் டைம் கீப்பர்!'

காலம் அறிந்து உண்ணவேண்டும்; இது வைத்திய சாஸ்திரம். காலம் ஒரு டாக்டர். மனத் துன்பங்களை ஆற்றும் தர்மப்பிரபு அவன்.

"மக்கள் மதிப்பிடுவன வெல்லாம் வெகுவேகமாக மாறுதல்கள் அடைந்துவிடக் கூடிய காலத்தில்தான் நாம் வாழ்கிறோம். காலம்தான் சரியான சோதனைக் கருவியாகும். அதுதான், நான் செய்தது சரியா, இல்லையா என்பதைக் கடைசியில் முடிவு செய்யும்!" என்பது காந்தி வாக்கு ஆகும்.

தீரர் ஹிட்லர் உலக யுத்தத்திலே மாபெரும் வெற்றிகள் அடைந்து கொண்டிருந்த நேரம் அது.

அப்போது, அண்ணல் காந்தியடிகள் ஹிட்லருக்குக் கடிதமொன்று எழுதினர்; "ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட, நீங்கள் பலாத்காரமான வழிகளைக் கடைப்பிடித்து வருகிறீர்கள், ஆனல், நானே அறவழி முறையில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டு வருகின்றேன. இவ்விரு வழிகளிலே எதற்கு வல்லமை உண்டு என்பதைக் காலமன்றே உலகுக்கு எடுத்துரைக்கவேண்டும்?"— இது தான் கடிதம் கொண்ட அடக்கம்.

காலம் எனும் மணல் வெளியில் 'காலம்' உரைத்திட்ட முடிவை நாம் அறிந்தவர்கள் தாமே!

"அட்டகாசம் செலுத்தும் அவத்தைச் சடலத்துடன்
பட்டபாடு அத்தனையும் பகுத்தறிவது எக்காலம்?...
அஞ்ஞானம் விட்டே, அருள்ஞானத்து
எல்லைதொட்டு,
மெய்ஞ்ஞான வீடு பெற்று வெளிப்படுவது
எக்காலம்?..."

மெய்ஞ்ஞானப் புலம்பலின் இரு துளிகள் இவை!

மானுடராய்ப் பிறப்பது அரிது. அம்மானுடம் காலத்தை வென்று சிறப்பதே இனிது!

—★—

# பெயரில் எல்லாம் இருக்கிறது!

ஆங்கில நாட்டின் மிகப் புகழ்கொண்ட நாடகாசிரியரான மிஸ்டர் ஷேக்ஸ்பியர் இருக்கிறார் பாருங்கள், அவர் ரொம்பவும் அவசரக்காரராகத் தான் இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், பெயரில் என்ன இருக்கிறது?'' என்று அபாண்டமான ஒரு கேள்வியை அவர் திருவாய் மலர்ந்திருப் பாரா?

நான் மட்டும் அவர் காலத்தில் வாழ்ந்திருந் தால், அவருக்கு ''பெயரில் என்னதான் இல்லை, ஸார்? பெயரில் எல்லாம்தான் இருக்கிறது!'' என்று பதில் கேள்வி விடுத்து, இப்படிப் பதிலும் உரைத் திருப்பேன்.

ஆம்; பெயரில் எல்லாம் இருக்கிறது. என் பேச்சைத் தயைசெய்து நம்புங்கள். இல்லையேல், உங்கள் பெயரை ஒரு பிரச்சனையாக்கி, ஓர் ஆராய்ச்சி நடத்திப் பாருங்கள். அப்புறம் தன் போக்கில் என் வழிக்கு வந்து சேருவீர்கள். பெயர் சூட்டும் விழாவுக்கு ஐந்து, பத்து செலவானாலும், அதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் ஆயிரம், ஆயிரம்! பெயர் என்ற ஒரு வழி இல்லாவிட்டால், தமிழக அரசின் சீட்டுப் பரிசுப் போட்டியில் யாருக்கென்று, பரிசளிப்பதாம்?

நண்பர்களை இனம் கண்டுகொள்ள இந்தப் பெயர் இனம் உதவும், கடன் கொடுத்தவர்களுக்கும்

கடன்பட்டவர்களுக்கும் இந்தப் பெயர்கள் 'கோர்ட்' வரை செல்லும். காதலுக்கும் பெயர் அவசியம், காதலின் துறைக்கும் அவ்வாறே.

வேலைக்கு மனுப் போட்டேன். பாரத்தில் முதலில் என் பெயர், அப்புறம் ஊரின் பெயர் என்று இப்படிப் பல வினாக்கள். வேலை கொடுப்பவர்களையும் பெயர் ஊர் கேட்க வேண்டுமென்று எனக்கு ஓர் ஆசை ரொம்ப நாளாக உண்டு. அவர்களைக் கேட்டால், கேட்ட வேலை போய் விடுமே!

''ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது!' என்று நாட்டுப் புறங்களிலே ஒரு வாசகம் சொல்வார்கள். ஊரையும் பேரையும் சொல்லாதவர்கள், சொல்லப் பயப்படுகிறவர்கள் சமுதாய விரோதிகள் என்பது அடியேனின் 'தைரியமான' அபிப்பிராயம்.

பத்திரிகைகளிலே 'கதைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனையே!' என்று ஒரு குறிப்புக் காணப்படும். ஆனால் எனக்கென்னவோ, எங்கள் பகுதிகளிலுள்ள ஊர்களையும், பெயர்களையும் அப்படி அப்படியே உபயோகப்படுத்துவதிலே எப்போதுமே தணியாததோர் ஆசை. கதை எழுதவேண்டுமென்ற துடிப்பை உண்டாக்கியதே என் பிறந்த மண்தான். 'பூவை' என்று எனக்கு ஒரு புனைப் பெயர் சூட்டியவர் அமரர் கல்கி அவர்கள். அவர் பெயரிட்ட பாக்கியத்தால், இலக்கிய உலகிலே ஆறுமுகத்தை மறந்து விட்டார்கள். 'பூவை'யை

மட்டும் மறந்துவிடவில்லை. என் கதை என் ஊரை நினைக்க வைக்கிறது. ஆதியில் பூவுற்றகுடி என்று தான் பெயர். பின்னர்! பூவைமாநகர் ஆனது. 'சரித்திரம் சம்பந்தப்பட்ட ஊரா?' என்று பலர் இன்னமும் கேட்கிறார்கள். பெயர் அவ்வளவு 'கனம்' ஆனது. பூந்தமல்லிக்காரரர் சிலரும் இப்போது 'பூவை' வாசிகளாகி வருகின்றனர். ஆனால் 'ஒரிஜினல் பூவை'யை இனம் காண அறிந்தவர்கள் அல்லவா நீங்கள்! ஒரு விண்ணப்பம், 'ஐஸ்' வைப்பதாக மட்டும் கருதி விடாதீர்கள்! காரணம் நான் 'ஐஸ்' வியாபாரியல்லன்' ஆஹா, 'ஐஸ்'! எவ்வளவு குளிர்ச்சியான பெயர்!

'ஆரணி' என்றால் அந்நாளிலே எனக்குக் கொள்ளை ஆசை. ஆமாம், ஆரணிப் பட்டைச் சொல்லவில்லை, ஆரணியாரைத்தான் சொல்லு கிறேன். அதேமாதிரிதான் 'மதுரை' என்றால் எனக்கு ஒரு ரசனை. ஆமாம், மதுரை மணி அய்யரையே சுட்டு கிறேன். காஞ்சி என்றால் பெண்ணினத்துக்குப் பட்டும், பக்தர் குழாமுக்கு காஞ்சிக் கடவுளும் 'பெரியவர்களும், அரசியல் சார்புடையோர்கட்கு காஞ்சித் தலைவரும் நினைவில் எழுவது இயல்பு.

நம் ராஜதானிக்குச் சென்னை என்று பெயர். அது இப்போது 'தமிழ் நாடு' என்று ஆகி விட்டது. பெயர் மாற்றத்துக்கு இடையே ஒரு சரித்திரம் கதை சொல்லும் நாராயணசாமி 'நெடுஞ்செழியன்' ஆனார்; சூர்ய நாராயண சாஸ் திரிகள் 'பரிதிமாற்கலைஞர்' ஆனார். ராமனுதன்

'தமிழ்வாணன்' ஆனார். முத்தையா-கண்ணதாசன் ஆனார். பெயர் வெறும் பெயர் மட்டுமல்ல; அது ஒரு சரித்திர வாழ்க்கைக்கு உரிய ஒரு வாழ்க்கை அது. சொல்லப்போனால் உலக உருண்டையே ஒரு பெயர்ப்பட்டியலின் விசித்திரத் தொகுதியே யாகும். பெயர் வைக்கப்படாத ஜீவன் ஏது? ஜடம் ஏது? நோய்தான் ஏது?

இப்போது உங்களுக்கு ஒரு புதிய பெயர் உலகினைக் காட்டப் போகிறேன். இந்த உலகில் தமிழகத்தின் எழுத்தாளர்களின் பெயர்களை நீங்கள் மீண்டும் சந்திக்கப் போகின்றீர்கள்.

1961ஆம் ஆண்டில் வெளியிட்ட 'உமா' பொங்கல் மலருக்கென நான் தயாரித்த புதுமுறைப் பட்டியல். இந்த விசித்திரப் பட்டியலை சம்பந்தப் பட்டவர்கள் 'மெல்லியதாகவே' எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஓர் எச்சரிக்கையையும் கொடுத்திருந்தேன். இப்பட்டியலின் பெயர்கள், பெயர்களின் அழகு, பெயர்கள் வரிசைப் படுத்தப் பட்டிருக்கும் பாங்கு, அப்பெயர்களின் பின்னே தொனிக்கும் மெல்லிய நகைச்சுவை-முதலிய பல் வேறு தரப்பட்ட சுவைக் கணுக்களையும் நீங்கள் ரசிக்கக் கூடும். அப்புறம் நீங்களும் என்னுடன் சேர்ந்து கொண்டு, ''ஆமாம்' பெயரில் எல்லாம் இருக்கிறது! என்ற நடைமுறை உண்மையை நயந்துரைப்பீர்கள்.

சரி படியுங்கள் :

**ஊர் எழுத்தாளர்கள் :**

வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்பு சாமி முதலியார், பம்மல் சம்பந்த முதலியார், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, வேலூர் கந்தசாமிக் கவிராயர், கொத்தமங்கலம் சுப்பு, உடுமலை நாரா யண கவி, பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், பாபநாசம் சிவன், மயிலை சீனி வேங்கடசாமி, முகவை ராஜமாணிக்கம், கரந்தை சண்முக வடி வேலு, ஆம்பூர் கேசவன். உசிலை சோமநாதன், வலம்புரி சோமநாதன், துறையூர் மூர்த்தி, கோமல் சாமிநாதன், தாழையடி சபாரத்னம், தஞ்சை தாமு, பரலி நெல்லையப்பர், தில்லை வில்லாளன், தில்லை மறைமுதல்வன், லால்குடி கிருஷ்ணமூர்த்தி, கணியூர் சீனிவாசன், காஞ்சி அமிழ்தன், ஆங்கரை ஜெயராமன், அங்கமங்கலம் குப்பு, திருச்சி வாசு தேவன், திருவாரூர் தங்கராசு, கல்லல் ராம நாதன், மதுரை திருமாறன், ஆனை குஞ்சிதபாதம், கோவை அய்யாமுத்து, கோவை இளஞ்சேரன். தேவநகர் இளஞ்சேரன், கடலூர் அரிராமன், புத்தனேரி சுப்பிரமணியன், காஞ்சி மணிமொழியார் கோம்பை சுருளியாண்டிப்பாவலர், காட்டூர் கண் ணன், அழகாபுரி அழகப்பன். பட்டுக்கோட்டை குமாரவேல், அறந்தை நாராயணன், நெற்குப்பை ராமசுப்ரமணியம், மஞ்சேரி ஈஸ்வரன், மயிலை சிவமுத்து, விருதை ராமசாமி, திருப்பத்தூர் குப்புச் சாமி, ஆரூர் தாஸ், தஞ்சை ராமையாதாஸ், சாலை இளந்திரையன், ஆலங்குடி சோமு, வேப்பத்தூர் கிட்டு, பண்ணுருட்டி பரமசிவம், ஸ்ரீரங்கம் ராம

கிருஷ்ணன், ஸ்ரீரங்கம் நரசிம்மன், சேத்தூர் கூத்தன், பூவை அமுதன், பூவை செங்குட்டுவன். பூவை ஆறுமுகம்.

தலை எழுத்து எழுத்தாளர்கள் :

திரு. வி. க., வ. ரா., ரா. கி., மு. வ., என். ஆர்., சொ. வி., ம. பொ. சி., ல. ச. ரா., எஸ்.ஏ. பி., க. நா. சு., எல். ஆர். வி., அ.சீ.ரா., ஆர்.வி., து. ரா., கி. ரா., க. ரா., மா. ரா., சு. ரா., ப. ரா., வை. சு., ந. ரா., சு. வே., பி.வி.ஆர்., டி. வி. எஸ்., கி. வா. ஜ., ஆர்.எம்., சோம,லெ., வி. ஆர். ஜி., சுப. ஸ்ரீ, கு.சா. கி., கா. ஸ்ரீ. ஸ்ரீ., கு. மா. பா., மு. க., பி.எஸ்.ஏ., வி.எஸ் எஸ்., நா. பா., ஜே. ஆர். எஸ்., பி. எஸ். எஸ்., தி. ஜ. ர., த. நா. கு., எஸ். வி. வி., தெ. பொ. மீ., ராய. சொ., எம். ஜி. ஆர்., ஆர். எஸ். எஸ்., எஸ். வி. எஸ்,, டி. எஸ். கே., வை. மு. கோ., ஈ. வே. ரா., கு. ப. ரா., த.ரா.ரா., எம்.வி.வி., வி. எஸ். எஸ்.

பெயர் எழுத்தாளர்கள் :

| | |
|---|---|
| பி. வி. அகிலாண்டம் | அகிலன் |
| வி. கோவிந்தன் | விந்தன் |
| ஆர். மகாதேவன் | தேவன் |
| எஸ். எஸ். கோபாலகிருஷ்ணன் | கோபு |
| எம். பி. சோமசுந்தரம் | சோமு |
| எஸ். வி. எஸ். மணியன் | மணியன் |
| ஏஸ். நீலமேகம் | நீலம் |
| ஸோமாஸ்கந்தன் | ஸோமாஸ் |

| | |
|---|---|
| கே. அருணாசலம் | அருண் |
| சா. விசுவநாதன் | சாவி |
| ர. திருஞானசம்பந்தன் | ரதி |
| ஜி. உமாபதி | பதி |
| சிதம்பர ரகுநாதன் | ரகுநாதன் |
| பெரியசாமி தூரன் | தூரன் |
| வேங்கடரமணி | வேணி |
| த. நா. ஸேனபதி | ஸேனு |
| த். நா. குமாரஸ்வாமி | நாகு |
| ஜானகி | கினஜா |
| தீர்த்தாரப்பன் | தீபன் |
| நல்லதயாபன் | தாபன் |
| சுப்புரத்தினதாசன் | சுரதா |
| கிருஷ்ணம்மாள் | கிருஷ்ணு |

**இங்கிலிஷ் எழுத்தாளர் :**

ஜெகசிற்பியன் - ஷேக்ஸ்பியர் திரிபு

**பித்த எழுத்தாளர்கள் :**

புதுமைப்பித்தன், இளமைப்பித்தன், சிறுகதைப்பித்தன், தமிழ்ப்பித்தன், பாரதிப்பித்தன், கலைப்பித்தன் 1, 2 புரட்சிப்பித்தன், தொழிற்பித்தன், தண்டமிழ்ப்பித்தன், கமலப்பித்தன்.

**பாரதி எழுத்தாளர்கள் :**

நையாண்டி பாரதி, அமுதபாரதி, பாரதிமோஹன், பாரதிப்பித்தன், பாரதி தங்கராஜன், செல்வ பாரதி.

புலவர் எழுத்தாளர்கள் :

நக்கீரன், கபிலன், கீரன், புகழேந்தி,
இளங்கோ, அகத்தியன், வால்மீகி,
சாண்டில்யன், வள்ளுவன்.

யோகி எழுத்தாளர்கள் :

யோகி சுத்தானந்தர், மஹரிஷி ச.து.சு.யோகி,
கௌந்தி.

மார்க்கண்டேய எழுத்தாளர் : சிரஞ்சீவி.

தாசன் எழுத்தாளர்கள் :

பாரதிதாசன், வாணிதாசன், கண்ணதாசன்,
காந்திதாசன், சக்திதாசன், கம்பதாசன்.
காளிதாசன், சுப்புரத்னதாசன், கல்கிதாசன்,
அன்னைதாசன், புரட்சிதாசன், வேணிதாசன்.

பறவை எழுத்தாளர்கள் :

கரிச்சான், கரிச்சான்குஞ்சு, அன்னம், மைனு,
ஜடாயு.

'சென்ட்' எழுத்தாளர் : அத்தர்

'ஸீஸன்' எழுத்தாளர் : இளவேனில்

பூ எழுத்தாளர் :

செந்தாமரை, ரோஜா, அல்லி. முல்லை.

காற்று எழுத்தாளர் : தென்றல்.

**நெருப்பு எழுத்தாளர் :** *'தணலன்'*

**மதி எழுத்தாளர்கள் :**

*மதியழகன். மதிவாணன், மதிமுகன், மதி.*

**சூரிய எழுத்தாளர் :** *'தினகரன்'*

**கொடை எழுத்தாளர் :** *பாரி, இளம்பாரி.*

**நட்சத்திர எழுத்தாளர்கள் :**

*மகரம், அக்ஷயம், மிதுனம், கேட்டை, கடகம். பூரம், பரணி, கும்பம், அவிட்டம், ரேவதி.*

**பொன் எழுத்தாளர் :** பொன்வேந்தன்

**'சின்ன' எழுத்தாளர் :** *சின்ன அண்ணாமலை*

**பெரிய எழுத்தாளர் :** *'காஞ்சிப் பெரியவாள்'*

**ராஜ் எழுத்தாளர்கள் :**

*விக்கிரமன், நெடுஞ்செழியன், கரிகாலன், பரதன், மாறன் 1, மாறன் 2, நெடுமாறன், இராஜேந்திரன். இளம்வழுதி, சேரலாதன், துஷ்யந்தன், செங்குட்டுவன், சாலிவாஹனன், சேரன், சித்தார்த்தன், ராகுலன், அசோகன்.*

**புராண எழுத்தாளர்கள் :**

*இந்திரஜித், ஜாம்பவான், குஹன், வஸந்தன், இந்திரன், வாலி, மயன், இராவணன், விபீடணன், நாரதர், சசிதேவன், தனஞ்சயன், சசிதேவி. காண்டீபன், துரோணன், பீஷ்மன்,*

அசுவத்தாமன், வாசவன். பகீரதன். கௌசிகன் ஆதிசேஷன், லக்ஷ்மணன்.

கடவுள் எழுத்தாளர்கள் :

சேவற்கொடியோன், பிறைசூடி பெருமாள் மணிவண்ணன். கஜமுகன் மறைநாயகன் கார்த்திகைபாலன், மஹேஸ்வரன்.
ஜெயகாந்தன், மாயாவி வையவன். முகுந்தன், இளையபிரான் மாயன் வானவன் ஆதிசேஷன், காந்தன் நந்தன், ஸ்ரீவத்ஸன், மயில்வாகனன், செந்தில்வேல், இளங்கார்வண்ணன். வேலன், கருப்பையன், வேலவன், கூடல்ழகன். பரமன், கணேசன், பிரம்மம், சிவம். கோகுலன், பரணீ தரன். சுப்பு ஆறுமுகம், கோபாலகிருஷ்ணன்.

ப்ரிய எழுத்தாளர்கள் :

குகப்ரியை, ராமப்ரியா. ஸ்ரீப்ரியா, சிவப்ரியா. நாதப்ரியை, ரதிப்ரியை.

தமிழ் எழுத்தாளர்கள் :

தமிழ் அழகன், தமிழ்த்தாசன், தமிழ் ஒளி, தமிழ்க்கோவன், தமிழ்மணி, தமிழ்மாறன், தமிழ்வாணன், தமிழ்முடி தமிழ்ச்செல்வன், தமிழ்த்தும்பி.

மணி எழுத்தாளர்கள் :

செல்வமணி குண்டுமணி, மணிசேகரன்.
தங்கமணி, கண்மணி சூடாமணி, ராஜாமணி,

ஜெயமணி, கலைமணி, இறைமுடிமணி,
அன்புமணி, மணியன், செல்வமணி நீலமணி.

ஔவை எழுத்தாளர் :

ஔவை துரைசாமிபிள்ளை, ஔவை சண்முகம்.

பேர் ஆச்சர்ய எழுத்தாளர்கள் :

நாடோடி காடோடி, பரதேசி வழிப்போக்கன்
ஊர்சுற்றி உள்ளூரான் நவீனன், ரஸவாதி,
வாதூலன் தூமகேது மேதாவி கிண்கிணி,
சூடாலை வில்லன், லல்லு பகடி, நசிகேதன்,
வாண்டு கொனஷ்டை, வாண்டுமாமா, சுரபி,
கோணல் சீவல் அநுத்தமா மஹி,
மெச்சினூர்க்கினியன் நாணல், புஷ்யன்,
கர்நாடகம் சுந்தா சிட்டி துமிலன், பூரி,
'டீஸார்', லெமன், தூன், ரசம்.

வெளிச்ச எழுத்தாளர்கள் : ஜோதி, கதிர்.

தம்பதி எழுத்தாளர்கள் :

கமலா விருத்தாசலம், கோமதி நாகராஜன்,
ராஜம் கிருஷ்ணன், சரோஜா ராமமூர்த்தி,
சௌந்திரம் கைலாசம் கோமதி ஸ்வாமிநாதன்
சரோஜினி ஸ்ரீராம் கோமதி சுப்ரமணியம்,
பாக்கியம் ராமசாமி சகுந்தலா ராஜன்,
வசுமதி ராமசாமி,
கனகசவுந்தரி இளந்திரையன்,
ராஜம் வேம்பு, ருக்மணி சாம்ராஜ்.

ருக்மிணி பார்த்தசாரதி,
மீனுட்சி ராமகிருஷ்ணன், ராஜம் ராமமூர்த்தி,
ராஜலட்சுமி ராமமூர்த்தி,
சரஸ்வதி தியாகராஜன், கௌசல்யா சம்பத்.
ஹேமா ஆனந்ததீர்த்தன். நீலா ராமமூர்த்தி,
லட்சுமி சுப்ரமணியம், நடராஜன் ராஜேஸ்வரி.

ராக எழுத்தாளர்கள் :

பிலஹரி பைரவி, சாவேரி, ஸ்ரீரஞ்சனி, மல்லாரி

கதாபாத்திர எழுத்தாளர்கள் :

ஜடாதரன். குமுதினி, ஸூபா, மாதவி,
நாகநந்தி ராஜ்யஸ்ரீ.

நினைவுப்பெயர் எழுத்தாளர்கள் :

திரு. வி. க + கிருஷ்ணமூர்த்தி = கல்கி
சுப்ரமணியம் + கல்கி = சுகி

நகை எழுத்தாளர் : கணையாழி.

இதய எழுத்தாளர்கள் :

இருதயநாத். இதயவாசி. இதயன்,
இதயவேந்தன்.

ராஜதந்திர எழுத்தாளர் :

மாஜினி சாணக்கியன்.

அப்பா எழுத்தாளர்கள் : வள்ளியப்பா, செல்லப்பா.

கள் :

ராமையா 2, அய்யாபிள்ளை, துளசி ஐயா, முத்தையா.

ார்கள் :

ம்மா, ராஜம்மா, தங்கம்மா, ம்மாள், சரஸ்வதி அம்மாள், சாவி ி அம்மாள்.

கண்ணன் எழுத்தாளர்கள் :

வல்லிக்கண்ணன், தாமரைக்கண்ணன், கன்னிக்கண்ணன்.

காட்டு எழுத்தாளர்கள் : வனமாலி வனமாலிகை.

'ஜி' எழுத்தாளர்கள் : ராஜாஜி, பாலாஜி.

மணாள எழுத்தாளர்கள் :

தாமரைமணாளன் குறத்திமணாளன், வள்ளிமணாளன் இராதாமணாளன்.

போலீஸ் எழுத்தாளர் : ஜாவர்

அறிஞர் எழுத்தாளர் : அண்ணாதுரை.

டாக்டர் எழுத்தாளர்கள் :

டாக்டர் லட்சுமணசாமி முதலியார்
டாக்டர் மு. வரதராசனார்
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
டாக்டர் மா. ராசமாணிக்கம்

டாக்டர் அ. சிதம்பரநாதன்
டாக்டர் சோமசுந்தர பாரதி
டாக்டர் ஸர். சி. பி. ராமசாமி
டாக்டர் வே. ராகவன்

பொட்டு எழுத்தாளர் : குங்குமம்

அடிகள் எழுத்தாளர்கள் :

மறைமலை அடிகள் குன்றக்குடி ...ள்
ஈழத்து அடிகள்.

கலைஞர் எழுத்தாளர் : மு. கருணாநிதி

இப்போது சொல்லுங்கள், பார்க்கலாம் அல்ல, கேட்கலாம்!

பெயரில் எல்லாம் இருக்கிறதல்லவா ?

ஆம்; பெயரில் எல்லாம்தான் இருக்கின்றது !

—★—

# "வாழ்க" - வாழ்க!

தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணுதுரை அவர்கள் அண்மையில் உடல் நலம் கெட்டு, சிகிச்சையின் காரணமாக அமெரிக்க நாட்டுக்குப் பயணப்பட்ட போது, அவரது இல்லத்திலும் ஆகாய விமான நிலையத்திலும்

''அண்ணு வாழ்க !'' என்ற குரல்கள் விண்ணைமுட்டி எழும்பின அல்லவா ? அத்தனை குரல்களின் இதயங்கள் செய்த பிரார்த்தனைகளின் நல்வாழ்த்துக்கள் அண்ணுவைக் காப்பாற்றிவிட்டன. திரு. அண்ணுதுரை அறுபதாவது பிறந்த நாள் விழாவுக்கும் அவ் வாழ்த்தொலிகள் ஒரு புதிய சரித்திரத்தை ஏற்படுத்திக் காட்டிவிட்டன. டாக்டர் மில்லர் அவர்களை வாழ்த்தி வந்த செய்திகள் மிகுதியாம்.

வாழ்க்கை ஒரு விளையாட்டு. அவ்விளையாட்டின் மூலம் ஆண்டவன், அவனது நகல் மனிதன்.

மனிதனைப் படைக்கிருன் கடவுள்.
இது உண்மை.
கடவுளைப் படைக்கிருன் மனிதன்.
இது பொய்யல்ல.

கடவுளும் மனிதனும் அதாவது, இறைமைப் பண்பும் மனிதாபிமானச் சக்தியும் கூடியதே இம் மண் வாழ்வுக்கு—வாழ்வின் கூத்துக்கு முதல் வாழ்த்துத் தெரிவிப்பவன் ஆண்டவன். அதற்கு நன்றிக் கடனுகக் கடவுளை வாழ்த்துகிருன் மனிதன். ''அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!''— போதாதா புகழ் மாலைகள் !

'அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் இறைவனின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகின்கண் நிலைத்து வாழ்வார் !'—'கடவுள் வாழ்த்து' என்கிற முதல் அதிகாரத்தில் வள்ளுவம் இவ்வாறு செய்தி சொல்கிறது.

படைப்பின் தத்துவமே வாழ்த்துக்கு மூலாதாரம்.

வாழ்த்துக்கள் பரஸ்பரம் அன்புப்பரிவரித்தனே ஆகிவிட்டன. தீபாவளி, பொங்கல், ஓணம், கிறிஸ்துமஸ், ரம்ஸான் என்று இப்படிப்பட்ட பல்வேறு சமயப் பெருவிழாக்களுக்கு 'வாழ்க!' ஒலிகள் ஒரு புதிய தெம்பையும் ஒரு நூதனமான உணர்வையும் நல்குகின்றன.

எங்கள் பூவைமாநகரிலே வதுவை விழாக்களில் 'மணம் இடுதல்' என்ற நிகழ்ச்சியில் புது மணத் தம்பதிகளை வாழ்த்தி, அட்சதை இட்டு, திருநீறு பூசி ஆசிகூறும் சடங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 'நலங்கு' நிகழ்ச்சியில், எங்களூர் மகாவித்துவான், அமரர் வை. மீ. சிவசுப்பிரமணியச் செட்டியார் இயற்றிய வாழ்த்துப் பாடல்கள் பாடப் பெறும். அப்பாடல்களிலே எங்களூர்த் தெய்வங்களை வேண்டி, அவ்வேண்டுதலின் பயனாக புதிய மணத்தம்பதியரை வாழ்த்தும் பண்பு மிகவும் சிலாகிப்பதற்குரியது.

திருமண அழைப்புக்கள் வந்துவிட்டதென்றால், உடனே நாம் நேரில் சென்று மணமக்களை வாழ்த்துகிறோம். நேரில் செல்ல இயலாவிடில், தந்தி மூலம் வாழ்த்துகிறோம். எட்டாம் எண் தந்தி இதற்கென்றே ஒதுக்கப்பட்டது.

என்னுடைய இந்தத் திருமணத்திற்கு என்னையும் அகிலாண்டத்தையும் வாழ்த்தி, டாக்டர்

இராதாகிருஷ்ணன், நேருஜி, இந்திராகாந்தி, காமராஜ், ஈ. வே. ரா., ராஜாஜி, அண்ணுதுரை, எம். ஜி. ஆர்., சிவாஜி, எஸ். எஸ். வாசன், எஸ்: ஏ. பி. என்று இப்படி ஏராளமான வாழ்த்துக்கள் வந்த இந்த விஷயத்தை இன்னமும் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்றால், வாழ்த்துக்களுக்குள்ள மகிமையை நீங்களே உணர்ந்து கொள்ள முடியும். நான் தம்பட்டமடித்துக் கொள்ள விரும்பாதவன் என்னும் உண்மையை உணரவல்ல ஒவ்வொருவருக்கும்கட்டாயம் என்னுடைய வாழ்த்துக்கள் கிட்டும்.

வாழ்த்துக்கள் வயதைக் கூட்டும் என்பதாக தத்துவவாதிகள் குறிப்பிடுவார்கள். இதன் நிமித்தமே பிறந்த நாள் வைபவங்களும் நடக்கின்றன. இம்மாதிரியான பிறந்த நாள் விழாக்களை திரையுலகப் பெண் நட்சத்திரங்கள் கொண்டாடும்போது அந்த அழைப்புக்களில் தங்களது பிறந்த நாள் விழாவின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டால் நமக்கெல்லாம் ஒரு புதிய செய்தி கிடைக்குமே !

திருமண வாழ்த்துப் பத்திரங்கள் இப்போதெல்லாம் 'ரெடிமேடாக' அச்சடித்து விற்கப்படுகின்றன. அவை இயம்பும் உவமைகளும் பொருள்களும் மங்கலம் நிறைந்தவை. கட்சிக் கண்ணோட்டமும் அடிச்சரடாக அமைவதும் விலக்கு விதியல்ல !

பண்டைப் புலவர்கள் மன்னர்களை வாழ்த்தி, ''வாழ்க நின் கொற்றம் !'' என்று பாப்புனைந்து, பரிசு பெற்ற நடப்புக்களை நம் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டும்.

'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே !'

இவ்வாறு தமிழ்மொழி வாழ்த்துப் பாடுகிறார் பாரதியார். தமிழை இன்னும் சிறப்பாக வாழ்த்து கிறார் பாரதிதாசன். 'எங்கள் பிறப்பிற்குத் தாயாக விளங்குவது தமிழ் !' என்கிறார்.

• தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களுடன் சேர்ந்து நாமும் தமிழ்த்தாயைப் போற்றி வணங்கு வோம்.

"இயற்கையிலே கருத்தாங்கி,
இனிமையிலே வடிவெடுத்து
செயற்கைகடந் தியலிசையில்
செய்நடமே வாழியரோ !
பயிற்சிநிலப் பயிர்களெல்லாம்
பசுமையுற ஒளிவழியே
உயிர்ப் பருளும் திறம்வாய்ந்த
உயர்தமிழ்த்தாய் வாழியரோ!..."

கச்சேரிகளில் 'மங்களம்' பாடுவது முன்னைப் பழக்கம். இப்போதெல்லாம் 'வாழிய செந்தமிழ் !' தான் பாடப்படுகிறது. என்னுடைய தொடர்கதை களின் இறுதியில் 'சுபம்' என்ற எச்சரிக்கைக்குப் பதிலாக 'வாழிய செந்தமிழ்' என்று புதுமையாக 1954 ஆம் ஆண்டிலேயே,போட்டிருந்தேன். அதற்கு இலக்கிய ஆர்வலர்களின் வாழ்த்துக்களும் கிடைத்தன.

நம்நாட்டு வாழ்த்து; 'வாழிய செந்தமிழ்!'
நம் பாரத வாழ்த்து; 'ஜனகண...!'